Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்

உளவியல் ஆய்வுக் கட்டுரைகள்

1008-29

அரங்க.நலங்கிள்ளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

oundation

urukul Ka

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

100029

"Presented free of cost with compliments from the Central Institute of Indian Languages (Government of India) Mysore 570006".

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

DONATION
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்

உளவியலாய்வுக் கட்டுரைகள்

100829

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल काँगड़ी विश्वविद्यालय

டாக்டர் அரங்க. நலங்கிள்ளி

வாணிதாசன்
பதிப்பகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Literature & Psycho analysis
(Essays in Psycho analytic criticism to the Study of Literature)

R. Nalangilli—1992

© Author

First Published—1992

Published by

VANIDASAN PATHIPPAGAM
D-5, Faculty Quarters
Pondicherry University Campus
Kalapet, Pondicherry-605 014

Printed in Rasakili Printers, Madras-20

Price Rs. 20-00

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்:
184, பிராட்வே, சென்னை-600 001.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்புரை

டாக்டர் பொற்கோ
தமிழிலக்கியத்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

'இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்' என்ற தலைப்பில் டாக்டர் அரங்க. நலங்கிள்ளி அவர்கள் உருவாக்கியுள்ள இந்த நூல் இலக்கிய ஆய்வுலகில் ஒரு புதிய முயற்சி, உளவியல் நோக்கில் நிகழ்த்தப்பட்டுள்ள இந்த ஆய்வு சிலருக்கு முற்றும் புதுமையானதாக இருக்கக்கூடும்.

மனித சமுதாய வரலாற்றையும் படைப்பாளனின் மனப் பாங்கையும் புரிந்துகொள்ளுவதற்கு இத்தகைய ஆய்வுகள் மிகவும் இன்றியமையாதவை என்றே கூறலாம். இந்த நூலில் காணும் ஐந்து கட்டுரைகளும் உளப்பகுப்பாய்வு எந்த முறையில் இலக்கிய ஆய்வுக்குப் பயன்படக்கூடும் என்பதை மிகத் தெளிவாகவே உணர்த்துகின்றன. முறை யாகவும் விரிவாகவும் ஆய்வு நிகழ்த்தித் தெளிவாகத் தம் ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தியுள்ள டாக்டர் அரங்க. நலங்கிள்ளி அவர்கள் பாராட்டுக்குரியவர்.

இப்படிப்பட்ட இலக்கிய ஒப்பாய்வுகள் ஊக்குவிக்கப் படும் பொழுது இலக்கிய ஆய்வுப் பரப்பும் படைப்பிலக் கியப் பரப்பும் விரிவு பெறும். அப்படி இந்தப் பரப்புகள் விரிவு பெறும்பொழுது இலக்கியத் தரமும் உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. டாக்டர் அரங்க. நலங்கிள்ளியின் ஆய்வு களை முதன் முறையாகப் படிப்பவர்கள் விருப்பு வெறுப் பின்றி அமைதியோடும் நடுநிலையோடும் படிக்க வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன். புதிய உண்மைகளைக் கண்டறிந்து கூற வேண்டும் என்று அவருக்கு இருக்கின்ற நாட்டம் இந்த நூலில் தெளிவாகவே வெளிப்பட்டிருக்கிறது. அந்த நாட்டம் பாராட்டத்தக்கது.

மேலும் இத்தகைய ஆய்வுகளை நிகழ்த்தி இலக்கிய ஆய்வுக்கு வளம் சேர்க்கும் வகையில் டாக்டர் அரங்க. நலங்கிள்ளிக்குத் தமிழ் உலகம் ஊக்கம் அளிக்கும் என்று நம்புகிறேன். கவிஞர் வாணிதாசனார் அவர்கள் அன்பு மகன் சிறந்த இலக்கிய ஆய்வாளராக வளர்வது கண்டு தமிழுலகம் பெருமையும் மகிழ்ச்சியும் எய்தி அவரைப் பாராட்டும் என்றும் நம்புகிறேன்.

சென்னை-5 பொற்கோ
18-5-92

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

டாக்டர் நா. நடராசன்
விரிவுரையாளர்,
ஆங்கிலத்துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுவை

உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறு உரைக்காமல் அதை உள்ளாந்திரமாய் மறைத்து வெளிப்படுத்தும் பழக்கத்திற்கு மனிதகுலம் தன்னை அறிந்தோ அறியாமலோ தொடக்க முதல் உட்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே அதன் எச்செயலும் இரட்டிப்பு அர்த்தத்தைப் பெறுகிறது. பிராய்டு இலக்கியப் படைப்பை மனித நடத்தையாகப் பாவித்து அதை ஓர் இரட்டைப் பிரதியாக (Double text) கருதுகிறார். இது ஒரு சிக்கலான பிரச்சினையாகும். ஏனென்றால் அவர் ஓர் இலக்கியப் படைப்பை நேர் or மேல் பிரதி (Patent text) என்றும் மறை பிரதி (Latent text) என்றும் கணிக்கும்போது ஏதோ இருவிதப் பிரதிகள் அங்கு இருப்பதாகப் பொருள் கொள்ள முடியாது. ஏனென்றால் நேர் பிரதியே இன்னும் சரியாகச் சொன்னால் நேர் பிரதி மூலமே மறை பிரதியை — பொருளை — உணர முடியும். மேல்நிலை அர்த்தம் உண்மை யான அர்த்தத்தின் வாகனமாகின்றது. இப்படி மேலோட்ட மான பொருளின் மூலம் உள்ளாந்திரப் பொருளைச் சுட்டுவது என்பது மனித நாகரிகத்தினைத் தோலுரித்துக் காட்டுவதா கும். அதன் மேல் பூச்சுகளை அகற்றிவிட்டு அது அப்பட்ட மான அம்மணத்தில் தரிக்கப்படுகின்றது. இவ்வப்பட்டமான — பட்டவர்த்தனமான — உண்மை தேவையா தேவையில்லையா என்பது வேறு விஷயம்.

பால் சக்தியால் மனிதன் ஆக்கப்படுகிறான், அழிக்கப் படுகிறான் என்பது பிராய்டியம். ஆழ்நிலையில் மறைந் திருந்து மனிதனை ஆட்டிப் படைக்கும் இப்பால் சக்தி சமூகத்திற்கு ஏற்ற / உகந்த வெவ்வேறு வடிவங்களைப் புனைந்து வெளியே வருகின்றது. உதாரணமாகச் சொன் னால் ஞானச் சக்திக்கும் ஆத்மச் சக்திக்கும் அடித்தளமே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப் பால்சக்திதான். இவைகள் எல்லாம் இப்பால் சக்திக்கு பயந்து எழுப்பிய பாதுகாப்பு வளையங்களாகும். மனித நாகரிகம் உருவாக்கிய இப் பாதுகாப்பு வளையங்களை நீக்கி விட்டு மனிதனை — அவன் செயலை — ஆழ்நிலையில் அடையாளம் காட்ட முயல்கிறது அரங்க. நலங்கிள்ளியின் இவ்வுளவியல் கட்டுரைகள்.

''நெற்றிக்கண் படிமம்'' என்ற கட்டுரையில் எப்படி கண் படிமம் ''மேல்நிலை அமைப்பில் சமயப் பொருண்மையை யும் ஆழ்நிலை அமைப்பில் இச்சைப் பொருண்மையையும் கொண்டுள்ளது என்பதைக் கந்த புராணத்திலிருந்தும், திருவிளையாடற் புராணத்திலிருந்தும் சான்று கொண்டு நிறுவுகிறார். கந்தனைப் படைத்தபொழுது காமாக்கினியை யும், காமனையும் நக்கீரனையும் எரித்தபொழுது கோபாக்கினி யையும் கக்குவதாக நெற்றிக்கண்ணைக் கூறிவிட்டு, கோபாக் கினியின் அடித்தளமும் பாலுணர்வே என அவர் வாதிடுவது அவரின் உளவியல் திட்பத்தைக் காட்டுகிறது. ''இச்சை உணர்ச்சியின் உயர் வழிப்பாடு'' என்ற கட்டுரை பாலிச்சை உணர்வின் ஆத்மச் சட்டையைக் கழட்டிக் காட்டுகிறது. சிற்றின்பம் மடைமாற்றம் பெற்று பேரின்பத்தின் ஆதார அமைப்பாவதைச் சான்றுகளுடன் எடுத்து நிறுவுகிறது. குலசேகர ஆழ்வார் எப்படித் தன் மனத்துள் உறையும் பாலுணர்வுச் சக்தியை (Libido) தன்னையறியாமலேயே தன் பாடலில் உயர்வழிப்படுத்தி மகிழ்வெய்துகிறார் என்பதை பிராய்டின் இக் கோட்பாட்டை பயன்படுத்தி எடுத்துக் காட்டு கிறார் நலங்கிள்ளி. ''மறைக்கப்பட்ட இடிப்பஸ் அமைப்பு'' என்ற கட்டுரையில் பலவித நெட்டூரிக் கதைப் படிவங்களில் (Versions) மறைந்து கிடக்கும் அல்லது அவைகட்குப் பொது வான ஈடிபஸ் அமைப்பை அகழ்ந்தெடுத்துக் காட்டுகிறார். இக்கதைகளை இவருக்கு முன் ஆய்ந்த இராமநாதன் எழுப்பிய எழுப்பத்தவறிய வினாக்களுக்கு உளவியல்மூலம் ஆழ்நிலையில் தகுந்த விடைகளை நல்குகிறார். இப் பகுப் பாய்வுக் கட்டுரையைப் படிக்கும்போது, டெக்கமரான் கதை களை அமைப்பியல் வழி ஆய்ந்த டோடராவும் ஈடிபஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொன்மக் கதைகளை அமைப்பியல் வழி ஆய்ந்த லெவிஸ்ட்ராசும் நம் நினைவிற்கு வருகிறார்கள்.

தமிழ் கலாச்சாரத்திலும் இலக்கியத்திலும் ஆண்டாண்டுக் காலமாக கடத்தப்பட்டு வரும் 'கற்பரசி' மூலப் படிவத்தை ''தமிழ் இலக்கியத்தின் மூலப் படிவங்கள்'' என்ற கட்டுரையில் ஆய்கிறார். அதன் விளைவாக வால்மீகியின் அகலிகைக்கும் ஜெயகாந்தனின் கங்காவுக்கும் இடையிலுள்ள மூலப் படிவ உறவு தெளிவாகிறது. கற்பரசி மூலப் படிவத்தின் அக்கால வெளிப்பாடாக அகலிகையையும், இக்கால வெளிப் பாடாக கங்காவையும் பாவித்து அவற்றிற்கிடையே — அவைகளைப் படைத்த ஆழ்மனங்களுக்கிடையே — உள்ள ஒற்றுமைகளைச் சான்றுகள் பல தந்து தெளிவாக்குகிறார் நலங்கிள்ளி. ''வி-நாயக மூலப் படிவம்'' என்ற கட்டுரை மூலமாகவும் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் போடுகிறார் நலங்கிள்ளி. விநாயகனையே வி-நாயக (Wise old man) மூலப் படிவமாக்கி, அதன் ஒரு படியை (Version) ஜெய காந்தனின் ரிஷிமூலத்தில் ராஜாராமனாகப் பார்க்கிறார். ஞான முதல்வன் விநாயகனிடம் காணப்படும் அனைத்து அம்சங்களையும் வேதவித்து ராஜாராமனிடம் காண்கிறார். இருவரையும் ஒப்பிட்டு அதற்கு சான்றாகப் பல செய்திகளை விநாயக புராணத்திலிருந்தும் ரிஷிமூலத்திலிருந்தும் எடுத் தாளும் கட்டுரைப் பகுதிகள் மிகவும் பாராட்டுக்குரியன.

இவ்வாய்வுக் கட்டுரைகளில் நலங்கிள்ளி பிராய்டின் சர்ச்சைக்குரிய பலவித உளவியல் கோட்பாடுகளையும், யூங்கின் முலப் படிவக் கோட்பாடுகளையும் தமிழுலகுக்குத் தெளிவாக அறிமுகப்படுத்துவதோடு நில்லாது, அவற்றைத் தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கும் பயன்படுத்தி வெற்றி காண்கிறார். கோட்பாட்டோடு (Theory) நில்லாது செயற் பாட்டு (Practice) முக்கியத்துவத்தினையும் பெறும் இவ்வுள வியல் கட்டுரைத் தொகுப்பு தமிழின் வறண்ட விமரிசன உலகிற்கு உயிரூட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றியுரை

இந் நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் சிலவற்றைத் தமது புலமை இதழில் தொடர்ந்து வெளியிட்டு ஊக்கப் படுத்திய பேராசிரியர் டாக்டர் பொற்கோவும் இத் துறையில் எனக்கு ஈடுபாட்டை ஊட்டி வளர்த்த டாக்டர் நா. நடராசனும் எனது வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்டவர்கள். இவ்விருவரும் இந்நூலுக்கு சிறப்புரையும் அணிந்துரையும் வழங்கிச் சிறப்பித்துள் ளனர். இவ்விருவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

வகுப்பறையில் தமது இடைவிடா ஆர்வத்தைக் காட்டியதன்மூலம் என்னை இத் துறையில் வளர்த்த மாணாக்க நண்பர்கட்கும் இத்துறையில் தொடர்ந்து நான் ஈடுபட என்னை ஊக்குவித்த பேராசிரியர்கள் தே. லூர்து, ஆறு. இராமநாதன், மு. இராமசாமி மற்றும் நண்பர்கள் சங்கர சுப்பிரமணியன், ரவிச்சந்திரன் ஆகியோருக்கும் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொடுத்த இளங்கோவிற்கும் நூலாக்கத்திற்குத் தூண்டு கோலாயிருந்த என் மனைவி சாந்தி, பேராசிரியர்கள் திரு க. ப. அறவாணன், திரு நாகலிங்கம் ஆகியோ ருக்கும் நூலாக்கித் தந்த வைகறைவாணனுக்கும் மற்றும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அரங்க. நலங்கிள்ளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறப்புரை 3

அணிந்துரை 4

நன்றியுரை 7

உள்ளுறை 8

முன்னுரை : இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் 9

தமிழ் இலக்கியத்தில் மூலப்படிவ மாதிரிகள் 23

இச்சை உணர்ச்சியின் உயர்வழிப்பாடு 35

வி-நாயக மூலப்படிவம் 48

நெற்றிக்கண் படிமம் 63

மறைக்கப்பட்ட இடிப்பஸ் அமைப்பு 78

துணை நூற்பட்டி 94

அருஞ்சொற்பொருள் விளக்கம் 102

பெயரடைவு 121

பொருளடைவு 122

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை: இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்*

படைப்பாளன் ஒரு புதிர். நாம் எல்லோரும் படைப்பைப் பற்றிப் பல்வகை விமர்சனங்களைத் தருகிறோம். கால வெள்ளத்தில் இவ்விமர்சனங்களெல்லாம் கரைந்து போகின்றன. படைப்பைப் பற்றிய படைப்பாளனைப் பற்றிய புதிர்களெல்லாம் உளவியலுக்கு முன் உடைபடுகின்றன. உளவியலுக்கு முன் உண்மை மறைய முடியாது. மனித மனத்தின் பிரதி தான் படைப்பு. மனித மனத்தை ஆராய்வது போல் படைப்பாக்கத்தையும் (Creative Process) ஆராயலாம். மன நோய் மருத்துவரான சிக்மண்ட்ஃபிராய்ட் நோயாளியின் மனதிற்குள் உறைந்திருக்கும் உண்மையைக் கண்டறிய பின் வரும் நான்கு முறைகளைப் பின்பற்றினார். அவை; 1. தடை இல் இயைபு முறை (Free Association), 2. தடை இயைபு முறை (Attention to resistence) / (obstacle to free association), 3. கனவு விளக்க முறை (Interpretation of Dreams), 4. மாற்றீட்டு விளக்க முறை (Inter pretation of transference). இந்நான்கனுள் மன நோயாளியை எத்தகைய சங்கடத்திற்கும் உள்ளாகாமல் பார்த்துக் கொண்டு தங்கு தடையின்றிப் பேசச் செய்து அதன் மூலம்

---

* இத்தலைப்பில் ஏராளமான செய்திகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். எல்லாச் செய்திகளையும் இங்குத் தரஇடமில்லை என்பதால் தொடர்புடைய மிக இன்றியமையாத செய்திகள் மட்டும் இக்கட்டுரையில் கொடுக்கப் பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனது நனவிலி மனதில் (Uuconscious mind) புதைந் திருக்கும் இரகசியத்தை வெளிக் கொணரும் முறைக்குத் தடையில் இயைபு முறை எனப்படுகிறது. இவ்வாறு தங்கு தடையின்றிப் பேச்சை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நோயாளி திடீரெனப் பேச்சை நிறுத்திவிடுவதுண்டு இதற்குக் காரணம் நனவு மன (Conscious mind) ஆதிக்கம் என்பது சொல்லத் தேவையில்லை. இத்தகு சூழலில் நிறுத்தப்பட்ட இடத்தில் அமுக்கப்பட்ட விஷயம் என்னவாக இருக்கும் என்பதை (இது வரை வெளிப்பட்ட பேச்சோடு உறவுபடுத்தி) அறிவது தடை இயைபு முறை எனப்படுகிறது. மனநோயாளியின் கனவுப் பொருண்மைகளை ஆதாரமாகக் கொண்டு நோயை இன்னதென அறிவது கனவு விளக்க முறை எனப்படுகிறது. பரிசோதனைக்குட்படுத்தப்படும் மன நோயாளி தனது நனவிலி மன உணர்வுகளை (விருப்பு/வெறுப்புகளை) மருத்துவரிடமே பிரதிபலிப்பதை வைத்து மன நோயை அறிவது மாற்றீட்டு விளக்கமுறை எனப்படுகிறது. இவையே தொடக்க கால உளப்பகுப்பாய்வு (Classical Psycho-Analysis) முறை எனலாம். இவற்றுள் கனவு விளக்க முறை பிற்காலத் தில் ஃபிராய்டுக்கு இலக்கியத்தின் உளவியலைப் பார்க்க வழியமைத்துக் கொடுத்தது. நனவு மனம் ஓயும்போது நனவிலி மனம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதைக் கனவு என்கிறது ஃபிராய்டியம் நனவிலி மன வேட்கைகள் கனவில் வெளிப்படும் வேளையில் நனவு மனத்தின் ஆதிக்கமும் இருப்பதால் பெரும்பாலான கனவுகள் உறைவும் (Condensation), இடப்பெயர்வும் (displacement) கொண்டு குறியீடுகளாக (Symbolization) வெளிப்படுகின்றன. இத்தகைய கனவுகள் குறியீட்டுக் கனவுகள் என்றழைக்கப் படுகின்றன. இதனால் தான் கனவுகள் சிதைந்தும், விந்தைப் பண்பினைக் கொண்டதாகவும், நிகழ்ச்சித் தொடர் பற்றனவாகவும் உள்ளன.

இத்தகைய கனவைப் பகுத்தாய்ந்து அதன் உண்மைப் பொருள் நனவிலி மன வேட்கையே எனக்கண்ட ஃபிராய்ட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதக் கனவின் பண்புகளோடு படைப்பாக்கம் பெரிதும் ஒத்துப்போவதை உற்றுணர்ந்தார். இதற்குப் பின்தான் கனவையும் படைப்பாக்கத்தையும் சமதளத்தில் வைத்து ஆராயத் தொடங்கினார் ஃபிராய்ட். எனவேதான் படைப் பாக்கத்தைப் பகற்கனவு (Day Dream) என விளக்கினார் (1972, PP. 36—42).

அதே வேளையில் கனவாக்கத்தையும், படைப்பாக்கத் தையும் நூற்றுக்கு நூறு சமமானவை என்று நாம் கருதிவிட முடியாது. ஏனெனில் கனவாக்கத்தின் போது நனவுமனத்தின் ஆளுகைக் குறைந்தும், நனவிலி மன ஆளுகைக் கூடியும் இருக்கும். மாறாகப் படைப்பாக்கத்தின் போது நனவுமன ஆளுகைக் கூடியும் நனவிலி மன ஆளுகைக் குறைந்து மிருக்கும். இந்த நுட்பத்தைப் பிரித்துணரும் போது தான் கனவாக்கங்களெல்லாம் படைப்பாக்கங்களாகி விடமுடியாது எனும் உண்மை கிடைக்கும். அதே வேளையில் பெரும் பான்மைப் பண்புகளால் கனவும் படைப்பும் ஒத்தே விளங்கு கின்றன என்கின்ற ஃபிராய்டியத்தையும் நாம் ஒதுக்கிவிட முடியாது.

கனவுப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்திப் படைப் பாக்கத்தில் மறைந்து இருக்கும் உண்மையைக் கண்டறிய முனைந்தபோது பல படைப்புக்களுக்குப் புதிய விளக்கங்கள் கிடைத்தன.

உளப் பகுப்பாய்வு நெறிமுறைகளைப் படைப் பாக்கத்திற்குப் பயன்படுத்தும்போது, படைப்பாக்கத்தில் நமக்கு ஆய்வு மூலங்களாக விளங்குபவை பாத்திரத்தின் பேச்சு, படைப்பாளியின் பேச்சு (படைப்பிற்குள்) கதை சார்ந்த சூழல், படைப்பில் வெளிப்பட்ட படிமங்கள், படைப் பிற்கப்பாலுள்ள படைப்பாளியின் வாக்குமூலங்கள், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு இன்ன பிற. இதன் வழிப் படைப்பின் மறைபொருளைத் துப்பறியலாம். படைப்பாக்க உளவியலைக் கண்டறிதலின் பயனை இரு நிலைகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டுவார் லைனல் டிரில்லிங். அவை: 1. ஆழ் பொருளைக் கண்டு விளக்குதல்; 2. படைப்பாளன் ஒரு மனிதன் என்ற நிலையில் அவனது உண்மைத்துவத்தை (Reality) விளக்குதல் (1972 P. 284). இதிலிருந்து படைப்பாளன் படைப்பிலக்கியத்திலிருந்து எந்நிலையிலும் தனியனாகி விட முடியாது என்கின்ற உண்மை புரிகிறது. படைப்பின் மறை பொருள் என்பது படைப்பாளனின் நனவிலி மன வேட்கையே. இந்த நனவிலி மன வேட்கையே உண்மைப் பொருள் (Reality). அவ்வகையில் படைப்பின் உண்மைப் பொருளை உளப்பகுப்பாய்வு நெறிமுறைகளைப் (Psycho Anlitical Methods) பின்பற்றி வெளிக் கொணர முடியும். இம் முயற்சியே இந்நூலின் நோக்கமாக உள்ளது.

படைப்பில் படைப்பாளனின் நனவிலி மன எண்ணங்களும், கதையும், கதைச்சூழலும் ஒன்றில் ஒன்றாய்ப் பின்னிப் பிணைந்து கிடக்கும். இவற்றை மிக நுட்பமாகப் பிரித்தறிந்து உண்மையை அகழ்ந்தெடுக்க வேண்டும். உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளை இலக்கியத்திற்குப் பயன்படுத்தும்போது மிக எச்சரிக்கையாகவும் அளவோடும் கையாள வேண்டும் என்பது இங்குக் குறிப்பிடத்தது. எடுத்துக் காட்டிற்கு ஒன்றைச் சொல்வோம். ஃபிராய்ட், மீன் படிமங்கள் படைப்பாக்கத்தில்/கனவில் வெளிப்படும் போது அது ஆண் குறியீடாகும் என்றார் (David Stafford P. 70). இதைக் கண்மூடித்தனமாக அப்படியே ஏற்றுக் கொண்டு மீன் படிமம் எங்கெங்கெல்லாம் வெளிப்படுகிறதோ அங்கெங்கெல்லாம் அது ஆண் குறியீட்டைச் சுட்டுகிறது எனக்கூறி விடக்கூடாது. அவ்வாறு கூறுவது கொச்சை ஃபிராய்டியம் ஆகும் (Vulgar Freudism). மேலும் இப் போக்குப் படைப்பின் உண்மைப் பொருளையும் அடைய முடியாமல் தடுத்துவிடும். இவ்வுண்மையைச் சங்க இலக்கியப் பாடலொன்றின் வாயிலாக நிறுவலாம்.

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எம்இல் பெருமொழி கூறித் தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே (குறுந் : 8).

இப்பாடலில் வெளிப்பட்டுள்ள பழனவாளை எனும் மீன் படிமம் ஆண்குறியீடல்ல. மாறாகப் பழத்தைக் கவ்வும் வாளையின் வாய் இங்குப் பெண்குறியீடாக வெளிப்பட்டுள்ளது என்பது அறியத்தக்கது. ஆக இப்பாடலில் பழம் ஆண்குறியீடாகவும் வாய் பெண் குறியீடாகவும் (வாய் படிமங்களெல்லாம் பெண்குறியீடாகும் என்பது ஃபிராய்டியம் (David Stafford P. 71) கவ்வுதல் கலவிக் குறியீடாகவும் வெளிப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ளலாம். ஃபிராய்டியக் குறியீட்டை (Freudian symbols) இனம் கண்டு கொள்ள வேண்டுமென்றால் வெளிப்பட்ட படிமத்தின் உருவம், வினை இரண்டையும் மனதில் கொள்ள வேண்டும்.[1]

இலக்கியப் படைப்புகளில் காணப்படும் மனித மன வேட்கைகள் (Desires), அச்சங்கள் (Fears) இன்னதெனத் தெரியாத (Unkno n) இயல்புக்கு ஒவ்வாத (Unacknowledged) கதையாக்கங்கள் போன்றவையே உளப்பகுப்புத் திறனாய்விற்கு வாய்ப்பை நல்கும் களங்களாகும் என்பதை உளப்பகுப்புத்திறனாய்வாளன் அறிந்திருத்தல் வேண்டும். உளப்பகுப்புத்திறனாய்வென்பது திறந்திருக்கும் கதவைச் சுட்டிக்காட்டி இக்கதவு திறந்திருக்கிறது என்று கூறுவதல்ல. மாறாகப் பூட்டிக் கிடக்கும் கதவை ஃபிராய்டிய சாவி கொண்டு திறந்து காட்டுவதேயாகும். இவ்வடிப்படையில் தான் குலசேகராழ்வார் கொண்ட மானுட பிறவி வெறுப்பும், காமன், நக்கீரன் ஆகியோர் கொண்ட கண் பயமும், விநாயகன் கொண்ட துறவு வாழ்வும் இன்னபிறவும் மறைக்கப்பட்ட இச்சை உணர்வின் மாற்று வெளிப்பாடுகளே என இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நனவிலி மன வேட்கைகள் படைப்பாக்கத்தில் தன்னை நேர்மாறான வகையில் வெளிப்படுத்திக் கொள்வதையும் அதே வேளையில் சமூகத்திற்கு இசைவான வகையிலும் இலக்கியமரபு, மொழி மரபு போன்றவற்றிற்கு ஏற்றாற் போன்றும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதையும் இவ்வாறு வெளிப்படுத்திக் கொள்ளுதலில் அதற்குரிய கட்டுப்பாடு இன்னதென்பதையும் விளக்கிக் காட்டுவது உளப்பகுப்புத் திறனாய்வாளனின் கடமைகளாகின்றன. இக்கடமைகளை இந்நூல் செய்ய முயன்றுள்ளது. மேற் சொன்ன படைப்பிலக்கிய இயல்புக்கு நல்ல எடுத்துக்காட்டாக கண்ணப்பநாயனார் கதையைச் சொல்லலாம். மனித மனத்துள் கிடக்கும் நனவிலி உணர்வுகளுள் ஒன்றான ''சாவு விழைவு உணர்ச்சி" (death instincts/destructive impulses) கண்ணப்ப புராணத்தில் கண்ணப்பன் தன் கண்களைப் பிடுங்கிக் கொள்வ தாக வெளிப்படுகிறது. அதே வேலையில் சமூகத்திற்கு இசைவான / விழைவான வகையில் முற்றிய பக்தியாக வெளிப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. இச்சை உணர்ச்சியின் உயர்வழிப்பாட்டைப் பக்தி இலக்கியங்கள் முழுதும் பரக்கக்காணலாம். ஃப்ராய்டு கண்டறிந்த நனவிலிமன உணர்வுகள் ஏனைய இலக்கியங்களை விட சமய இலக்கியங் களில்தான் மிக நேர்த்தியான முறையில்மாறி, மறைந்து வெளிப்பட்டுள்ளன. இதனால்தான் ஃப்ராய்டிற்கும் சரி உளப்பகுப்புத் திறனாய்வாளர்கட்கும் சரி சமய இலக்கியங்கள் விடாய்க் களமாக (Thrust Area) விளங்குகின்றன.

தற்காலப் படைப்பாளர்களான பாரதி, மு வ., தி. ஜானகி ராமன், ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி போன்றோர் படைப்புகளிலும் நனவு மனதிற்கும், நனவிலி மனதிற்கும் இடையே நிகழும் போராட்டங்கள் பாத்திரங்களாக வடி வெடுத்திருக்கின்றன. மு.வ.வின் புதினங்களில் நனவுமன. நனவிலிமனப் போராட்டங்களை நல்லய்யன்-ஆணவராகவும் (கயமை), வேலாயுதம் - சந்திரனாகவும் (அகல் விளக்கு),

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காஞ்சனை - கலெக்டர் செல்வநாயகமாகவும் (மலர்விழி) வெளிப்பட்டுள்ளமையை நன்குணரலாம்.

இலக்கியம் என்பதற்கப்பால் இலக்கியக் கோட்பாடுகள் என்ற நிலையில் தொல்காப்பியரின் உள்ளுறைக் கோட்பாட்டில் ஓரளவிற்கு ஃபிராய்டிய இணைவைக் காண முடிகிறது. கலை இலக்கியங்களில் புற உலகப் பொருட்களின் உள்ளே இச்சை மன உணர்வுகள் நனவலி நிலையில் ஒளிந்திருக்கும் என்பது ஃபிராய்டியம். உரிப்பொருள் (இச்சை உணர்ச்சி) தெய்வம் தவிர்த்த ஏனைய புற உலகப் பொருட்களின் (உணவு, மா, மரம், புள், பறை இன்னபிற) உள்ளே நனவு நிலையில் / படைப்பாளனின் அறிவு மனதின் முழு ஆதிக்கத்தோடு புகுத்தப்பட்டிருக்கும் என்பது தொல்காப்பியம். ஃபிராய்டின் மறைபொருளாக்கம் (நனவிலியாக்கம்) இயற்கையானதாகவும் மிக ஆழமானதாகவும் அமைந்திருக்க, தொல்காப்பியரின் மறை பொருளாக்கம் (நனவுநிலை உள்ளுறையாக்கம்) செயற்கையானதாகவும் மேலோட்டமானதாகவும் அமைகிறது.

ஃபிராய்டுக்குப் பின் நனவலிமன ஆராய்ச்சியை அவரது மாணவர் கார்ல் குஸ்தவ் யூங் (Carl Gustav Yung) ஆழப்படுத்திய போது கூட்டு நனவிலி மனக் (Collective unconscious mind) கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. ஃபிராய்டைப் போன்றே யூங்கும் தமது உளவியல் ஆய்விற்குப் (Analytical Psychology) படைப்பாக்கங்களைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். ஃபிராய்ட் இலக்கியப் படைப்பாக்கங்களைத் தமது ஆய்விற்குப் பயன்படுத்திக் கொண்டது போல் யூங்தமது ஆய்விற்குத் தொன்மப் படைப்பாக்கங்களைப் பயன்படுத்திக் கொண்டார். யூங் படைப்பாக்கங்களை இரு வகையாகப் பிரிப்பார். அவை : 1. காட்சி ஆக்கப் படைப்பாக்கங்கள் (Visionary mode of Artistic Creations), 2, மன ஆக்கப் படைப்பாக்கங்கள் (Psychological mode of Artistic creations). இவற்றுள் ஏராளமான படைப்பாக்கங்கள் முதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகையைச் சேர்ந்ததென்றும் இவற்றில் ஆழமான உண்மைகள் ஏதும் இல்லை என்றும் மன ஆக்கப் படைப்பாக்கங்களில் அதிசயத்தக்க உண்மைகள் மறைந்துறைகின்றன என்றும் யூங் கூறுவார் (1972, PP. 178,-199). ஃபிராய்டும் யூங்கும் பின்வரும் நிலைகளில் வேறுபடுகின்றனர். மனிதனின் குழந்தைப் பருவ நனவிலி உணர்வுகளை (Individual uuconscious) முதன்மைப்படுத்துவது பிராய்டின் போக்காகவும், பொதுமனித நனவிலி மனவுணர்வுகளை (Collective unconscious mind) முதன்மைப் படுத்துவது யூங்கின் போக்காகவும் காணப்படுகிறது. மனிதன் பிறப்பால் கூட்டு மனிதனாகவே (Collective man) வருகிறான் என்பது யூங்கிசம்.

தொடக்கத்தில் பாலுணர்ச்சிக் கோட்பாட்டை (Libido theory) முன்வைத்துத் தன் கருத்துகளை வழங்கினார் ஃபிராய்ட்.முதல் உலகப்போருக்குப் பின் இச்சை உணர்ச்சியுள் தாக்கும் உணர்ச்சியும் (Aggressive Instinct) கலந்து இருப்பதை உணர்ந்தார். பின்னர் அவரது ''இன்ப உணர்ச்சிக்கு அப்பால்'' (Beyond the Pleasure principle) எனும் கட்டுரை வாயிலாக இச்சை உணர்ச்சியை மேலும் பகுத்துச் சாவு விழைவு உணர்ச்சி (death Instinct), வாழ்வு விழைவு உணர்ச்சி (life Instinct), ஆகியனவும் நனவிலியுள் உறைந்து கிடக்கின்றன என்றார். ஃபிராய்டை முழுவதும் படிக்கும் போது அவரைப் பாலியல் எனும் சிறுவட்டத்திற்குள் குறுக்கிப் பார்க்கும் நிலை நேராது. இதை அண்மைக் கால உளப்பகுப்பாய்வுப் போக்குகளும் உறுதி செய்கின்றன,

அண்மைக் காலத்திய உளப்பகுப்புத்திறனாய்வு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜேக்யூஸ் லக்கான் (Jacques Lacan) என்பவரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. உளவியலைத் தொடங்கி வைத்த சிக்மண்ட் ஃபிராய்டின் கோட்பாடுகள் பிற்காலத்தில் பெரிதும் கண்டனத்திற்குள்ளாயின. ஆனால் இக்காலத்தில் லக்கானின் புதிய தொடக்கமாக ஃபிராய்டுக்குத் திரும்பு (Return to Freud) எனும் போக்கால் ஃபிராய்டிசம் மறுபடிப்பிற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Rereading) உள்ளாக்கப்பட்டுப் புதிய கண்ணோட்டத்தில் லக்கான் முதலியோரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஃபிராய்டின்மன அமுக்கக்கோட்பாடு (Theory of Repres- sion), இச்சை உணர்ச்சிகளும் அதன் மாயத் தோற்றங்களும் (Instinct and their vissititudes), மாற்றீட்டுக் கோட்பாடுகள் (Transference theory) போன்றகோட்பாடுகள் மீண்டும் ஆழமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. ஃபிராய்டின் மன அமுக்கக் கோட்பாட்டையே லக்கான் தனது உளப்பகுப்பாய்விற்கு அடிப்படையாக எடுத்து கொண்ட போதும் லக்கான் ஒரு மெல்லிய இழையில் ஃபிராய் டிடமிருந்து வேறு படுகிறார். மனஅமுக்கம் என்பது நனவிலியோடு தொடர்புபட்ட ஒன்று என்பதில் மேற்சொன்ன இருவரும் ஒன்றுபடுகின்றனர். ஃபிராய்டைப் பொறுத்த வரையில் நனவிலியில் கிடப்பது அமுக்கப்பட்ட விஷயங்கள்/ உணர்வுகள் (Repressed meterials) ஆகும். ஆனால் லக்கானின் கண்டு பிடிப்பு, விஷயத்திற்கும் முன்னால் மொழியே நனவிலியில் அமுக்கப்பட்டுக் கிடக்கிறது என்பது தான். எனவேதான் மனிதன் பேசும் மொழியை நனவிலி மொழி (unconscious language) என்றார் லக்கான்.

உளப்பகுப்பாய்வில் மன நோயாளியின் உரையாடல் வழி மனநோய் அறிகுறிகள் கண்டு கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் அந்நோயாளியின் மனதில் அமுங்கிக்கிடக்கும் எண்ணத்தைக் கண்டறிந்தார். ஃபிராய்ட். ஆனால் லக்கான் அந்த உரையாடலிலும் கூட மனதில் அமுங்கிக் கிடக்கும் விஷயங்கள் முழுமையாக வெளிப் படவில்லை; ஆங்காங்கே விஷய விடுபாடுகள் உள்ளன என்றறிந்தார். எனவேதான் ஃபிராய்டு மறுபடிப்பிற்கு உள்ளாகும் போது ஃபிராய்டே ஒரு குறியீடாக (Semiotic Freud) லக்கானுக்குக் காட்சி தருகிறார். மனநோயாளியின் வாக்கு மூலம் (Psychic Discourse) எவ்வாறு ஆங்காங்கே மறைக்கப் பட்டுள்ளதோ அதுபோல் இலக்கிய உரையாடலும் (Poetic

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Discourse) முழுமையற்றதாகவும் கதையாடல் விடுபாடு (Narrative gaps) கொண்டதாகவும் விளங்குகின்றது என்பது லக்கானின் துணிபு.

மொழியாடலாயினும் சரி கதையாடலாயினும் சரி அல்லது வேறு எந்தத் துறையைச் சார்ந்த விஷயங்களாயினும் சரி, அவை முழுமையற்றனவாகத் தான் உள்ளன என்பது லக்கானின் கருத்து. அண்மைக்கால ஆய்வுப்போக்கும் (Deconstraction Approach) இதை வற்புறுத்தி வருகிறது. ஒரு கதை தன்னை முழுதுமாக மொழி வழியாக வெளிப் படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதால் அது முழுமை யற்றதாகிறது. இத்தகைய குறைக் கதையாடலைக் கதை யாடல் அமுக்கம் (Narrative Repression) என்று சொல்லப் படுகிறது. இத்தகைய அமுக்கம் தோன்றுவதற்குக் காரணம் அங்கே பேசப்பட்டிருக்க வேண்டிய கதை பேசப் படாமல் நனவிலிக்குள்ளே அமுக்கப்பட்டுள்ளமையே எனலாம். அமுக்கப்பட்டுள்ள கதையாடலை மீட்டெடுத்துப் (Retriev) பார்க்கும்போது கதையில் இடையறவு பட்ட இடம். இடைவெளி தெற்றெனத் தெரியும்.[3]

தற்கால உளவியல் திறனாய்வுக் கொள்கையின் படி நோயாளி (Analysand) என்பவனைப் படைப்பாளி என்ற நிலையிலும் நோயாளியின் பேச்சு என்பதைப் படைப்பு என்ற நிலையிலும் மனநோய் மருத்துவன் என்பவனைத் (Analyst) திறனாய்வாளன் என்ற நிலையிலும் இணைத்து நோக்கப் படுகிறது. நோயாளி = படைப்பாளி; பேச்சு = படைப்பு; நோய் மருத்துவன் = திறனாய்வாளன் என்ற நிலையில் உளப்பகுப்பாய்வும் இலக்கியத்திறனாய்வும் ஒன்றில் ஒன்றாய் சங்கமமாகி விட்டன.

1980-90களில் உளவியல் இலக்கியத் திறனாய்வு ஃபிராய்டு எழுதிவைத்த நோய்க் குறிப்புப் புத்தகத்தின் (Cash Sheet) மீது கவனத்தைத் திருப்பியுள்ளது. நோயா ளியைப் பற்றிய எழுத்துக்கள் இலக்கியப் பண்புகள் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளங்குவது நிறுவப்பட்டுள்ளது. ஒரு கதாசிரியன் தன் மனதிற்குள் இருக்கும் ஒருவனின் கதையை விவரிக்க எத்தகைய கதை உத்தியைப் (Narrative Technics) பயன் படுத்துகின்றானோ அதையொத்த கதை உத்திகள் ஃபிராய்டு விவரித்த நோய்க் குறிப்புப் புத்தகத்திலும் காணக் கிடைக் கின்றன. கலையாக்கத்திற்குரிய தகுதிகளெல்லாம் ஃபிராய் டின் நோய் குறிப்புப் புத்தகங்களில் காணப்படுகின்றன, இதனால்தான் உளவியல் திறனாய்வு உலகிற்கு இன்று ஃபிராய்டே ஓர் இலக்கிய மாகத் (Freud as Ltterature) திகழ்கின்றார்.

குறிப்புகள்

1. வெளிப்பட்ட படிமத்தின் செயலை உற்று நோக்கும்போது அது ஃபிராய்டியக் குறியீடா அல்லது பிறிதொன்றா என்பது தெற்றெ‌ன விளங்கும். சில வேளைகளில் படிமத்தின் உருவம் வெளிப்பட்டு செயல் வெளிப்படாமல் போகலாம். அல்லது செயல் வெளிப் பட்டு உருவம் வெளிப்படாமல் போகலாம். உருவம் வெளிப்பட்டு செயல் வெளிப்படாமல் மறைக்கப்பட்டுள்ள மையை இந்நூலில் இடம் பெற்றுள்ள இச்சை உணர்ச்சி யின் உயர் வழிப்பாடு எனும் கட்டுரை விளக்குகிறது. இக்கட்டுரையில் குலசேகராாழ்வார் வேங்கடமலையில் சுனை மீனாய்ப் பிறவி எடுக்க வேண்டும் என்று பாடும் பாடலை எடுத்துக் காட்டி இங்கு மீன் படிமம் ஆண் குறியீடு என்று விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இப் பாடலில் மீன் படிமத்தின் செயல் இன்னதென வெளிப் படுத்தப்படவில்லை. சுனையில் மீனின் செயல் நீந்துதல் எனும் வினையை மனதில் கொண்டு நோக்கும் போது இங்குமீன் ஆண்படிமம் என முடிவு பண்ணப் பட்டுள்ளது. ஆனால் இதே மீன்படிமம் மேற்சொன்ன குறுந்தொகைப் பாடலில் பெண்குறியீடாக வெளிப்பட்டுள்ளது நமக்குப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புரிகிறது. இப்பாடலில் கவ்வுதல் எனும் மீனின் செயல் காட்டப்படுகின்றது. காட்டப்படவேண்டியவாய் காட்டப் படவில்லை. கவ்வுதல் என்ற செயலைக்கொண்டு வெளிப் படுத்தப்படாதபடிமம் வாய் என யூகிக்க முடிகிறது. எனவே இப்பாடலில் மீன் ஃபிராய்டியக் குறியீடல்ல. மீனின் வாய்தான் ஃபிராய்டியக் குறியீடாக மறைந்து நின்று பெண் குறியைச் சுட்டுகிறது, இம்முறையில் ஃபிராய்டியக் குறியீடுகளைப் புரிந்து கொள்ளும்போது தான் படைப்பின் உண்மையைக் கண்டறியமுடியும். இவ்வாறு படிமங்கள் மறைந்து வெளிப்படுவதை மாயப் படிமம் என்பார் ரவிச்சந்திரன் (1991, ப.133).

2. மொழியாராய்ச்சியின் தொடக்க கர்த்தாக் களாக மேலை நாட்டில் பெர்டினண்ட் டி. சசுரும் (Ferdinand De Saussurre) நம்நாட்டில் தொல்காப்பியரும் விளங்குகின்றனர். இவ்விருவரும் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள உறவை ஏறக்குறைய ஒரே தன்மையில் விளக்கிச் சென்றுள்ளனர். தொல்காப்பியர் மொழி பற்றிய அடிப்படைச் செய்தியாக ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' எனச் சொல்லும் பொருளும் இணைந்தே வாழ்கின்றன என்கிறார். சசூரும் சொல் (Signi fier) அதன் பொருள் (Signified) இவற்றின் இணைப்பை S/s எனும் சூத்திரத்தின் வழி காட்டுகிறார். இங்குப் பெரிய S என்பது ஒலியன்களான சொல்லையும் சிறிய (s) என்பது அது உணர்த்தும் பொருளையும் சுட்டுகின்றன. சசூர் சொல்லுக்கும் பொரு ளுக்கும் உள்ள உறவு குறியீட்டுத் தன்மை கொண்டது என்கிறார். தொல்காப்பியர் ''மொழிப் பொருள் காரணம் விழிப்பத்தோன்றா'' என்கிறார். மேற் சொன்ன இருவரும் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவை அறிவு/ நனவு மனதின் (Conscious mind) அடிப்படையிலேயே விளக்கியுள்ளனர் என்பது தெளிவு. லக்கான் நனவிலி மனதின் அடிப்படையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழியை அணுகுகிறார். நனவலி மனதிலேயே மொழி பிறக்கிறது. நனவிலியில் எண்ணம் அமுங்கிக் கிடக்கிறது என்பது ஃபிராய்டியம். நனவிலியில் அமுங்கிக் கிடக்கும் சொல் தன்னை அப்படியே வெளிபடுத்திக் கொள்வ தற்குப் பதிலாக வேறொரு சொல் வழியாக வெளிப் படுகிறது. வெளிப்பட்ட மொழி வெளிப்படா மொழியின் பதிலியே. மொழி என்பது ஆகி வரும் பண்பு / உருவகப் பண்புடன் (Metaphoric/ Metonymic) தான் வாழ்கிறது. சான்றுக்கு ஒன்றைக் கூறலாம். ஊர் சிரித்தது என வெளிப்பட்ட தொடரில் (Menifest text) வெளிப்படாமல் அமுக்கப்பட்ட மொழி மக்கள் சிரித்தனர் என்பது, இத்தொடரில் மக்கள் எனும் சொல்லும் சிரித்தனர் எனும் சொல்லும் அமுக்கப்பட்டு அதற்குப் பதிலியாக ஊர் சிரித்தது எனும் தொடர் வெளிப்பட்டுள்ளது. (ஊர் சிரித்தது என்பது ஊரிலுள்ளமக்கள் சிரித்தனர் என்பதற்கு ஆகி வருகின்றது என்பது நமது மரபிலக் கணம் தரும் விளக்கம்).

100829

வெளிப்பட்ட மொழி (அ) மொழித்தொடர் என்பது வெளிப்படாமல் அமுக்கப்பட்ட மொழி/மொழித் தொடரின் (A Chain of Unconscious Signifiers) பதிலியே (Substitute) என்கிறார் லக்கான். சசூர் தொல் காப்பியர் இருவரும் சொல் அதன் பொருள் என்ற தளத்தில் நிற்கின்றனர். லக்கான் சொல் நிலைத் தன்மையற்ற நிலையில் இன்னொரு சொல்லிற்குப் பதிலியாக வாழ்வதால் அதுஉணர்த்தும் பொருள்என்பது உறுதியற்றது (Uncertainity) என்கிறார், எனவே

லக்கான் சொல்/ பொருள் $\left(\frac{S}{s}\right)$ என்ற அமைப்பை

விடுத்துச் சொல் / சொல் $\left(\frac{S}{S}\right)$ எனும் அமைப்பில்

மொழியை அணுகுகிறார். சசூரின் சூத்திரத்தைப் பின் வருமாறு மாற்றி அமைக்கிறார் லக்கான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

$$\frac{S^1}{S} = \frac{\text{ஊர்}}{\text{மக்கள்}} \quad \begin{matrix} \text{— (As a Signifier)} \\ \text{— (As a Signifier)} \end{matrix}$$

ஊர் என்பது வெளிப்பட்ட சொல் மக்கள் என்பது அமுக்கப்பட்ட சொல், இந்நிலையில் S/s என்ற பழைய அமைப்பிலிருந்து நாம் S என்ற ஒரு சொல்லை (மக்கள்) மீட்டெடுக்கிறோம். இவ்வடிப்படையில்தான் லக்கான் மொழி அமைப்பை வெளிப்பட்ட சொல் S^1 என்றும் வெளிப்படா சொல் S என்றும் உணர்ந்து $\frac{S^1}{S}$ எனும் சூத்திரத்தை உருவாக்குகிறார்.

ஊர்சிரித்தது என வெளிப்பட்ட தொடர் மக்கள் சிரித்தனர் எனும் வெளிப்படா தொடரின் பதிலித் தொடரே என முன்னமேயே கூறினோம். இந்த வெளிப் படா சொல்/தொடர் லக்கானிய நோக்கில் நனவிலிச் சொல் / தொடர் (Unconscious Siginifiers) ஆகும். இந்த அடிப்படையில் கலை இலக்கியம், உளப்பகுப் பாய்வு இன்ன பிறவற்றில் வெளிப்பட்ட மொழியாடல் (Discourse) என்பது முழுமை யற்றதாக உள்ளது என்பது லக்கானியம். எந்தத் துறைச் செய்தியாயினும் அங்கே வெளிப்பட்ட 'மொழித் தொடர்' அமைப்பு முழுவதும் பதிலிச் சொற்களின் கோர்வையாகவே உள்ளது. மொழி பதிலியாக வாழ்வதால் மொழி வழிப் பிறக்கின்ற அனைத்தும் ஏதோ ஒன்றின் பதிலியாகவே வாழ்கிறது. மொழி வழிப் பிறக்கின்ற ஒரு கதை தன்னை நேரடியாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் இன்னொரு கதையின் பதிலியாக வெளிப்படுகிறது.

3. இராபர்ட்கான் டேவிஸ் தனது 'கதையாடல் அமுக்கம்' (Narrative Repression) என்ற கட்டுரை யில் எட்கர் ஆலன்போவின் இதயத்தின் கதையைச் சொல் (Tell tale the Heart) எனும் சிறுகதையில் அமுக்கப்பட்ட கதை இன்னதென்பதை மீட்டெடுத்துக் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்தில் மூலப்படிவ மாதிரிகள்*

ஒருலகக் கோட்பாட்டை நோக்கி மனித சமுதாயம் விரைய வேண்டும் என்பது மனித மேம்பாட்டை வலியுறுத்துவோரின் ஆழ்மனக் கனவாக இருந்து வருகிறது. மொழியாலும் இனத்தாலும் நாட்டாலும் வேறுபட்டுக் கிடக்கும் மனிதன் ஆழ்மன உணர்வுகளால் ஒன்றுபடுகிறான் எனும் உண்மையை உளவியல் துறையின் நவீன கண்டுபிடிப்புகளான நனவில் மன (unconscious mind) ஆராய்ச்சியும், கூட்டு நனவிலி மன (collective unconscious mind) ஆராய்ச்சியும் உலகுக்கு உணர்த்தியுள்ளன. மனிதனின் படைப்பாக்கங்களான மொழி, இலக்கியம், பிற கலைகள் போன்றவற்றுள் மனித மனத்திற்கு மிக அண்மையில் மொழிக்கு அடுத்து இலக்கியம் உள்ளது என்பது யாவரும் அறிய தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானரீதியாக மனிதனைப் பற்றி ஆராய முனைந்த துறைகளுள் உளவியல் துறையும் ஒன்று. மனிதனின் நடத்தையை (Behaviour) மனித மனமே/மூளையே நிர்ணயிக்கிறது என்பது உணரப்பட்டபோது மனித நடத்தைகளைப் புரிந்து கொண்டால் அவனது மனதைப் புரிந்து கொள்ளலாம் என்பது துணியப்பட்டது. மனிதனின் செயல்களான பேச்சு, எழுத்து, உறக்கம், கனவு போன்ற நடத்தைகள் ஆராயப்பட்டன. அவனது படைப்பாக்கம் (Creative process) பற்றியும் ஆராயப்பட்டது.

---

* புதுவைப் பல்கலைக் கழக வெளியீட்டான தேடல் - தொகுதி - 2 லிருந்து 164 - 204, (1989) எடுக்கப்பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவ்வகையில் மனித மனதைப் புரிந்து கொள்ள உளவியல் துறையின் ஆராய்ச்சிக்கு மொழி, இலக்கியம், பிறகலைகள் போன்றவை உதவின.

நனவு மனத்திற்கு (Conscious mind) அப்பாலும் சில எண்ணப் பதிவுகள் மனித மனத்துள் கிடக்கின்றன எனும் உண்மையை ஏனையோரைவிட சிக்மண்ட் ஃபிராய்ட் (Sigmund freud) தெளிவாக உணர்த்திய போது நனவிலி மனம் பற்றிய அறிவு உலகிற்குத் தெரிய வந்தது. இந்த நனவிலி மன எண்ணப் பதிவுகள் அனைத்தும் தனிமனிதனின் தொடக்க கால/குழந்தைப் பருவ நிகழ்ச்சியோடும் பாலுணர்வுப் பண்போடும் தொடர்புடையன என ஃபிராய்ட் நிறுவிய பின்னர் அதில் உள்ள சில குறைபாடுகள் ஃபிராய்டுச்குப் பின் வந்தோரால் சுட்டிக் காட்டி மறுக்கப்பட்டன. ஃபிராய்டுக்குப் பின் நனவிலி மனம் பற்றிய ஆராய்ச்சி மேலும் வளர்த்தெடுக்கப்பட்டது. இதன் விளைவால் மனிதனின் நனவிலி மனதிற்கு அப்பாலும் சில எண்ணப் பதிவுகள் கிடக்கின்றன எனும் உண்மை கண்டறியப்பட்டது. அவ்வுண்மை ''கூட்டு நனவிலி மனம்'' (Collective unconscious) எனும் கண்டுபிடிப்பை உலகிற்கு நல்கியது. இந்தக் கூட்டு நனவிலி மனம் என்பது ஃபிராய்டு சொன்ன தனிமனித நனவிலி மனத்திலிருந்து (Individual unconscious mind or personal unconscious mind) வேறுபட்டது என்பதை கார்ல் குஸ்தவ் யூங் (Carl Gustav Jung) தெளிவாக நிறுவிய போது மனித மனங்களின் சில அதிசயத்தக்க நடத்தை ஒப்புமைகளுக்குக் (Similar Behaviour) காரணம் விளங்கிற்று. கலக்டிவ் (Collective) என்ற சொல் முதன் முதலாக இத்துறையில் யூங்கால் பயன்படுத்தப்பட்டது என்பது அறியத் தக்கது.

கூட்டு நனவிலி மனத்தை விளக்க முயன்ற யூங், நனவிலி மனத்தினின்றும் வேறுபட்டது கூட்டு நனவிலி மனம் என்றும், தனிமனித நனவிலிமன எண்ணங்கள் என்பவை அவனது நனவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன எண்ணங்களேயாம் என்றும் இந்த நனவு மன நிகழ்ச்சிகளே காலப்போக்கில் நனவிலி மன எண்ணங்களாக மாறுகின்றன என்றும் கூட்டு நனவிலி மன எண்ணங்கள் என்பவை பரம்பரை பரம்பரையாக ஜெம்பிளாசத்தோடே நனவிலி மனத்தில் கடத்தப்பட்டு வருவது என்றும் இவ்வெண்ணங்கள் உலகப் பொதுமை (Universalization) கொண்டவை என்றும் இப்பொதுமை உலகெங்கிலுமுள்ள தனிமனித மனங்களுக்கிடையே காணப்படும் என்றும் கூறுகின்றார்.

மேற்சொன்ன கூட்டு நனவிலி மனத்தில் ஏராளமான கருத்துப் படிவங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை யூங் உணர்ந்தார். இந்தக் கருத்துப் படிவங்களை 'ஆர்க்கிடைப்' என்று யூங் அழைத்தார். ஆர்க்கிடைப் என்பதற்கு யூங் விரிவான வகையில் தமது ''கூட்டு நனவிலியின் மூலப் படிவங்கள்'' (Archetypes of Collective Unconsicous) என்ற கட்டுரையிலும், ''கூட்டு நனவிலியின் பொருள்'' (The Concept of Collective Unconscious) என்ற கட்டுரையிலும் விளக்கிச் செல்கின்றார் (1980 : 60-61).

மேற்சொன்ன யூங்கின் கட்டுரைகளிலிருந்து ஆர்க்கிடைப் என்பது கூட்டு நனவிலி மனதில் கிடக்கின்ற கருத்து என்பதையும் அது எப்போதும் எங்கும் தனக்குரியதொரு தன்மையோடு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆற்றலுள்ளது என்பதையும் அறிய முடிகின்றது.

ஆர்க்கிடைப் எனும் சொல் பிளேட்டோவினால் முதலில் கையாளப்பட்டுப் பின்னர்க் காலந்தோறும் பல்வேறு சொல்லாக்கங்களால் அதாவது தொடக்கப் படிவம் (Primordial Image) என்றும், மூலம் (Priori) என்றும், மூலக்கரு (Motifes) என்றும், கூட்டின் பிரதிநிதி (Representation Collectives) என்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

ஆர்க்கிடைப் எனும் சொல்லுக்கு மூலப்படிவம் என்றும் தொல்படிவம் என்றும் மூலக்கரு என்றும் தமிழில் சொல்

இ—2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லாக்கங்கள் உருவாகியுள்ளன. நாம் இங்கு ஆர்க்கிடைப் என்பதை மூலப்படிவம் எனும் சொல்லாலே அழைக்கின்றோம். இந்த மூலப் படிவங்கள் அப்படியே நூற்றுக்கு நூறு அதன் முழுத்தன்மையோடு வெளிப்பட இயலாதவை. ஆனால் ஏதேனும் ஒரு வடிவத்தில் வெளிப்படக் காலந்தோறும் கூட்டு நனவிலி மனம் முயன்று கொண்டே இருக்கிறது. இதன் வெளிப்பாட்டை மனிதனின் படைப்பாக்கங்களில் காண முடிகிறது.

கூட்டு நனவிலி மனத்தில் கிடக்கின்ற மூலப்படிவங்களின் பிரதிகளை (Versions of Archetypes) மனித சமுதாயத்தின் ஒரு காலத்திய படைப்பாக்கங்களான புராணங்களிலும் (Myths) தேவதைக் கதைகளிலும் (Fairy Tales) காண முடிகிறது என்று யூங் கூறுகிறார். தொடக்க கால மனித சமுதாயத்தின் முதல் படைப்பாக்கம் கடவுளைப் (Religion) பற்றியதென்றும் கடவுளையும் மனிதனையும் இணைத்துச் செய்த படைப்பு புராணங்கள் என்றும், மனிதனை மட்டும் வைத்துச் செய்யும் படைப்பு இலக்கியம் (Literature) என்றும் கூறினால் தவறாகாது. மனிதனின் கூட்டு நனவிலி மனதில் கிடக்கின்ற மூலப்படிவங்கள் அவனது படைப்பாக்கங்களில் இன்னது எனப் படைப்பாழ் மனதால் அறியாத நிலையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது அல்லது வெளிப்படுத்தப்படுகின்றது.

யூங் தனது மூலப்படிவக் கருத்தை நிறுவ கிரேக்கப் புராணங்களையும், எகிப்தியப் புராணங்களையும் பைபிளையும், இந்தியப் புராணங்களையும் வனதேவதைக் கதைகள் சிலவற்றையும் சான்றாதாரமாக எடுத்துக் காட்டுகிறார். மனிதனால் படைக்கப்பட்ட இந்தப் படைப்பாக்கங்களில் மனித ஆழ் மனக் கடலில் கிடக்கும் சில மூலப்படிவங்கள் வெளிப்பட்டுள்ளமையை யூங் எடுத்து விளக்கினார். அவர் விளக்கிய மூலப்படிவங்களுள் கடவுள் மூலப்படிவம் (God Archetype) என்பதும் ஒன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித மனத்தில் கடவுள் என்ற மூலப்படிவம் கால காலமாகக் கிடக்கின்றது. இது உலக மனித ஆழ் மனக் கடலுக்கே பொதுவான மூலப்படிவம். இது ஐரோப்பாவில் சிலுவையாகவும் இந்தியாவில் சிவலிங்கமாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அல்லது வெளிப்படுத்தப் படுகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டுவது கடவுள் என்ற எண்ணம் (Concept) தான் முலப்படிவமே தவிர சிலுவையோ சிவலிங்கமோ மூலப்படிவங்கள் அல்ல. சிலுவை யும் சிவலிங்கமும் கடவுள் என்ற முலப்படிவத்தின் மாதிரிகள் என்று சொல்லலாம்.

தாய் மூலப்படிவம் (Mother Archetype) என்பது பற்றி யும் யூங் விரிவாக விளக்குகிறார். ''இரட்டைத்தாய் மூலப் படிவம்'' (Duel Mother Archetype), ''அருள்தாய் மூலப் படிவம்'' (Benevelant Mother Archetype), ''வீரத்தாய் மூலப்படிவம்'' (Terible Mother Archetype) போன்றவற்றை விளக்க இந்தியத்தொன்மங்களையும் கிரேக்கத் தொன்மங் களையும் சான்றுகளாகக் காட்டுகிறார் யூங். இரட்டைத் தாய் மூலப்படிவத்திற்கு லயர்னோடா டாவின்ஸியின் அன்னி - மேரி (St. Anne and marry) ஓவியத்தையும் கருணைத்தாய் மூலப்படிவத்திற்கு இந்துத் தொன்மத்தி லுள்ள மீனாட்சியையும் வீரத்தாய் மூலப்படிவத்திற்குக் காளியையும் சுட்டிக் காட்டுகிறார்.

யூங்கிய உளவியலில் தேர்ச்சி பெற்ற ஸ்டிவன்ஸ் படைப் பாக்க உலகம் தரும் மூலப்படிவச்சான்றுகளை ஆண் மூலப் படிவம் (Male Archetype) பெண் மூலப்படிவம் (Female Archetype) என இரண்டாகப் பாகுபடுத்தித் தருவார் (Ponnuswami, p.33). இது யூங்கின் அனிமா (Anima), அனிமஸ் (Animas) என்பவற்றோடு மிக இணையானது. ஒவ்வொரு மனித நனவிலி மனதுள்ளும் இந்த அனிமா, அனிமஸ் படிமங்கள் உறைந்து வாழ்கின்றன. அனிமா என்பது பெண் படிமம் என்றும் அனிமஸ் என்பது ஆண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படிமம் என்றும் நாம் புரிந்து கொள்ளலாம். ஆண் மூலப் படிவம் நான்கு வகைப்படும்.



தந்தை : தலைவர், பாதுகாவலர், சமூக சட்டதிட்டங்களைக் காப்பாற்றுபவர்.

மகன் : தன்னலம், சார்ந்திருக்கும் பண்பு, இன்ன பிற பண்புகளை உடையவன்.

தலைவன் : எப்போதும் தகுதியைத் தக்க வைத்துக் கொள்வதில் கவனமானவன்.

வி- நாயகன் : தத்துவவாதி: பண்பாளன், இன்னபிற குணங்களைக் கொண்டவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்மூலப்படிவத்தின் நான்கு வகைகளாவன.



தாய் : சுயநலமின்மை, பிள்ளைப்பாசம், குடும்பப்பாசம் ஆகியவற்றைக் கொண்டவள்.

கற்பரசி : தன் ஆடவனுக்காகக் காத்திருக்கும் பரிசுத்த மங்கை, தனித்துவம் பெற்றவள். பிறவற்றைப் பொருட்படுத்தாதவள்.

வீராங்கனை : சுதந்திரமானவள், ஆற்றல் பெற்றவள், ஆணை வெல்பவள், தாரமாக / தாயாக / சேவகியாக விளங்குபவள்.

விந்தைப் பெண் : இயற்கையிகந்த பண்பாளி.

மேலே காட்டிய ஆண் பெண் மூலப் படிவங்களின் பண்புகள் ஒன்றோடு ஒன்றாய்க் கலந்தும், தனித்தும் வெளிப்படலாம். அவற்றின் பிரதானபண்பு வெளிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டை அடிப்படையாகக் கொண்டு வி- நாயகன் மூலப் படிவம் என்றோ கற்பரசி மூலப்படிவம் என்றோ நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இதுவரை கண்ட யூங்கின் கூட்டு நனவிலி மன விளக்கத்தையும் அந்தக் கூட்டு நனவிலி மனத்துள் கிடக்கும் மூலப் படிவங்கள் பற்றிய விளக்கத்தையும் மனதில் கொண்டு தமிழ்ப் படைப்பு உலகில் நுழைவோம்.

யூங்கியப் பார்வையில் தமிழ்த்தொன்ம உலகிலும் இலக்கிய உலகிலும் நுழையும்போது காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்பச் சிற்சில புற வேற்றுமைகளோடு தம்மை வெளிப்படுத்திக்கொண்ட மூலப்படிவங்கள் நம் கண்ணுக்குப் புலப்படுகின்றன. அவ்வகையில் இங்கு நம் ஆய்வுக்கு ஒரு மூலப் படிவத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

கற்பரசி (Maiden) என்பதை ஒரு மூலப்படிவமாக யூங் கருதுகிறார், படைப்பாழ் மனக்கடலில் இந்தக் கற்பரசி மூலப்படிவம் (Maiden Archetype) காலங்காலமாகக் கிடந்து வந்துள்ளது எனத் துணிகிறோம் (இதற்கிடையில் கற்பு என்பது கல்லா, புல்லா, உள்ளா எனும் சொற்பொருள் சர்ச்சைக்குச் செல்ல இக்கட்டுரை முனையவில்லை என்பதை இங்கு நாம் திட்டவட்டமாக நினைவுபடுத்த விரும்புகிறோம்). இந்தக் கற்பரசி மூலப்படிவம் காலந்தோறும் தன்னைப் பல்வேறு தன்மைகளோடு, வடிவங்களோடு வெளிப்படுத்திக் கொண்டு வந்துள்ளது.

மனித நனவிலி மனதில் கிடந்த இந்தக் கற்பரசி மூலப் படிவத்தைத் தொல் பழந்தேவதைக் கதைகளில் தன்னையறியாமலேயே தேவதைகளாக வெளிப்படுத்தினான் மனிதன். பின்னொரு காலத்தில் கற்பரசி மூலப்படிவம் குறியீடாக வெண்மை நிறத்தின் வழியாக வெளிப்பட்டது. முல்லை மலரின் வழியாக வெளிப்பட முயன்றுள்ளது. இவ்விடத்தில் நாம் இன்னொன்றையும் இணைத்துப் பார்த்தல் நலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயக்கும். சேக்ஸ்பியரின் கற்பரசி மூலப்படிவம் வெண்பனிக் குறியீடாக (Snow) வெளிப்பட முயன்றுள்ளமை எண்ணத் தக்கது. முல்லை மலரும் வெண்பனியும் ஒரே நிறத்தைக் கொண்டவை என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

கூட்டு நனவிலி மனத்தின் பொதிவுகளாகக் (Contents of the Collective unconscious) கிடக்கின்ற மூலப்படிவங்கள் உலகப் பொதுமை வாய்ந்தவை என்பதை முன்னமே கூறினோம். அவ்வகையில் சங்ககாலத் தமிழ்ப் படைப்பாழ் மனதில் கிடந்த கற்பரசி மூலப்படிவமும், சேக்ஸ்பியரின் படைப்பாழ் மனதில் கிடந்த கற்பரசி மூலப்படிவமும் ஒத்த வகையிலேயே அதாவது வெண்மை நிறத்தின் வழியே வெளிப்படுத்திக்கொள்ள முயல்கின்றமை யூங்கின் கருத்தை அதாவது மூலப் படிவங்கள் உலகப் பொதுமை வாய்ந்தவை எனும் கருத்தை உறுதி செய்வதாய் அமைகின்றது.

இடைக்காலத்தில் கற்பரசி மூலப்படிவம் சில புராணப் பாத்திரங்களின் வழியாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. இடைக்காலத்தில் வெளிப்பட்ட கற்பரசி மூலப்படிவச் சான்றுக்குத் தமிழில் அகலிகை பாத்திரத்தைச் சுட்டலாம். கற்பரசியின் மூலப்படிவத்திற்கும் வால்மீகியின் அகலிகைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது இங்குக் கவனிக்கத் தக்கது. ஆனால் கற்பரசி மூலப்படிவத்திற்கும் கம்பரின் அகலிகைக்கும் நிறைய உறவு உண்டு. எனவே தான் பஞ்ச கன்னியராகிய கற்புடை மகளிருள் அகலிகையை யும் ஒருத்தியாகத் தமிழ் உலகம் காட்டுகிறது. அகலிகை, முதலாகக் கற்புடைய மகளிர் ஐவர் எனும் கருத்துத் தமிழில் இருப்பதுபோல் மேலை இலக்கிய உலகிலும் ஹெலன், வீனஸ் போன்ற கற்புடை மகளிர் சிலர் பேசப்படுகின்றனர். இந்த ஆழ்மன மூலப்படிவ ஒப்புமையாக்கமும் எண்ணத் தக்கது.

கம்பரின் அகலிகை ''நெஞ்சினால் பிழைப்பிலாள்''என்றும் ''மாசறு கற்புடை அணங்கு'' என்றும் வசிட்டமுனிவராலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமனாலும் போற்றப்படுகிறாள். எனவே கற்பரசி மூலப் படிவத்தின் இடைக்கால வெளிப்பாடு / இன்னொரு பிரதி அகலிகை எனக் கொள்ளலாம். இந்த அகலிகையைக் கற்பரசி மூலப்படிவமானது தன்னை வெளிக்காட்டிக் கொள்ளப் பயன் படுத்திக் கொண்டது. இந்த வெளிப்பாடு ஓர் அமைப்படிப் படையைக் கொண்டது என்று கூறுவதிலும் எந்தப் பிழையும் இருக்காது. கம்பனின் படைப்பாழ் மனதில் கிடந்த கற்பரசி மூலப்படிவம் ஓர் அமைப்போடு / அகலிகை அமைப் போடு வெளிப்பட்டுள்ளது. இங்கு அகலிகை என்பது, ஓர் அமைப்பு (Structure) எனும் பொருளிலேயே கையாளப்படு கிறது. இந்த அகலிகை அமைப்புப் பெண்ணாக இருந்து கல்லாகிப் போகிறது. இச்செய்தியைத் தற்காலிகமாக இவ்விடத்தில் நிறுத்திக் கொண்டு கற்பரசி மூலப்படிவம் இன்றைய படைப்பாழ் மனத்திலிருந்து எவ்வாறு வெளிப் பட்டுள்ளது எனப் பார்ப்போம்.

இன்றைய படைப்பிலக்கிய எழுத்தாளர்களுள் உளவியல் எழுத்தாளராக (Psychological writter) விளங்கும் ஜெயகாந்த னின் படைப்புகளிலும் இந்தக் கற்பரசி மூலப்படிவ வெளிப் பாட்டைக் காண முடிகிறது. இவரது 'சில நேரங்களில் சில மனிதர்கள்' எனும் நாவலில் வருகின்ற கங்கா என்ற பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம்: இவளும் சரியா தவறா எனத் தேர்ந்து முடிவு செய்ய இயலா மனநிலையில் தன்னை இழக்கிறாள். விரும்பியோ விரும்பாமலோ ஓர் ஆடவனோடு ஏற்பட்டுவிட்ட அந்த நிகழ்ச்சிக்காகத் திருமண வாழ்க்கை எளிதில் கிடைக்கும் வாய்ப்பிருந்தும் அது அப்பாத் திரத்திற்கு முற்றாகத் தவிர்க்கப்படுகிறது. இரண்டாம் முறையாகத் தவற வாய்ப்பு உருவாகும் போது கங்காவாலும் பிறகு கங்காவே உடன்பட்டுத் தவற முனையும் போது அதே பிரபுவாலும் முன் நடந்த நிகழ்ச்சி (Raping) மறுமுறை நிகழ்ந்து விடாமல் மிக எச்சரிக்கையாகத் தவிர்க்கப்படுகிறது. இறுதியில் எந்த ஆடவனாலும் தீண்டப்படாத வகையில் புனித கங்கையாகத் தனிமைப்படுகிறாள். இன்று கங்காவாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்பட்ட கற்பரசி மூலப்படிவம் கால வர்த்தமானச் சூழல்களுக்கேற்ப மேல்மட்டத் தளத்தில் சில புதுப்புதுச் சாயங்களைப் பூசிக்கொண்டு வெளிப்பட்டுள்ளது. அடிப்படை அமைப்பில் கங்கையும் அகலிகையும் ஒன்றுதான்.

ஜெகாந்தனின் கங்காவும் தானாகக் கெட்டவள் அல்லள் என்றும் விபத்து போல நடந்து விட்ட அந்த நிகழ்ச்சிக்காக மனதையும் வாழ்வையும் கல்லாக்கிக் கொண்டவள் என்றும் கெடுக்கப்பட்டவனாலே (பிரபு) அவள் ஓர் தேவதை (Angel) எனவும் போற்றப்படுகிறாள், கற்பரசி மூலப்படிவத்தின் இக்கால வெளிப்பாடு அல்லது இன்னொரு பிரதி கங்கா எனக் கொள்ளலாம். இந்தக் கங்காவைக் கற்பரசி மூலப் படிவமானது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டது. இந்த வெளிப்பாடும் ஓர் அடிப்படையைக் கொண்டது எனக் கூறுவதில் தவறிருக்காது. ஜெயகாந்தனின் படைப்பாழ் மனதில் கிடந்த ஒரு மூலப்படிவம் அல்லது கற்பரசி மூலப்படிவம் ஓர் அமைப்போடு அல்லது கங்கா அமைப்போடு வெளிப்பட்டுள்ளது. கற்பரசி மூலப்படிவம் ஜெயகாந்தனின் படைப்பாக்கங்களில் பல்வேறு பாத்திரங்களின் வழியே தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயல்கின்றமைக்கு ஜெயகாந்தனின் அக்கினிப் பிரவேசம், சுந்தரகாண்டம் போன்ற படைப்புகள் சான்று.

ஆயிரம் ஆண்டுகால இடைவெளியில் வெளிப்பட்ட அகலிகை, கங்கா எனும் இரு வெளிப்பாடுகளின் அமைப்பு நேய ஒருமைப்பாட்டை நோக்கும்போது ஒருமூலப்படிவத்தின் இருபிரதிகள் எனக் கூறுவதில் தவறிருக்காது. இந்த அமைப்பொருமையை இங்குச் சுட்டிக் காட்டுவது எதற்கெனின் படைப்பாளர்கள் வெவ்வேறாகத் தோன்றினாலும் படைப்பாழ் மனதில் கிடக்கின்ற மூலப்படிவங்கள் அடிப்படையில் மாறாப் பொதுத் தன்மை கொண்டவை எனும் யூங்கின் கருத்தை உறுதிசெய்யவே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்பரசி மூலப்படிவம் மேலை இலக்கியப் படைப்பாழ் மனதில் வெண்ணிறப் பனியாகவும், ஹெலனாகவும் கீழை இலக்கியப் படைப்பாழ் மனங்களில் மெல்லிய வெண் முல்லையாகவும் குற்ற மற்ற அகல்யையாகவும் புனிதமான கங்கையாகவும் பிரதி பலிக்கின்றது. இந்த வெண்பனியும் முல்லை மலரும் அகலிகையும் கங்கையும் ஏதோ ஓர் ஒப்புமைத் தன்மையோடு எங்கோ ஓர் அடி ஆழத்தில் சங்கமிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை உணர முடிகிறது. இதைத்தான் சி.ஜி.யூங் உலகப் பொதுமை வாய்ந்த மனித மனம் (Universal Collective Unconscious) எனும் கண்டு பிடிப்பாக உலகிற்கு உணர்த்தினார்.

நாம் மேலே சொன்னவாறு மூலப்படிவ அமைப்பு நேய ஒருமைப்பாட்டை நோக்கும் போது சேக்ஸ்பியராயினும், கம்பனாயினும், ஜெயகாந்தனாயினும் இவர்களது படைப்பாழ் மனங்களில் கிடக்கின்ற கற்பரசி மூலப்படிவம் தன்னை இப்படித்தான் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனப் படைப்பாளனுக்கு ஆணையிடு (Determine) கின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இச்சை உணர்ச்சியின் உயர்வழிப்பாடு,*

(ஃபிராய்டு, குலசேகராழ்வார்)

உயர்வழிப்படுத்தல் (Sublimation) என்பது விரும்பத் தகாத ஓர் ஆசையை வேறு விதத்தில் வழி மாற்றிவிட்டு உயர்வு படுத்துதல். உதாரணமாக மோக இச்சைக்காகத் துடிக்கும் சக்தியைக் 'கலை' அல்லது பக்தியில் ஈடுபடுத்தி உயர்வழிப்படுத்துவதாகும். இச்சை உணர்ச்சியின் ஆவேசம் இவ்வாறு உயர்வழிப்படுத்தப் படுவதால்தான் கலையும் விஞ்ஞான வளர்ச்சியும் உண்டாகின்றன (Freud 1986 : 339 - 478).

உளவியலின் தந்தை என்றழைக்கப்படும் சிக்மண்ட் ஃபிராய்ட் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மனித மனம் பற்றிய பல வியப்பான உண்மைகளை அறிவு பூர்வமாக விளக்கினார். குறிப்பாக அவரது நனவிலி மனம் (unconscious mind) பற்றிய கோட்பாடு மனித மனத்தின் நினைக்க வியலாச் சில அரிய செய்திகளை எடுத்துக் காட்டிற்று. நனவு மனதிற்கு (Conscious mind) எட்டாத தொலைவில் சில உண்மைகள் கிடக்கின்றன என்பதைப் ஃபிராய்ட் உலகிற்கு வழங்கினார். மனித மனம் படைத்த படைப்பாக்கங்களின் (Creative process) பல்வேறு பரிமாணங் களைப் புரிந்து கொள்ளவும் நனவிலிமனக் கோட்பாடு உதவிற்று. அவ்வகையில் உளவியல் துறையின் நனவிலி

---

* புலமை (தொ-16; பகுதி-1) இதழிலிருந்து 19-31, (1990) எடுக்கப் பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனக் கோட்பாடு எவ்வாறு தமிழ் இலக்கியத்தைப் புரிந்து கொள்ள உதவும் என்பதைக் காண இக்கட்டுரை முயல்கிறது. அதிலும் குறிப்பாகச் சிக்மண்ட் ஃபிராய்ட் கூறிய (நனவிலி மனதுள் கிடக்கும்) இச்சை உணர்ச்சி (Id) படைப்பாக்கத்தின் போது எவ்வகையில் வெளிப்படுகிறது / வெளிப்படுத்தப்படுகிறது என்பதையே இக்கட்டுரை விவரிக்கிறது. இத்தகைய ஆய்வு முறையை இட் உளவியல் திறனாய்வு (Id Psychological Critism) என்பர்.

I

உளப்பகுப்பாய்வு (Psycho Analysis) எனப் பொதுவாக அழைக்கப்படும் ஆய்வு முறையில் இந்த இட் உளவியல் ஆய்வு முறையும் அடங்கும். ஃபிராய்டால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஆய்வு முறையை விரிவாக இங்கு விளக்க இடமில்லை. தொடர்புடைய/இன்றியமையாத சில செய்திகள் மட்டும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

மனித மனத்தை ஆராய்ந்த ஃபிராய்ட் மனிதனின் நினைவிற்கு எட்டாத எண்ணப் பொதிகள் கிடக்கும் இடம் நனவிலி மனம் என்றுணர்ந்தார். நனவிலி மனதுள் கிடக்கும் உணர்ச்சிகளை இட் என்றழைத்தார். இட் என்பது இன்ஸ்டிங்ச்சுவல் டிரைவ்ஸ் (Instinctual Drives) என்பதன் சுருக்கம். இந்த இட் என்பது இயற்கை உணர்ச்சி/விலங்குணர்ச்சி/இச்சை உணர்ச்சி எனப் பொருள்தரும் தன்மையது. இட் எனும் இச்சை உணர்ச்சி பால் தன்மை சார்ந்தது என ஃபிராய்ட் கண்டார். முழுதும் பால் தன்மை சார்பான பாலூக்கச் சக்தியை லிபிடோ (Libido) என ஃபிராய்ட் அழைத்தார். இப்பாலூக்கச் சக்தி உடலின் தேவையோடு இணைந்தே இருக்கும் இயல்பினது. இவற்றை உடை உடுத்தா உணர்ச்சிகள் எனக்கூறின் மிகப் பொருந்தும்.

இச்சை உணர்ச்சியின் கொள்கலமான நனவிலி மனம் என்பது முன்னர் கூறியது போல் நனவு மனதின் தொடர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிலிருந்து அல்லது ஆளுகையிலிருந்து முற்றிலும் அப்பாற் பட்டது. இந்த நனவிலிமனம் ஆற்றல் வாய்ந்தது. ஆற்றல் வாய்ந்த நனவிலி உணர்வுகள் இங்குக் கிடக்கின்றன. இவ் உணர்வுகளை நனவு மனத்தால் அமுக்கப்பட்ட உணர்வுகள் எனக் கூறினும் பொருந்தும்.

மேற்சொன்ன இச்சை உணர்ச்சியிலிருந்து வளர்ச்சி பெற்றது ஈகோ (Ego) எனப்படும் தன்னுணர்ச்சி. இது நாம் முன்னர் கூறிய இச்சை உணர்ச்சியின் இயல்பை, அதன் வேகத்தைத்தடைப்படுத்தி மாற்றி அமைத்து வெளி அனுப்பும் இயல்புடையது. இது சமூகப்பண்பாட்டு அங்கீகாரங்களை இச்சை மன விருப்பின் மீது திணித்து அதன் உண்மை இயல்பை மாற்றும் தன்மையது. இச்சை உணர்ச்சி, தன் னுணர்ச்சி எனும் இரண்டோடு பண்பாட்டுணர்ச்சி (Super ego) என்பதைப் பற்றியும் ஃபிராய்ட் கூறுகிறார். இதை மிகைத் தன்னுணர்ச்சி (egoideal) என்றும் கூறுவர். இந்தப் பண்பாட்டுணர்ச்சி சமூக சட்டதிட்டங்களையும் தர்மங் களையும் குறிக்கும். மனிதனால் உருவாக்கிக் கொள்ளப் பட்ட உடலுறவு விலக்கு, ஒருவன் ஒருத்திக்கோட்பாடு, இறைமை, ஆண்மை, பெண்மை இன்னபிற இந்தப் பண் பாட்டுணர்ச்சியுள் அடங்கும்.

இச்சை உணர்ச்சி எப்போதும் உடலின் உதவியோடு தனது தேவையை நிறைவேற்றிக்கொள்ள இடைவிடாது முனைந்து கொண்டிருக்கும் இயல்புடையது. அதே வேளை யில் தன்னுணர்ச்சி இச்சை உணர்ச்சியின் புற உலக ஏற் பின்மையை எடுத்துக்காட்டி அமுக்கும். இந்நிலையில் தொடர்ந்து இந்த அமுக்கம் (Repression) நிகழுமானால் அது மனநோயாக மாறுகிறது. அவ்வாறன்றி அமுக்கப் பட்ட இச்சை உணர்ச்சி நனவு மனதால்/அறிவு உணர்ச்சி யால் இச்சையற்ற உணர்வுகளாக மாற்றி வெளிப்படுத்தும் போது அடிமன அழுத்தம் சற்றுக் குறைகிறது. மாற்றம் பெற்ற உணர்வுகள் படிமங்களாக (Images) வெளிப்படு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றன. அல்லது படிமங்களாக மாற்றி வெளிப்படுத்தப் படுகின்றன (Freud 1986 : 523—533). இவ்வாறு அடிமன உணர்வுகள் மென்மைப்படுத்தப்பட்டு மாற்றியமைக்கப் படுவதை மடைமாற்றம் (Transformation) என்பார் ஃபிராய்ட். ஆற்றல் வாய்ந்த நிர்வாண உணர்வுகள் மாற்றி அமைக்கப்பட்ட படிமங்களின் கீழ் மறைந்திருக்கும். இப் படிமங்கள் தமக்குள் மேலோட்டமான ஒரு போலிப் பொருளை யும் ஆழ் நிலையில் உண்மைப் பொருளையும் கொண்டிருக் கும். அமுக்கப்பட்ட உணர்வுகளின் உண்மை இயல்பை இப்படிமங்கள் உணர்த்தும்.

உளப்பகுப்பாய்வு முறை நனவிலி மனச் செயற்பாட்டை (Unconscious mental process) விளக்க உதவுவதோடு அமுக்கப்பட்ட உணர்வுகள் பற்றிய சில கோட்பாடுகளையும் விளங்கிக் கொள்ள உதவுகிறது. ஃபிராய்ட் அமுக்கப்பட்ட உணர்வுகளைப் பற்றி இருநிலைகளில் விளக்குகிறார். ஒன்று ஏற்கெனவே அமுக்கப்பட்ட உணர்வு (Primal Repression) மற்றொன்று அமுக்கப்பட்ட உணர்வு (Repression) (Freud 1986, : 523 - 533). முன்னது நனவிலி மனதில் நிரந்தரமாக நீக்கப்படமுடியாமல் பல்லாண்டுகளாக அமிழ்ந்து கிடப்பது. ஏற்கனவே அமுக்கப்பட்ட உணர்வு என்பது நனவு நிலையிலோ அல்லது நனவிலி நிலை யிலோ இருக்கலாம். பின்னது இயல்பானதொரு விருப்பம் புறச்சூழலால் எதிர்க்கப்படும்போது அமுக்கப்பட்ட உணர் வாக (Repressed) மாறியதாகும் இந்த உணர்வுகளின் வெளிப்பாட்டைக் கனவிலும் படைப்பாக்கத்திலும் காண லாம். இவற்றை அமுக்கப்பட்டு மீண்ட உணர்வுகள். (Return of the repressed) என்பார் ஃபிராய்ட்.

நனவிலி மன உணர்வுகள் அப்படியே வெளிப்பட முயல் வதை மனதின் தொடக்கச் செயற்பாடு (Primary process) எனவும் இந்த உணர்வுகள் நனவு மனதால் கட்டுப்படுத்தப் பட்டுப் பரிசோதிக்கப்பட்டுச் சமூகச் சூழலுக்கு இசைவான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகையில் கட்டப்பட்ட உணர்வாக மாற்றப்படுவதை இரண்டாம் வகைச் செயற்பாடு (Secondary process) எனவும் அழைப்பர். திரும்பப் பெற்ற மன விருப்பங்களின் உண்மை வடிவங்கள்/செயல்கள் மாற்றியமைக்கப் பெறுவதை அமுக்கப்பட்ட உணர்வின் சமநிலையாக்கம் (Compromise formation) என அழைப்பர்.

அடிமனத்தின் இயல்பூக்கமான பாலூக்கச் சக்தி என்பது மனப்போராட்டத்தில் ஒரு முக்கிய பங்கு வகிப்பதாகப் ஃபிராய்ட் உணர்ந்தார். இந்தப் பாலுணர்வு வெறும் உடல் சார்ந்த தினவு என்பதோடு மட்டும் எண்ணாமல் புறச் சூழலால் அமுக்கப்படும்போது அற்புதமான புனைவுகளாக/கற்பனைகளாக (Fantasies) வெளிப்படும் ஆற்றல் வாய்ந்தது எனக் கண்டார். மனிதன் வெளிப்படுத்தும் கிண்டல் பேச்சுகளிலும் கலைப் புனைவுகளிலும் இந்தப் பாலுணர்வு வெளிப்பட்டிருப்பதை உணர முடியும்.

இயல்பான பாலுணர்வு (புறச்சூழலுக்கு எதிராக) உள்ளவாறே வெளிப்பட இயலா நிலையில் மடைமாற்றத்தின் மூலம் வெளிப்பட்டு ஓரளவிற்கு நிறைவெய்துகிறது. மடைமாற்றம் பெற்ற உணர்வுகள் உயர்வழிப்படுத்தப் பெறுகின்றன. இவ்வாறு உயர்வழிப்படுத்தப் பெறுவதைத்தான் ஃபிராய்ட் சப்ளிமேஷன் என்றார். உயர்வழிப் படுத்தற் கோட்பாடு என்பது விரும்பத் தகாத ஒரு ஆசையை வேறு விதத்தில் வழி மாற்றி விட்டு உயர்வுபடுத்துதல். உதாரணமாக மோக இச்சைக்காகத் துடிக்கும் சக்தியைக் கலை அல்லது பக்தியில் ஈடுபடுத்தி உயர்வழிப்படுத்துவதாகும். இத்தகைய மடைமாற்றச் செயலை ஆராய்வது உளப்பகுப்பாய்வுத் திறனாய்வு (Psycho Analytic Criticism) என்றும் இட் உளவியல் திறனாய்வு (id psychological criticism) என்றும் வழங்கப் பெற்றது.[2] அவ்வகையில் இட் உளவியல் திறனாய்வின் வழிக் குலசேகராழ்வாரின் பாடலொன்று கீழே விளக்கம் பெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

II

கவிஞன் என்பவன் கடவுள் அருளால் கவிபாடும் ஆற்றல் பெற்றவன் என்றும் அற்புதத்திறனும் ஆழ்ந்த புலமையும் பெற்றவன் என்றும் கருதி வந்த நெடு நாளைய கருத்துகள் மேற்கு நாடுகளில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் உடைந்தன. மனத்திலிருக்கும் உணர்வுகளே கலை இலக்கியமாகப் பரிண மிக்கின்றன எனும் உண்மை வெளிப்பட்டது.

தமிழ் இலக்கிய நெடும் பரப்பை நோக்கும்போது சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் அகச் சார்புக் கருத்துகளே மிகுதியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனித மனத்துள் உறையும் பாலுயிர்ச் சக்தியின் வெளிப் பாட்டைக் காணத் தமிழ் இலக்கியப் பரப்புப் பெரிதும் இடமளிக்கின்றது. இதற்குப் புறப்பாடல்களோ பக்திப் பாடல்களோ விதி விலக்கல்ல. சங்க இலக்கியப் பாடல்களில் பாலுணர்வு மிகவும் நாகரீகமான முறையில் வடித்தெடுக்கப் பட்டது. அங்கெல்லாம் இலக்கிய மாந்தரின் பின்புலத்தை விவரிக்கும் போதும் அன்னோரின் இயல்பை விவரிக்கும் போதும் பச்சைப்பாலுணர்வு இலைமறை காயாக வெளிப் படுத்தப்பட்டது. அந்நிலையில்கூட அவையெல்லாம் இலக் கியத்தின் முருகியல் உத்திகளாகத்தான் (Aesthetics of Literature) நம்மால் விமர்சிக்கப்பட்டன. அங்கு மறைந்து கிடந்த உண்மை சரியான முறையில் நம்மால் இனம் பிரித்துப் பார்க்கப்படவில்லை.

சங்கத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கியங்கள் பக்தி இலக்கியங்கள் எனும் பெயரோடு வெளிவந்ததால் இங்கே பாலுணர்வுக்கு/சிற்றின்பத்திற்கு இடமே இல்லை என்பது திட்டவட்டமாகியது. சங்க காலத்திற்குப் பின்னர் பாலு ணர்வு வெளிப்பாட்டிற்குச் சமுதாயத்தடை ஏற்படுகிறது. சமய உலகம் விரிகிறது. உயிர்கட்கே உரிய இயற்கையான பாலுணர்வை வெளிப்படுத்த உரிமை மறுக்கப்படுகிறது, இயல்பூக்க நிலையில் விஞ்சி நிற்கும் காதல் உணர்வு சமயப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போர்வையோடு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. பக்தி இலக்கியத்தில் வெளிப்பட்ட பாலுணர்ச்சி வெளிப்பாடுகள் புனிதத்தன்மையோடு பார்க்கப்பட்டன. மேலும் பக்தி இலக்கியத்தில் வெளிப்பட்ட பாலுணர்ச்சி வெளிப்பாடுகட்குப் பேரின்ப உணர்வுகள் எனும் முத்திரை சமுதாயத்தால் இடப் பெற்றது. பக்தி இலக்கியத்திற்கும் சாதாரண மனித மனத்தில் உறையும் பாலுணர்ச்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று நம்பப்பட்டது.

எல்லா உயிர்க்கும் பாலின்பம் என்பது இயற்கையாகவே இருப்பது என்பதுதான் தொல்காப்பியம். இது சங்கப் பாடல்களில் ஆண், பெண் இணைப்பின் வழிக் காட்டப் பட்டது. பிற்காலத்தில் இதே ஆண் பெண் பாலுறவுதான் கடவுள் மனிதன் உறவாகக் காட்டப்பெறுகிறது. ஜீவாத்மா +பரமாத்மா உறவு என்பதும் அதுவே. இதைக் குலசேகராழ்வாரின் பக்திப்பாடலொன்றின் மூலம் விளக்கலாம். சமயச் சார்பு பெற்ற சமுதாயத்தில் மனித மனதுள் உறையும் இயல்பான பாலுணர்வு உள்ளவாறே வெளிப்பட வாய்ப்பில்லை. அதாவது சங்க இலக்கியத்தில் வெளிப்படுத்தப் பட்ட அளவிற்குக்கூட வெளிப்படுத்த வாய்ப்பில்லை. இந்நிலையில் சமயச் சார்பு பெற்ற சமுதாயத்தால் அமுக்கப் பெற்ற பாலுணர்வு மடைமாற்றத்திற்குப் பின் படிமங்களாக வெளிப்பட்டு உயர்வழிப்படுகின்றன. இதைப் பக்தி இலக்கியங்களில் பரக்கக் காணமுடிகிறது[3]. இதற்குக் குலசேகராழ்வாரும் விதிவிலக்கல்ல என்பதை அவரது பாடல்கள் உணர்த்துகின்றன.

குலசேகராழ்வார் திருவேங்கட மலையில் வாழும் வெங்கடேசப் பெருமானிடம் பத்து பாடல்களின் மூலம் தமது விருப்பத்தை வெளிப்படுத்துகின்றார். தனக்கு இவ்வுலக இன்பங்களில் யாதொன்றும் தேவையில்லை என்றும் மாற்றாகத் திருவேங்கடத்தான் மீதேறி வாழும் குறுகாகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவேங்கடச்சுனையில் மீனாகவும் பிறத்தல் வேண்டும் என்றும் திருவேங்கடக்கோன் எச்சில் வட்டில் பிடித்து அதனுள் புகவேண்டும் என்றும் வேங்கடமலைமேல் செண்பக மலராய் மலர்தல் வேண்டும் என்றும் தம்பகமாய் (தூண்) நிற்றல் வேண்டும் என்றும் வேங்கடமலை மேல் பொற் குவடாய் இருத்தலும் கானாறாய்ப் பாய்தலும் பாதையாய்க் கிடத்தலும் மலைக் கோயிலின் வாசற்படியாய்க் கிடத்தலும் வேண்டும் என்றும் வேண்டுகிறார். குறுகு, சுனைமீன், எச்சில் வட்டில், செண்பக. மலர், தூண், பொற்குவடு, கானாறு, பாதை, வாயிற்படி ஆகியனவாக (வேங்கட மலை யில்) இருத்தல்/பிறத்தல் வேண்டும் என்பதே குலசேகராழ் வாரின் விருப்பங்களாகின்றன. திருவேங்கடவன் மீது பாடிய பத்து பாடல்களிலும் ஆழ்வாரின் விருப்பங்கள் படிமங் களாகவே வெளிவந்துள்ளன. இவை அனைத்தும் ஆழ் வாரின் மன உணர்வைத் தாங்கி நிற்கும் படிமங்கள் எனலாம். இந்தப் படிமங்கள் மனித மனத்தில் கிடக்கும் பாலுணர்ச்சியின் மாற்று வடிவங்களே. குலசேகராழ்வார் தானறியா நிலையில்/நனவிலி நிலையில் தனது பாலியல் உணர்வையே இப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வுண்மையை மறைத்து நிற்பவை பாடலில் வெளிப் பட்டுள்ள படிமங்கள்தான். இந்த வேறுபாடு மடைமாற்றத் தால் நிகழ்ந்துள்ளது.

இனிமேற்சொன்ன படிமங்களுள் ''சுனைமீன்'' எனும் ஒரு படிமத்தை மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள் வோம். மீன்படிமம் கீழ்க்கண்ட ஆழ்வாரின் பாடலில் பின் வருமாறு வெளிப்பட்டுள்ளது.

> ''ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
> வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
> தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
> மீனாய்ப் பிறக்கும் விதியுடை யேனாவேனே''

(1986: 648)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கண்ட பாடலில் ஆழ்வார் தாம் இதுநாள்வரை அனுபவித்த அரச வாழ்வும் அரம்பை முதலான தேவ கன்னிகையர் தந்த சுகபோகமும் இன்னபிற செல்வங்களும் வாழ்நாளும் வேண்டியதில்லை என இன்ப உணர்வுகள் அனைத்தையும் எடுத்தெறிந்துவிட்டு வேங்கடேசப் பெருமான் உறைகின்ற வேங்கிட மலையில் உள்ள சுனையில் மீனாய்ப் பிறத்தல் மட்டும் வேண்டும் என ஏன் சொல்கிறார் எனும் வினா எழுகிறது. இவ்வினாவிற்கு வழக்கமாக எழுந்த உரை விளக்கங்கள் நமக்குத் தெரிந்தவைதான். அதாவது பெண்ணின்பம் பேரரசு போன்றவற்றை விடப் பெருமாளின் கிருபை பெரியது. இந்தப் பெருமாளின் கிருபையை அடைவது சாமான்ய மனிதனுக்கு இயல்வதல்ல. மனிதனினும் உயர்ந்தது மாலவனின் மலைச் சுனையும் சுனையின் மீனும். அன்னோனின் குளத்து மீன், கோயில்படி போன்றவை மனிதப் பிறவியினும் உயர்ந்தவை. அரசபோகம், அரம்பை சுகம், இன்னபிற செல்வங்கள் ஆகியவற்றினும் உயர்ந்தது சுனைமீன் எனும் சமயம் சார் விளக்கங்களே யாகும்.

இனி, மேலே எழுந்த வினாவிற்கு உளவியல்சார் விளக்கத்தைக் காண்போம். ஆழ்வாரின் மனம் மீனாய்ப்பிறத்தல் வேண்டும் என்றும் அடுத்து அப்படிப் பிறந்தாலும் வேங்கடச் சுனையில்தான் பிறக்க வேண்டும் என்றும் விரும்புகிறது. மீன் பிறவியும் வேங்கடச்சுனை வாழ்வும் வேண்டல்களாகின்றன. ஆழ்வார் நனவு நிலையில் (conscious Stage) தமது எண்ணத்தை மீன். சுனை என்ற படிமங்களின் வழியே வெளிப்படுத்தியுள்ளார் என்பது தெரிகிறது. நனவு நிலையில் வெளிப்பட்ட இப்படிமத் தோற்றங்களின் கீழ் ஒளிந்திருக்கும் உண்மைப்பொருள் என்ன என்பது இங்கு எழுகின்ற வினா. கனவுத் தொழிலில் (Dream process) நனவிலி நிலையில் படிமத் தோற்றங்கள் வெளிப்படுவதுபோலப் படைப்புத் தொழிலிலும் (Creative process) படிமங்கள் தோன்றும் என்பதை ஃபிராய்ட் தொடக்கக்காலங்களில் விளக்கினார். மனிதனின் உறக்க நேரத்தில் நனவு மனம் ஓரளவிற்கு அயர்ந்திருந்தாலும் நனவிலி மன வெளிப்பாட்டை நனவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனம் தணிக்கை செய்தே கனவுகளை வெளியிடுகிறது. அதாவது நனவிலி மன உணர்வுகள் தனது பச்சைத்தனத்தோடு உறக்கத்தில் வெளிப்பட முயலும்போது நனவுமனம் அவ்வுணர்வுகளைப் படிமங்களாக மாற்றிக் கனவுகளின் வழியே வெளித்தள்ளும். இந்நிலையில்தான் படைப்புத் தொழிலும் கனவுத்தொழிலும் அடிப்படையில் ஒரே தன்மை வாய்ந்தவை என்பதைப் ''படைப்பாளரும் பகற்கனவும்'' (Creative writers and Day dreaming) எனும் கட்டுரையின் வாயிலாக ஃபிராய்ட் நிறுவினார் (1972: 36-42).

கனவுக்கு அல்லது கனவில் தோன்றும் படிமங்கட்கு உட்பொருள் இருப்பதுபோல் படைப்புக்கு அல்லது படைப்புத் தொழிலில் வெளிப்படும் படிமங்கட்கும் உட்பொருள் உண்டு என்பது அறியப்பட்டது. கனவுப்படிமங்களை ஆராய்வது போன்றே படைப்புப் படிமங்களையும் ஆராய முடியும் என்பது துணியப்பட்டது. கனவு/ படைப்பு இவற்றுள் படிமங்கள் வெளிப்பட்டுத் தோன்றும் போது குவிந்த வடிவில் (Convex) தோன்றினால் அவை ஆண்குறியையும் (Pennis / Phallic Images) குழிந்த வடிவில் (Concave) தோன்றினால் குறிப்பாகக் குளம், குட்டை, கடல், நிலம் (தட்டை) போன்றவை தோன்றினால் அவை பெண் குறியையும் (Vegina / Gynaic Image) சுட்டும் என்றார் ஃபிராய்ட். மேலும் இவர் இப் படிமங்கள் இயங்கும் இயல்புடன் (Flying movement) வெளிப்பட்டால் அது கலவிச் செயலையும் (Inter Course) குறிக்கும் என்றார்.

மேற்சொன்ன உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆழ்வார் பாடலின் படிமங்களை நோக்கும் போது அப்பாடலில் வெளிப்பட்ட மீன்படிமம் ஆணுறுப்பையும் குளம்/ சுனைப் படிமம் பெண் உறுப்பையும் சுட்டுகிறது எனக்கொள்ளலாம். அடுத்துச் சுனையில் மீன் எனும்போது சுனையில் மீன் நீந்திக் களித்தல் என்பது இயல்பானது. சுனையில் மீன் நீந்திக் களித்தல் என்பது கலவி இன்பத் தொழிலையே சுட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. ஆனால் கலவித் தொழில் என்பது எந்தப் படிமத் தோற்றத்தின் மூலமும் வெளிப்படுத்தப்படாமல் 'சுனைமீன்' படிமத்திற்குள்ளே புதைக்கப்பட்டுள்ளமை இங்குக் கவனிக்கத் தக்கது. இங்கு இன்னொன்றையும் எண்ணிப்பார்க்கலாம். சுனையின் இயல்பு தன்மையது. சுனையில் இறங்கி நீந்தினால் மகிழ்ச்சி (Pleasure) பெருகும் என்பது உண்மை. ஆண்மையின் வெம்மை பெண்மையின் தன்மையில் சங்க மிக்கும். பெண் தரும் கலவி இன்பம் மகிழ்ச்சியை உண்டு பண்ணும். அதாவது சுனையில் மீன் ஆடுதல்போல.

இக்கட்டுரையின் இறுதியில் நாம் சொல்ல விழைவது, வேங்கடவன் மீது குலசேகராழ்வார் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாடல் எனும் வகையிலேயே மேற்கண்ட பாடலுக்குக் காலங்காலமாகப் பொருள் விளக்கம் தரப்பட்டு வந்துள்ளது ஆனால் உண்மையில் இங்குப் பேசப் பட்டது பக்திச் சுவை அன்று, காமச்சுவைதான். அதாவது ஆண், பெண் (man+woman) பாலுறவு (Sexual Relationship) தான் இங்கும் பேசப்பட்டுள்ளது.

சங்க காலம் இயற்கை நெறிக்காலம். இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தியகாலம். அன்று மனத்துள் கிடக்கும் இயல்பான பாலுணர்வு இலக்கியத்தில் வெளிப்படுத்தப் பட்டது. இயற்கை நெறி வாழ்வு பிறழ்ந்து சமயநெறி வாழ்வு தோன்றியது. இக்காலச் சமுதாயத்தால் இயல்பான ஆண், பெண் உறவைப்பாடுதல் தடுக்கப்பட்டது. தடைப்படுத் தப்பட்ட பாலுணர்வு அனுமதிக்கப்பட்ட மாற்றுருவத்தோடு அதாவது பக்தி உணர்வு எனும் பெயரோடு சமுதாயம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பக்திப் போர்வையில் வெளிப்பட் டுள்ளது. குலசேகராழ்வார் பெண்ணின்பம் முதலான சுக போகங்களைத் தமது அரச வாழ்வில் அனுபவித்துச் சுவை கண்டவர். சுகபோகங்களையெல்லாம் உதறிவிட்டு அவர் இறைவனை நோக்கி ஓட முயன்றாலும் உயிரோடும் உட லோடும் கலந்துகிடக்கும் பாலுணர்வு அவரறியா நிலையில் அல்லது நனவிலி நிலையில் படிமங்களாக அவரிடமிருந்தே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்படுகின்றன. குலசேகராழ்வார் ஆண் பெண் பாலுற வைத்தான் பேசியுள்ளார். இந்த உண்மை சமயப் போர்வை யோடு வெளிப்படும்போது பாலுணர்வு பக்தி உணர்வுபோல் தோன்றுகிறது வேங்கடவன் எனும் இறைவன் பெயர் இடம் பெற்றமையினால் மட்டுமே இப்பாடல் சமயச்சார் புடையதாகத் தோன்றுகிறது. இந்த ஒரு சொல்தான் பாலுணர்வைப் பக்தி உணர்வாக மாற்றிக்காட்டுகிறது. இந்த ஒரு சொல்லே இப்பாடலின் உண்மைப் பொருளை/ ஆழ்நிலைப் பொருளை ஊடுருவிக்காண இயலாமல் தடைப் படுத்துகிறது. உளப்பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி இப்பாடலின் உண்மைப் பொருளை/ இப்பாடலைப்பாடிய உண்மை மனத்தை அறிய முடிகிறது.

இயல்பான உணர்வுகள் அமுக்கப்பட்டு மடைமாற்றம் பெறும் போது படிமங்களின் விளைவால் உணர்வுகள் கலைத் தன்மையை அடைகின்றன. ஆண் பெண் உறவில் பாலுணர்வை வெளிப்படுத்துதல் என்பது ஒரு காலத்திய இலக்கியப் படைப்பாகவும் மனிதன்+ கடவுள் உறவில் பாலுணர்வு வெளிப்படல் என்பது மற்றொரு காலத்திய இலக்கியப் படைப்பின் போக்காகவும் தெரிகிறது. இக்கட்டு ரையின் பிழிவைக் கீழுள்ள காதல் முக்கோணவரை படத்தின் மூலம் காட்டலாம்.

1. உண்மை வழிப்பட்டது
(Original)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. உயர்வழிப்பட்டது
(Sublimated)

3. மடைமாற்றம்
(Transformed)

குறிப்புகள்

1. இக்கட்டுரையில் ஃபிராய்டின் கோட்பாடுகளே முழுக்க முழுக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளதால் இன்றியமையா இடங்களைத் தவிர ஏனைய இடங்களுக்கு அடிக்குறிப்பு விவரம் தருதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

2. இத்திறனாய்வுமுறை மேலும் கூர்மை பெற்றுப் பிற்காலத்தில் பண்பாட்டு உணர்வு உளவியல் திறனாய்வு (Ego Psychological criticism) எனும் பெயரில் வளர்ந்தது. இத்திறனாய்வு முறையை வளர்த்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஏர்னெஸ்ட் க்ரீஸ் (Ernest kris), நார்மன் என். ஹலெண்ட் (Norman N. Holand), சைமன் ஓ. லெஸ்ஸர் (Simon O. Lesser) போன்றோராவர்.

3. ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள் அமுக்கப்பட்ட பாலுணர்வின் வெளிப்பாடுகள் எனத் தமிழவன் நிறுவுகிறார். காண்க. தமிழவன், ''திருப்பாவை ஓர் அமைப்பியல் ஆய்வு,'' 'மேலும்' நவம்பர் 1989.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வி-நாயக மூலப்படிவம் * 1

(ஃபிராய்ட், சி. ஜி. யூங். விநாயகர் புராணம், ஜெயகாந்தனின் ரிஷிமூலம்)

புராண இதிகாசங்களில் இடம் பெற்ற கருத்துக்கள் தற்கால இலக்கியங்களில் பிரதிபலிக்கும்போது கால, இடச் சூழலுக்கு ஏற்பப் புதிய ஆடையைப் புனைந்து கொண்டு புதியபாணியில் வெளிப்படும் (Yung 1972 : 183). இந்த வெளிப்பாடு இருவகையில் நிகழலாம். ஒன்று, படைப்பாளன் நல்ல நனவு நிலையில் (Conscious level) இருந்துகொண்டு அக்கருத்தை வெளிப்படுத்துவது. இரண்டு, படைப்பாளனால் நனவிலி நிலையில் (Unconscious level) வெளிப்படுத்தப் படுவது.

படைப்பாளன் நனவு நிலையில் தொன்மக் கதைகளைத் தற்கால இலக்கியங்களில் வெளிப்படுத்தியமைக்குச் சான்றாகப் பாரதியாரின் பாஞ்சாலி சபதம், புதுமைப்பித்தனின் அகல்யை, போன்ற கதைகளைக் கூறலாம். இங்கெல்லாம் படைப்பாளன் நனவு நிலையிலேயே தொன்மக் கருத்துக் களைக் காலத்திற் கேற்றவாறு சற்றுமாற்றிப் படைத் துள்ளான். வாசகன் நிலையிலும் இதுபோன்ற படைப்பு களைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏதுமில்லை.

நனவிலி மன வெளிப்பாடு எனும்போது தனிமனித நனவிலி மன (Personal unconscious mind) வெளிப்பாடு

---

* புலமை (தொ - 17; பகுதி - 1) இதழிலிருந்து 1 - 13 (1991) எடுக்கப் பெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும் பொதுமனித நனவிலி மன (Impersonal unconscious mind) வெளிப்பாடு என்றும் இரண்டாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது (Yung, 1980 : 60-61). முன்னது ஃபிராய்டிய அடிப்படையிலானது. பின்னது யூங்கிய அடிப்படையிலானது.

நனவிலி நிலையில் தொன்மக் கருத்துகள் வெளிப்படல் எனும்போது அது நாம் மேலே சொன்ன யூங்கிய பொது மனித நனவிலி மன வெளிப்பாட்டோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது. இந்தப் பொது மனித மனதைத்தான் கூட்டு நனவிலி மனம் (Collective unconscious mind) என்றும் இந்தக் கூட்டு நனவிலி மனதுள் காலங்காலமாகக் கடத்தப் பட்டு வருபவை மூலப்படிவங்கள் (Archetypes) என்றும் இந்த மூலப் படிவங்கள் மனித வர்க்கத்திற்கே பொது வானவை என்பதால் இவற்றை உலக மூலப்படிவங்கள் (Universal Archetypes) என்றும் யூங் விளக்கினார்.

கூட்டு நனவிலி மனதின் வழியே கடத்தப்பட்டு வரும் மூலப்படிவங்கள் மனிதனது கனவு, சமய வெளிப்பாடு, கலை இலக்கியம், புராணங்கள், புனை கதைகள் போன்றவற்றில் குறியீட்டுத் தன்மையுடன் (படைப்பாளனறியா நிலை யில்) வெளிப்படலாம் (Neill : 31). யூங்கின் மூலப்படிவ ஆராய்ச்சியில் கண்டறியப்பட்ட வி-நாயக மூலப்படிவம் என்பது இந்தியப் படைப்பாக்கங்களுள் வெளிப்பட்டுள்ள தன்மையைக் காண இக்கட்டுரை முயல்கிறது. விநாயக மூலப்படிவம் தொன்மங்களிலும் தேவதைக் கதைகளிலும் வெளிப்படும்போது உற்ற உதவியாளனாகவும், தக்க துணை வனாகவும், அற்புத நவிற்சியாளனாகவும் வெளிப்படலாம் எனக் கூறப்படுகிறது (Neill : 182). இதை நிறுவ இந்தியப் புராணங்களுள் ஒன்றான 'விநாயகர் புராணமும் தமிழில் தற் காலப் படைப்பாக்கங்களுள் ஒன்றான ஜெயகாந்தனின் 'ரிஷிமூலம்' எனும் நாவலும் ஆய்விற்கு உட்படுத்தப் பட்டுள்ளன,

யூங்கின் கூற்றுப்படி மூலப்படிவங்கள் பால்சார்புத் தன்மையுடனும் வெளிப்படலாம் (Neill : 31). என்பதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறியும் போது அவர் கூறும் வி-நாயக மூலப்படிவம் இந்தியப் படைப்பாழ் மனங்களிலிருந்து பால்சார்புத் தன்மையுடனும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது என்பதை உணர முடிகிறது. எனவே தான் இவ்விநாயக மூலப்படிவம் ஃபிராய்டிய அடிப்படையிலும், யூங்கிய அடிப்படையிலும் விவரிக்க இடம் தருகிறது. இனி நாம் மேற்சொன்ன இரு படைப்புகளுக்குள்ளும் நுழைவோம்.

விநாயக புராணத்தின் கதைத் தலைவன் விநாயகன். இவன் தனக்குத் தாயைப் போலவே பெண் வேண்டும் என விருப்பம் கொள்கிறான். தாயைப் போன்ற பெண் கிடைக்கும் வரை தான் பிரம்மச்சாரியாகவே வாழ முடிவு செய்து குளத் தங்கரை அரச மரத்தின் கீழ் அமர்ந்து விடுகிறான். தாயைப் போன்ற பெண் கிடைக்கும் வரை சந்நியாசத்தை மேற் கொள்ளும் விநாயகனையே குளத்தங்கரை அரசமரத்தின் கீழ் காண முடிகின்றது. தமிழகத்தில் உள்ள கோயில்களும் பெரும் பாலும் நமக்குச் சந்நியாசி விநாயகனையே காட்டு கின்றன[2].

ரிஷிமூலம் எனும் நாவலின் கதைத் தலைவன் ராஜா ராமன், இவன் தன் தாய் மீது மாறாக் காதல் கொண்டுபெற்ற தாயோடு கனவு நிலையிலும், வளர்ப்புத் தாயோடு நனவு நிலையிலும் உடலுறவு கொண்டு இறுதியில் வாழ்வில் நிலைக்க இயலாமல் வாழ்க்கையை வெறுத்துச் சந்நியாசி யாகி கங்கைக் கரையில் அலைந்து திரிகிறான். கங்கைக் கரையில் பரதேசியாகி முகம் முழுதும் தாடியும் மீசையும் வழிய நீண்டு வளர்ந்த அழுக்கேறிய காவிநிறக் கந்தலையும் அணிந்து உலகத்தின் பார்வைக்கு ரிஷியைப் போலத்தோற்ற மளிக்கும் ராஜாராமன் கதையின் முடிவில் உடன் பிறந்த வனின் வற்புறுத்தலால் கங்கைக் கரையைவிட்டுக் காவிரிக் கரையில் வந்து தஞ்சம் புகுந்து விடுகிறான். இது ரிஷிமூலம் காட்டும் கதை.

விநாயக புராணத்தையும் ரிஷிமூலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மேலோட்டமான நிலையில் விநாயகர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைக்கும் ரிஷிமூலம் கதைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லாதது போல் தெரிகிறது. சற்று ஆழ்ந்து பார்க்கும் போது, ரிஷிமூலம் நாவலின் உள்ளே நாம் மேற்சொன்ன விநாயக புராணத்தின் நிழல் படிந்திருப்பதைக் காண முடிகிறது. அடிப்படையில் அல்லது விதைநிலையில் ரிஷிமூலமும் விநாயகர் கதையும் ஒத்துப் போவதை உணரமுடிகிறது. தாய்மோகம் கொண்ட மேற்சொன்ன இருவரும் ஒரே முடிவையே எய்துகின்றனர், விநாயகருக்குக் குளத்தங்கரை அரச மரத்தடியும், ராஜாராமனுச்கு காவிரிக்கரை மயான மண்டபமும் இறுதியாக மிஞ்சுகின்றன. இருவரும் விரும்பிய வாழ்வு கிடைக்காமல் துறவிக் கோலம் கொள்கின்றனர். விநாயக புராணத்தில் விநாயகனின் அதீத ஆற்றலும் ஞானத் தெளிவும் பலபடப் பேசப்பட்டுள்ளன. ஞானமுதல்வனான விநாயகன் ஞாலத்திற்கே முதல்வனாகக் (முதற்கடவுள்) காட்டப்படுகின்றான். ரிஷிமூலம் நாவலில் ராஜாராமனும் தெய்வ நிலைக்கு ஏற்றிப் பேசப்படுகின்றான். ராஜாராமன் வேதக் கல்வியும் ஞானத்தெளிவும் பெற்றவனாகக் காட்டப் படுகின்றான். ராஜாராமன் ஒரு வேதவித்து எனப் பிறரால் போற்றப்படுகின்றான். சாதாரண மனிதர்களிடமிருந்து இவன் பெரிதும் வேறுபடுத்திக் காட்டி உயர்த்தப்படு கின்றான். இச் செய்திகள் ரிஷிமூலம் நாவலில் பின்வரு மாறு விவரிக்கப்பட்டுள்ளன.

> ''ராஜாராமன் இளவயதிலேயே அதீத ஞானமும் வைதீக ஆசாரங்களும் கொண்டிருந்தான். ராஜாராமன் ஆரம்பத்தில் அக்ரஹாரத்து வேதபாட சாலையில் பயின்றவன் (ப.22). இந்த ராஜாராமன் மட்டுமே தாயற்ற குழந்தை போல் தோன்றுவான். அவன் தாய் உயிரோடு இருக்கும் போதே கூட இப்படித்தான் தோன்றுவான். அவன் கண்களில் சுடர் விடும் ஏதோ ஒன்றில் அவருக்கு என்னமோ ஒரு மயக்கம். முன்புரம் சிரைத்த குடுமியும், காதில் சிவப்புக்கல் கடுக்கனும், முழங்கால் வரை உயர்த்திக் கட்டிய சிவப்புக் கரையிட்ட துண்டும் மெலிந்து சிவந்த உடம்பில் விலா எலும்புகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரியும். மார்பின் மேல் பூணூலும் காண இவன் ஒரு வேதவித்து எனத்தோன்றும் (பக். 25-26). ராஜாராமன் நன்றாகப் பாடுவான். அவன் குரல் ஏதோ ஓர் இனிமையான வாத்தியம் போல் ஒலிக்கும் அவன் சங்கீதம் பயின்றதில்லை. இருந்தாலு சுருதி சுத்தமாக இருக்கும். தாளம் தவறாது (ப.26). இந்தக் காலத்திலே எந்தப் பிள்ளை ரெண்டு வேளையும் சந்தியா வந்தனம் பண்றது? இவ்வளவு பூஜை பண்றது? இவ்வளவு விரதம் இருக்கு? (பக். 30-31).

ராஜாராமனின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு அந்த ஜோசியர் வானளாவப் புகழ்ந்தார். இது உங்கப் பிள்ளையினுடைய ஜாதகம்னா சொல்றேள்? இது யாருக்குமே பிள்ளையா இருக்குற ஜாதகம் இல்லை ஸ்வாமி......... பெத்தவள் இதைத்தன் பிள்ளைன்னு நினைச்சுண்டிருந்தால் அது அவாள் மாயை. உங்க மாயையைக் கட்டிண்டு நீங்களே அழுங்கோன்னு ஜாதகக் காரன் விலகிப் போயிடுவான். இந்த ஜாதகத்துக்குரியவன் ஒரு ரிஷி (ப.41)".

ராஜாராமனின் மேற்கண்ட பக்கங்களும் நமக்கு விநாயக நிலையோடு இவனை இணைத்துப் பார்க்க உதவுகின்றன,

தாய்மோகம் கொண்ட இவ்விருவரது மன ஒருமைப் பாட்டை நோக்கும்போது விநாயகருக்குள்ள தாய் மோகம் தாயைப் போன்ற பெண் வேண்டும் இல்லையேல் வாழ்வு வேண்டேன் என்ற அளவில் மட்டுமே வெளிப்படுகிறது. ஆனால் ரிஷிமூலம் நாவலில் ராஜாராமனின் தாய்மோகம் சற்று வெளிப்படையாகவே காட்டப் பெறுகின்றது. அதாவது நனவிலி நிலையில்/கனவில் தாயோடு உடலுறவு கொள் வதாகக் காட்டப் பெறுகிறது. இந்தத் தாய் மோகத்தை ஒரு மனநோயாகக் கண்டார் ஃபிராய்ட். இந்த மனநோயின் வெளிப்பாடு தந்தை தனயன் போராட்டமாக வெளிப்படும் என்பதை ஃபிராய்ட் விளக்கினார் (1986 : 403). இந்தப் போர் விநாயகன் வாழ்விலும் இடம் பெறுகிறது. இதைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிவபுராணம் விநாயக, சிவன் போரின் வழியே வெளிப் படுத்துகிறது (1985). இந்தத் தந்தை தனயன் போரின் விளைவு விநாயகன் வாழ்வில் தன் தலையை இழந்து போவ தாகக் காட்டப் பெறுகிறது. ரிஷிமூலம் நாவலிலும் தந்தை தனயன் போராட்டம் ராஜாராமனின் மனப் போரின் வழியே காட்டப்பெறுகிறது. ராஜாராமன் தன் தந்தையைப் பற்றிக் கொண்டுள்ள வக்கிர உணர்விற்குக் கீழே காட்டப்பட்டுள்ள ராஜாராமனின் எண்ணவோட்டமே சான்றாக விளங்குகிறது.

''இந்த அப்பா என்னைக் கொஞ்சறது ரொம்பப் புத்தி சாலின்னு மெச்சிக்கிறது தட்டிக் கொடுக்கிறது எல்லாமே ஒரு வேஷம்னு எனக்கு அப்பவே புரிஞ்சிடுத்து.

ராத்திரியிலே எல்லோரும் தூங்கினப்புறம் திருடன் மாதிரி எங்களையெல்லாம் கூடத்திலே படுக்க வைச்சிட்டு அந்த அறைக் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே நுழையராரே அந்தத் திருட்டு அப்பா மட்டுந்தான் உண்மை. பகலெல்லாம் பார்க்கிற அப்பா பொய். என்னை ஏமாத்தறார் இவர். எனக்கும் இவாளை ஏமாத்த முடியும். எனக்கு மட்டும் முடியாதோ (பக். 60-61),

அம்மா செத்து போனாள் எல்லோரும் 'ஓ'ன்னு அழுதா எல்லோரும் அழறதைப் பார்த்து நானும் கொஞ்சம் அழுதேன்....... அப்பா நினைச்சு நினைச்சு அழுதார். திடீர்னு உட்கார்ந்த இடத்திலே முகத்திலே துண்டைப் போட்டுண்டு அழுவார். அப்போல்லாம் என் மனசுக்குள்ளே சுகமாயிருக்கும். நன்னா வேணும்னு மனசுக்குள்ளே சொல்லின்டேன் (ப. 66)".

இந்த மனப்போரின் விளைவு விநாயகனைப் போலவே ராஜாராமனையும் உலக வாழ்விலிருந்து விரக்தி கொள்ளச் செய்கின்றது.

தாய் மோகத்தின் முடிவு விநாயகரைக் குளத்தங் கரைக்குக் கொண்டு செல்கின்றது. விநாயகன் தனக்கென இறுதியில் தேர்ந்தெடுத்த இடம் குளக்கரை எனத் தெரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. இதை மேலோட்டமாகப் பார்க்கும்போது நீர் நிலையாக மட்டுமே தெரிகின்றது. ஆனால் ஃபிராய்டிய நோக்கில் அங்கே வேறொரு உண்மை ஒளிந்து கொண்டிருப்பது புரிகிறது. மனித மனதை ஆட்கொண்டிருக்கும் பாலூக்கச் சக்தி இங்கே வெளிப்பட்டிருப்பது புலப்படுகிறது. விநாயகன் தனது பால் உள வெளிப்பாட்டிற்குத் தடை ஏற்படும்போது விரக்தி அடைந்து அதிலிருந்து விடுபட முனைகின்றான். ஆயினும் உடலோடும் உணர்வோடும் கலந்து கிடக்கும் பாலுணர்வு இங்கே அவனது இடத்தேர்வின் வழியே மறைந்து வெளிப்பட்டுள்ளது. விநாயகன் தேர்ந்தெடுத்த குளம் என்பது பெண்குறிக் கற்பனை (Gyanic image) தான். குளம் என்பது பெண்குறியின் மாற்றுவடிவந்தான். இதை நாம் இன்னொரு கருத்தின் வாயிலாகவும் உறுதிப்படுத்தலாம். தமிழக நாட்டுப்புறப் பண்பாட்டில் விநாயகச் சதுர்த்தி விழா கொண்டாடப்படுவது நாம் யாவரும் அறிந்ததே. பிரம்மச்சாரி விநாயகனுக்குப் பழங்கள், தானியங்கள், மலர்கள், கொழுக்கட்டை, கடலை, போன்றவற்றை வைத்துப் படைத்து மக்கள் தங்கள் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்வர். பின்பு அன்று மாலையோ (அ) மூன்றாம் நாள் மாலையோ கிணற்றிலோ, குளத்திலோ, கடலிலோ கொண்டு சென்று, விட்டுவிட்டு வருவது வழக்கம். விநாயகச் சதுர்த்தி விழாவின் இறுதிக் கட்டமாக நிகழும் இச்செயலை ஃபிராய்டியக் கண்கொண்டு பார்க்கும் போது பின்வரும் உண்மை புரிகிறது. இங்குக் குளம், கிணறு, கடல் என்பன பெண் படிமங்கள் என்பதை நாம் எளிதில் விளங்கிக் கொள்ளலாம். விநாயகச் சதுர்த்தியின் இறுதிக் கட்டமாக விநாயகனை மேற்சொன்ன குளம்/கடல்/கிணறு என்பவற்றில் கொண்டு சேர்ப்பது பிரம்மச்சாரி விநாயகனைச் சம்சாரி விநாயகனாக்கிச் சாந்திப்படுத்தல் என்பதன் குறியீட்டுச் செயல்பாடு என்பது தெற்றென விளங்குகிறது. இச்செயல் நம் பண்பாட்டு மக்களால் நனவிலி நிலையில் நிகழ்த்தப் படுகிறது. இதைப் பண்பாட்டு நனவிலி (Cultural unconscious) எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதக் கனவில்/படைப்பாக்கத்தில் வெளிப்படும் குழிந்த வடிவுடைய கற்பனைகள் பெண் குறியைச் சுட்டுவனஎன்பதும் குவிந்த வடிவுடைய பிம்பங்கள் ஆண்குறியைச் சுட்டுவன (Phallic Images) என்பதும் யாவரும் அறிந்த ஃபிராய்டிசம். விநாயகன் தனக்குப் பால்வாழ்வு (Sexual life) வேண்டாம் என உதறினாலும் உள்ளே துடித்துக் கொண்டிருக்கும் இச்சை உணர்ச்சி மடை மாற்றம் பெற்று உயர்வழிப்படுத்தப் படுகிறது. இவ்வாறு உயர்வழிப்படுத்தப் பெறுவதால்தான் விநாயகன் அமர்ந்திருக்கும் குளமும் குளத்தங்கரை மரமும் புனிதக் குறியீடுகளாகின்றன. விநாயகப்படைப்பில் நிகழ்ந்துள்ள உயர் வழிப்பாட்டைக் கீழுள்ள வரைபடம் விளக்கும்.

படம்—1	படம்—2
இச்சை உணர்ச்சி (Instinctual Feeling)	துறவு உணர்ச்சி (Spiritual Feeling)
★	★
★ ★	★ ★
ஆண் குறி பெண் குறி	மரம் குளம்
உண்மை வழிப்பட்டது (Original)	உயர்வழிப்பட்டது (Sublimated)

இன்னும் சில நிலைகளிலும் விநாயக புராணவெளிப்பாடு ஃபிராய்டிய ஒளியைப் பாய்ச்சுவதை உணரமுடிகிறது. மனிதக் கற்பனையில் விளைந்த விலங்குத் தலையும் மனித உடலும் கொண்ட விநாயக வடிவமே மனிதனின் நனவு மனதிற்கும் நனவிலி மனதிற்கும் இடையே நிகழும் முரண்பாட்டை / முரண்பாட்டு அமைப்பைப் பிரதிபலிப்பதாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளது. மனிதனின் உடலோடு பிறந்த இச்சை உணர்வுக்குத் தாய், சகோதரி என்ற எந்த வேறுபாடும் இல்லை இந்த வேறுபாடற்ற தன்மைதான் உயிர்களின் இயற்கை. இப்படித்தான் மனிதனும் நெடுங்காலம் வாழ்ந்து இருக்கின்றான், காலப்போக்கில் தேவையையொட்டித் தாய் மகன் உடலுறவு விலக்கு, சகோதரன் - சகோதரி உடலுறவு விலக்கு போன்றவை மனித நனவு மனதால் உருவாக்கப்பட்டன. இயல்பான பாலுறவுக்குத் தாய்-மகன் உடலுறவு விலக்கு, உடன் பிறந்தோர் உடலுறவு விலக்கு எனும் பெயரால் தடை போடப்படும்போது நனவு மனதிற்கும் நனவிலி மனதிற்கும் போர் எழுகிறது. மனிதன் உடலுறவு விலக்குகளை என்று ஏற்படுத்திக் கொண்டானோ அன்றே நனவு மன நனவிலி மனப்போர் தொடங்கி விட்டது எனலாம். இந்த மன உணர்வுகளின் போராட்ட வடிவமாகவே விநாயக வடிவம் விளங்குகிறது. நனவிலி மன உணர்ச்சியின் / இச்சை உணர்ச்சியின் வெளிப்பாடாக விநாயகனின் வேழத்தலை (கற்பனை) விளங்குகிறது. விநாயகனின் மனித உடல் (கற்பனை) பண்பாட்டுணர்ச்சி (Super Ego) யின் வெளிப்பாடாக விளங்குகிறது. இந்த முரண் அமைப்பு விநாயகனின் அகப்பண்பு சித்தரிப்பிலும் வெளிப்படுவதை உணரமுடிகிறது. ஞான முதல்வனாகவும் ஞால முதல்வனாகவும் அளப்பறும் ஆற்றலும் ஆன்மீகத் தெளிவும் கொண்ட விநாயகனிடம் தான் இவற்றிற்கு முரணான தாய் மோகப் பண்பும் குடி கொண்டுள்ளது. இந்த அகப்பண்பு முரண்பாடும் நனவுமன நனவிலி மன முரண்பாட்டின் பிரதிபலிப்பேயாகும். இதே நிலையை ரிஷிமூலம் ராஜாராமனிடமும் காண முடிகிறது. இவனும் அகபுற மனநிலைகளில் இரண்டுபட்டுப்போகின்றான். பிறரின் பார்வைக்குப் புனித மனிதனாகவும் தன் பார்வைக்கு விலங்கு மனிதனாகவும் விளங்குகின்றான். இவன் வாழ்விலும் அகபுற மனப்போர் உக்கிரம் பெறுகிறது. தன்னுள்ளே தான் ஒளிந்து கொள்கிற ராஜாராமனை நாவலில் பரக்கக்காண முடிகிறது. அவற்றில் ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நான் விலகி நின்னு ராஜாராமனைத் தனியாய்ப் பார்க்கிறபோதெல்லாம் எனக்குச் சிரிப்புத்தான் வரது.

நான் அடிக்கடி இவனை இப்படிப் பார்ப்பேன். இவன்போட்ட வேஷத்தையெல்லாம் ஒன்னொன்னா இவன்கலச்சிப் போடறப்போ எல்லாம் இது ஒரு ராஜா ராமன், இது ஒரு ராஜாராமன்னு நான் கணக்கு வச்சுண்டே வந்திருக்கேன்.

என்னை மறைக்கத்தான் இவன் எத்தனை எத்தனைதிரை போட்டான். இவன் கடைபிடிச்ச ஆசாரம் அனுஷ்டானம், விரதம், வேதபாராயணம், பூஜை புனஸ்காரம், ஸமஸ்கிருத சுலோகம், தமிழ்ப்பாடல், படிச்ச படிப்பு, வாங்கின மார்க்கு, வச்சி சிரைச்ச குடுமி, போட்டிருந்த பூனூல் எல்லாம் வேஷம்! என்னை மறைக்க யாரோ கொடுத்ததை இவன் வாங்கிப் போட்ட திரைகள். இதையெல்லாம் விலக்கி அவனுக்கே தெரியாமல் ஒளிஞ்சிண்டிருந்த என்னை நான் பார்த்துப் பார்த்துச் சிரிச்சிருக்கேன் (ப. 49).

மேற்கண்ட ராஜாராமனின் வேஷங்கட்குக் காரணமாக இருப்பது ராஜாராமனின் தாய்மோகம்தான். இவன் இரவு நேரக் கனவுகளில் தாயோடு உடலுறவு கொள்வதும் இதற்குப் பிராயச்சித்தமாகப் பகல் முழுவதும் சாமி அறைக்குள் புகுந்து கொண்டு வேதபாராயணம் ஓதுவதும் உண்ணா விரதம் இருப்பதும் அன்றாடச் செயல்களாகின்றன (ப.69). ராஜாராமனின் இச்சை உணர்ச்சி கனவு வாழ்வாகவும், பண்பாட்டுணர்ச்சி நனவு வாழ்வாகவும் அமைகின்றது. கனவு, நனவு, எனும் முரண்பாட்டமைப்பிற்குள் சிக்கித் தவிக்கும் ராஜாராமனும் நமக்கு விநாயகனைப் போன்றே தோன்றுகின்றான்.

ராஜாராமனின் அக, புற மனப்போரின் உச்சகட்டமாக ராஜாராமனின் பின் வரும் கூற்று அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நான் இரண்டாகிப் போனேன் அதிலே ஒன்று கனவிலே என்னை மயக்கிறது. மகிழ்ச்சி ஊட்டறது. ஆனால் அதுவே முழுச்சுண்ட உடனே என்ன உறுத்தரது. வாள் கொண்டு என் மனசைப் போட்டு அறுக்கிறது. எனக்குள்ளே ஏதோ ஒரு குட்டிச் சாத்தான் புகுந்துண்டமாதிரி என்னை அலைக் கழிக்கிறது. எனக்குள்ளே வந்து உட்கார்ந்துண்டு அசிங்கம் பண்றது. நான் பகலிலே எவ்வளக் கெவ்வளவு ஸ்வாமியைப் பிரார்த்திக்கிறனோ அவ்வளக் கவ்வளவு ராத்திரியிலே இந்த சைத்தான் என்னை ஆளறது. தூங்கினால் எங்கே இந்தக் கனவு வருமோன்னு பல ராத்திரிகள் நான் தூங்காமலே இருந்திருக்கேன். கடைசியிலே இந்தக் கனவு கான்றப்போ ரொம்ப சுகமாயிருக்கும். பகவான் கிட்டே தவிர இதை நான் எந்த மனுஷா கிட்டே சொல்ல முடியும்'' (ப.70).

மேற்கண்ட சான்றுகள் ராஜாராமனின் அக, புற மனப் போராட்டத்தை விளக்குவனவாக உள்ளன. மனிதனின் நனவு மன நனவிலி மனப்போரின் ஒரு காலத்திய வெளிப்பாடாக நமக்கு விநாயகர் புராணமும், இக்காலத்திய வெளிப்பாடாக ரிஷிமூலமும் விளங்குகின்றன.

யூங்கிய நோக்கில் பார்க்கும்போது விநாயகன், ராஜாராமன் ஆகிய இருபாத்திரப் படைப்புகளும் வி-நாயக மூலப் படிவத்தின் குறியீடுகள் (Symbols) என எண்ணலாம். ஒய்ஸ்மேன் (wiseman) எனும் சொல்லோடு தலைமையாளன் / சான்றோன் / மகான் / விநாயகன் / ராஜாராமன்/ ரிஷி எனும் சொற்கள் தொடர்புடையனவாக உள்ளன. விநாயகன் எனும் சொல்லைப் பிரித்தால் வி-நாயகன் என்றாகிறது. அதாவது தலைவர்க்கெல்லாம் தலைவன் எனப்பொருள் பெறுகிறது. விநாயகன் முதற் கடவுள் எனும் கருத்து இங்கு மீண்டும் எண்ணத்தக்கது. அதாவது அனைத்துத் தலைமைப் பண்புகளையும் தனக்கெனக் கொண்ட மகான் (Wise man) எனப் பொருள் விளக்கம் பெறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. இதே போன்ற பொருளையே ராஜாராமன் (ராஜா—ராமன்) எனும் சொல்லும் தாங்கி நிற்கிறது. இந்நிலையில் இவ்விருவரும் அறிவிற் சிறந்த அநுபூதிகளாக வெளிப்பட்டுள்ளனர்.

ஜெயகாந்தனின் ரிஷிமூலம் எனும் சொல்லே யூங்கின் வி-நாயக மூலப்படிவம் எனும் சொல்லோடு மிகவும் பொருந்தி வருகின்ற நிலையைக் காண முடிகிறது. ரிஷிமூலம் என்ற சொல்லை ரிஷி-மூலம் எனப் பிரித்துப் பொருள் கொண்டால் யூங்கிய உண்மை இங்கும் ஒளிந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது. ரிஷி எனும் சொல்லுக்குப் பொருள் எல்லாவற்றையும் துறந்தவன் என்பது. அதாவது தானெனும் உணர்வு அழிந்த நிலையைக் குறிப்பது. இங்கு உளவியல் கூறும் தான்/தன் (Ego) அழிந்து போவதை இந்த ரிஷி எனும் சொல் நமக்கு உணர்த்துகிறது. ரிஷிமூலம் நாவலின் பிற்பகுதியில் ரிஷியாகத் தோன்றும் ராஜாராமன் தான் எனும் உணர்வை ஒழித்தவன் என்பதற்கு அப்படைப்பின் பின்வரும் கூற்றுகள் சான்றுகளாகின்றன.

> ''ஆமாம்; நான்தான். நான் என்கிறது அகந்தையாம். அந்த அகந்தை எனக்கு ரொம்ப உண்டு. நான்தான் அகந்தை; அகந்தைதான் நான். என்னை வைத்துத்தான் நான் எல்லாவற்றையும் அறிகிறேன். என்னிலிருந்து விலகியும் என்னை வைத்துத்தான் நான் என்னையே அறிகிறேன். அதோ ஆற்றின் அந்தப் பக்கம் அக்கரை மேட்டில் வரட்டிகள் அடுக்கி, கட்டைகள் பரப்பி, அந்த விறகுக் குவியலின் இடைவெளியிலும், அடுக்கடுக்காய்க் கரிந்து சாம்பலாகி உதிர்ந்து உள்ளே கனியும் வரட்டிகளின் இடுக்குகளிலும் சிவப்பாய், ஆரஞ்சாய், நெருப்பாய்த் தழல் பொரி பறக்க எரியும் சிதையுள் நிணமும் சதையும் உருகி எலும்பின் சட்டகங்கள் நெக்குவிடக் கம்பீரமாகத் துயில்கிறானே ராஜாராமன்...அதனுள் நான் இல்லை; அகந்தை இல்லை, ராஜாவும் இல்லை; ராமனும் இல்லை...நான் விலகி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்று ராஜா ராமனைத் தனியாய்ப் பார்க்கிற போதெல்லாம் எனக்கும் சிரிப்புத்தான் வருகிறது" (பக். 47-49). நான் இவனை எடுத்துத் தனித்தனியாக் கூறுபோட்டு அலசி அலசிப் பார்த்திருக்கேன். இவனைத் தனியே நிறுத்தி இவனிடமிருந்து நான் தனியே விலகி, என்னாலே இவனை ஆலிங்கனம் பண்ணிக்கவும் முடியும் அழிச்சிடவும் முடியும்" (ப. 57).

மேற்கண்ட கூற்றுக்கள் ராஜாராமனின் தான் (Ego) பற்றிய தெளிதலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சாத்திரங்கள், சமுதாயம், சடங்குகள், தர்மங்கள், நியாயங்கள் சட்டங்கள், தண்டனைகள் இவையெல்லாம் துறந்த நிலையில் / கடந்த நிலையில் இப்பாத்திரம் விவரிக்கப்படுகிறது (ரிஷி. பக். 54-57). ரிஷியான ராஜாராமன் பிரணவத்தைத் தன் தந்தைக்கு ஓதிய விநாயகனைப் போல் முழுக்க முழுக்க ஓர் அறிவு ஜீவியாகக் காட்டப் பெறுகிறான். சமூக அவலங்கள், இழிவுகள், பழமைத் தனங்கள் போன்றவற்றையெல்லாம் மிக ஆழமான நிலையில் நின்று அலசிப் பார்க்கும் மனவீரியம் பெற்றவனாகப் பல இடங்களில் ராஜாராமன் விளங்குகின்றான். வாழ்க்கையைப் பற்றிய அவனது தெளிந்த மன அலசல்களை நாவலில் பரக்கக் காணமுடிகிறது.

இங்குத் தன்னுனர்வு ஒழிந்த ரிஷியை ராஜாராமனை நாம் வி - நாயகன் எனக் கொள்வதில் தவறேதுமில்லை. யூங் கூறும் வி-நாயக மூலப்படிவத்திற்கும் விநாயகன், ராஜாராமன் ஆகிய பாத்திரப் படைப்புகட்கும் நெருங்கிய உறவுள்ளது. மதிநுட்பத்தில் இவ்விருவரும் ஈடு இணையற்றவர்கள் என்பதை விநாயக புராணமும் ரிஷிமூலமும் விரிவாக விளக்குகின்றன. விநாயகன் வெவ்வினைகளைத் தீர்க்க வல்லவனாகவும் அரக்க தேவ போர்களுக்கிடை நின்று நியாயத்தை நிலை நாட்டுபவனாகவும், மனித தேவ குற்றங்களையெல்லாம் மன்னித்து அருள் பாலிப்பவனாகவும்விளங்குகின்றான். ஆன்மீக நிலையில் பல வெற்றிகளையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விநாயகன் ஈட்டுகின்றான். அதேபோல் ராஜாராமனும் சராசரி மனிதர்களின் சபலங்களையும் இன்ப துன்பங்களையும் வாழ்வு தாழ்வுகளையும் இன்ன பிறவற்றையும் வென்றவனாகக் கதையின் முடிவில் தோன்றுகின்றான். நாம் முன்னர் சொன்னது போல் யூங் கூறும் வி-நாயக மூலப்படிவத்தின் இரு குறியீடுகளாக இங்கு விநாயகனையும் ராஜாராமனையும் காணமுடிகிறது. மேற்சொன்ன மூலப்படிவம் கூட்டு நனவிலி மனத்தின் வழியே வெளிப்படும்போது விநாயக புராணத்தின் வழியாகவும், தனிமனித நனவிலி மனத்தின் வழியே வெளிப்படும் போது ரிஷிமூலம் நாவலின் வழியாகவும் வெளிவந்துள்ளது. இம்மூலப் படிவம் மிகப் பழமையானது (Primordial Archetype) என்றும் மனித வர்க்கத்திற்கே பொதுவானது என்றும் கருதலாம். இது காலம், இடம், பண்பாடு போன்றவற்றைக் கடந்து வெளிப்படும் தன்மையது.

இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக் கிரேக்கப் படைப்புலகில் கிடைக்கும் இடிப்பஸ் மன்னன் (The king oedipus) தொன்மம் விளங்குகிறது. இவனை வி-நாயக மூலப்படிவத்தின் கிரேக்க வெளிப்பாடு எனக் கொள்ளலாம். கல்வி (knowledge), ஆளுமை (wisdom), அறிவாற்றல் (cleverness), பரோபகாரம் (Helpfulness), தீர்க்க தரிசனம் (Insight), சீலம் (Moral qualities) போன்ற பண்புகளுடன் 'வி-நாயக' மூலப்படிவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் என்கிறார் யூங் (Peter J-claus, Frank J-koram : 107-108). இடிப்பஸ் மன்னனும் ஈடு இணையற்ற தன் பலத்தால் தன் தந்தையையே வென்று பேராற்றல் நிரம்பியவனாகவும், தாய் என அறியா நிலையில் தாயோடு கூட ஒழுக்கம் புரிந்தமை தெரிய வந்ததும் அப்பாவச் செயலுக்குத் தண்டனையாகத்தன் கண்களைக் குருடாக்கிக் கொண்ட அவனது சீலமும் இன்னபிற பண்புகளும் கொண்டவனாக விளங்குகின்றான் (Greek Mythology : 81).

நாம் மேலே காட்டிய யூங் குறிப்பிட்ட வி-நாயக மூலப்படிவத்தின் பண்போடு இடிப்பஸ் மன்னனின் பண்புகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரிதும் ஒத்துச் செல்வது தெரிகிறது. இவ்வடிப்படையில் நேக்ாகும்போது விநாயகன், ராஜாராமன், இடிப்பஸ் ஆகிய மூவரும் வி-நாயக மூலப்படிவத்தின் வெளிப்பாடுகளே எனத் தெரிகிறது. இம்மூன்றில் விநாயகன்-சமயப் படைப்பு, இடிப்பஸ் - புராணப் படைப்பு, ராஜாராமன் - இலக்கியப் படைப்பு. மேற்சொன்ன மூவருள் விநாயகன் கற்பனை யாக்கம் என்பதற்கும் மேலாக இந்தியப்பண்பாட்டில் கடவுளா கவும் கருதப்படுவது இங்குக் குறிப்பிடத் தக்கது. யூங் இந்த விநாயக மூலப்படிவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது இது கடவுளுக்கு இணையானதாகவும் கருதப்படும் என்கிறார். (Peter J-claus. Frank J-koram : 108). அவ்வகையில் பார்க்கும் போதும் விநாயகன் வி-நாயக மூலப்படிவத்தின் வெளிப்பாடு என்பது புரிகிறது.

குறிப்புகள்

1. யூங்கிய அடிப்படையில் Wise old man எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகத் தமிழகத்தில் வழங்கும் விநாயகன் எனும் சொல்லைக் கருதலாம். அவ்வகையில் யூங்கின் Wise old man Archetype எனும் தொடரை இங்கு நாம் வி-நாயக மூலப்படிவம் எனத் தமிழ்ப்படுத்தலாம்.

2. விநாயகனைப் பற்றிய இக்கதை தமிழகத்தின் நாட்டுப் புறக்கதையாக / எழுதா இலக்கியமாகக் காலங்காலமாக மக்களால் வழங்கப்பட்டு வருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெற்றிக்கண் படிமம்

மனித நனவிலி மனக் கடலில் (unconscious mind) கிடக்கின்ற இச்சை உணர்ச்சி (id) மனிதக் கனவில் இச்சையற்ற வகையில் குறியீடுகளாக (Non sexual Symbols) வெளிப்படும் பான்மையான (Freud 1986: 122). அதேபோல் (கனவிற்குச் சமமான) தேவதைக் கதைகள், புராணங்கள், பழங்கதைகள், நகைச் சுவைகள் (jokes) போன்றவற்றிலும் பாலுணர்ச்சி வேட்கை இச்சையற்ற வகையில் குறியீட்டுத் தன்மையுடன் வெளிப்படும் (Freud 1986 : 124).

மேற்கண்ட ஃபிராய்டின் கூற்றுகட்கேற்ற வகையில் ஆண்குறிக் குறியீடுகளும் (Male genital symbos), பெண் குறியீடுகளும் உடலுறவுவேட்கைக் குறியீடுகளும் தொடர்ந்து படைப்பிலக்கியத்தில் படிமங்களின் வழியாக வெளிப்பட்டுள்ளதை நாம் நிறுவமுடியும்[1]. ஒரு குறிப்பிட்ட படிமம் குறிப்பிட்டதொரு பொருளை உணர்த்த மாறுபட்ட கதைச் சூழலில் திரும்பத் திரும்பப் படைப்புலகில் வெளிப்பட்டுள்ளதைக் காண முடிகிறது, அவ்வகையில் தமிழில் புராணப் படைப்புலகை நோக்கும்போது கண்படிமம் தொடர்ந்து பல் வேறுபட்ட சூழலில் வெளிப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. கண்படிமத்தைப் ஃபிராய்டியக் குறியீட்டுத் திறனாய்வு அடிப்படையில் நோக்கும்போது கண்படிமம் மேல்நிலை அமைப்பில் சமயப் பொருண்மையையும், ஆழ்நிலை அமைப்பில் இச்சைப் பொருண்மையையும் கொண்டுள்ளது. கலைப் படைப்பும் கனவு போன்றே அமுக்கப்பட்ட பாலுணர்வின் குறியீட்டு வெளிப்பாடு எனும் அடிப்படையில் கண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதைப் பாலுறுப்பின் குறியீடு எனக்கருத இடமுண்டு. கண் என்பது படைப்பாக்கத்தில் ஆண் / பெண் பாலுறுப்பு களின் குறியீடாகப் பெரும்பாலும் வெளிப்பட்டுள்ளது (Dundes 1990: 159) என்பதற்குத் தமிழ் இலக்கியத் திலும் உலக இலக்கியத்திலும் ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன[2].

கண் பொதுவாக ஆண்குறி பெண்குறி இரண்டிற்கும் குறியீடாகப் படைப்பாக்கத்தில் வெளிப்பட்டுள்ளமை ஒருபுறம் இருக்க நெற்றிக்கண் படைப்பாக்கம் குறிப்பாக ஆண்குறிக் குறியீடாக மட்டுமே தமிழ்ப் புராணங்களில் வெளிப்பட் டுள்ளது எனக் கருத இடமுண்டு.

கண் → ஆண் குறியீடு
கண் → பெண் குறியீடு

நெற்றிக்கண் → ஆண் குறியீடு

நெற்றிக்கண் படிமம்தமிழில் கந்தபுராணத்திலும், திருவிளையாடல் புராணத்திலும் கந்தன் கதை, காமன்கதை, நக்கீரன் கதை ஆகியவற்றின் வழியே வெளிப்பட்டுள்ள தைத்தமிழுலகம்நன்கறியும்.

சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து கந்தன் பிறந்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது. தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி சூரபத்மன் என்ற அரக்கனை அழிக்க சிவன் கந்தனைப் பிறப்பிக்கிறான். சிவன் தன்நெற்றிக் கண்ணைத் திறக்கின்றான். அதிலிருந்து வெளிப்பட்ட நெருப்புப் பொறி களை எடுத்துச் சரவணப் பொய்கையில் விட ஆறுமுகம் எனும் கந்தன் பிறந்ததாகக் கந்தபுராணம் விவரிக்கின்றது (கந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புராணம் : திருஅவதாரப்படலம்). இங்குதான் படைப் பாக்கத்தை நாம் ஃபிராய்டியக் கண்கொண்டு பார்க்கவேண்டி யுள்ளது. கண் மூலமாகக் கந்தன் பிறந்தான் என்பது அறி வுப் பார்வைக்கு இடர்ப்பாடாகிறது. சமய நோக்கில் வேண்டுமானால் விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட விஷயமாக்கி ஒதுக்கிவிடலாம். ஆனால் அறிவுக் கண் கொண்டு பார்க்கும் போது நெற்றிக்கண் என்பது படைப்பாக்கத்திற்கு அடிப்படை யான ஆண்குறியைச் சுட்டவந்த ஆண்குறிக் குறியீடு எனத் துணியமுடிகிறது. உயிர்கள் கண்ணாலும் குரலாலும் (voice) படைக்கப் பெற்றன எனும் நம்பிக்கை உலகம் முழுவதும் நிலவுகிறது. கதிரவன் தன்கண்ணின் வழியே உயிர்களைப் பிறப்பித்தான் எனும் நம்பிக்கையும் உலகம் முழுவதும் உள்ளது. இந்நம்பிக்கையும் சிவன் நெற்றிக் கண்ணால் கந்தனைப் பிறப்பித்தான் எனும் கருத்தோடு ஒத்துப் போகின்றது. கந்தன் பிறப்பாக்கத்திற்கு அடிப்படையாகச் சிவன், பார்வதி ஆகியோரின் பாலுறுப்புகளே அமைதல் வேண்டும். மாறாகக் கந்தன் பிறப்பாக்கத்திற்கு அடிப் படையாக நெற்றிக்கண்ணும் சரவணப் பொய்கையும் காட்டப் படுகின்றன. சிவனின் நெற்றிக்கண் ஆண்குறிக் குறியீடா கவும் சரவணப் பொய்கை பெண்குறிக் குறியீடாகவும்[3] விந்து நெருப்புப் பொறியாகவும் தடாகத்தில் நெருப்புப் பொறியை விடுதல் கலவிக் குறியீடாகவும் வெளிப்பட்டுள்ளன. மனித நனவிலி வேட்கை (Unconscious wishes/desires) மேற்சொன்ன குறியீடுகளின் வழியே வெளிப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. இங்கு நாம் வற்புறுத்த விழைவது நெற்றிக் கண் என்பது ஆண்குறிக் குறியீடு என்பதைத்தான். நெற்றிக் கண்ணும் மறைந்துள்ளது. ஆண்குறியும் மறைந்துள்ளது. தேவைப்படும் போது மட்டுமே இரண்டும் வெளிப்படும் இயல்பின. அவ்வகையிலும் நெற்றிக்கண் = ஆண்குறி என்பது பொருத்தமாக உள்ளது.

சிவனின் நெற்றிக்கண் சிவனது மூன்றாவது கண் என்பது யாவரும் அறிந்ததே. முக்கண்ணோன் என்பது சிவனின் பெயர்களுள் ஒன்று. இந்த மூன்றாவது கண்ணை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண் குறியின் குறியீடு என்று கண்டோம். இக்கருத்தைப் பின்வரும் செய்தியும் வலிவுபடுத்துகிறது. மரத்தால் செய்த ஆஸ்த்திரிய நாட்டு ஆண் பொம்மையின் தலையைக் கீழ் நோக்கி அமுக்கினால் அந்தப் பொம்மையின் விரைத்த ஆண் குறி அதன் உடைக்குள்ளிருந்து எழும். மறுபடி தலை மீண்டு நிமிரும் போது மூன்று கண்களோடு தோன்றும். இந்த 3வது கண் ஆண்குறியைச் சுட்டும் என்கிறார் ரெயிட்லர் (Dundes 1690: 176). பொம்மையின் தலை கீழே போனதும் ஆண் குறி வெளிவருவது தலைக்குப் பதிலியாக ஆண் குறி பயன்படலாம் எனும் கருத்தாக்கத் தோடும் உறவு கொள்கிறது.[4] இந்திய, அமெரிக்க, ஐரோப் பியப் பண்பாட்டில் 3வது எண்ணுக்கும் ஆண்குறிக்கும் தொடர்பு உண்டு என டன்டிஸ் விளக்குகிறார் (1979: 223). ஃபிராய்டும் 3 எனும் எண்ணையும் ஆண்குறியையும் தொடர்பு படுத்திப் பேசியுள்ளமையும் இங்கு இணைத் தெண்ணத் தக்கது.

கந்தனைப் பிறப்பிப்பதற்கு முன்னரே காமனை எரிப் பதற்காகச் சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்துள்ளதைக் கந்த புராணத்தின் வழி அறிய முடிகின்றது. சிவன், பார்வதி இருவரும் நீண்ட மோனத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். சிவனால் பிறப்பிக்கப்படும் கந்தக் கடவுளால்தான் சூர பத்மனை அழிக்க முடியும் என்பதால் கந்தனைப் பிறப்பிக்கச் சிவனின் தவத்தைக் காமன் மூலம் கலைத்துக் காம இச்சையைச் சிவனுக்குத் தூண்ட பிரம்மா முயல்கிறார். பிரம்மாவின் வற்புறுத்தலினால் காமன் தேவ, புன்னை மரங்களுக்கிடையே மறைந்து நின்று வில்லில் நாண் தொடுத்துப் பரமேஸ்வரனைக் குறி வைக்கின்றான். இச் செயலால் சினங்கொண்ட மகாதேவன் தன் நெற்றிக் கண்ணைத் திறக்க அதிலிருந்து உண்டான அனற்பிழம்பு காமனைச் சுட்டெரிக்கின்றது (கந்தபுராணம்: காமதகனப் படலம்).

அடுத்த நெற்றிக்கண் படிமம் திருவிளையாடற் புராணத் தில் நக்கீரன் கதையில் வெளிப்படுகின்றது. பெண்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா? இல்லையா? எனும் சர்ச்சையில் புலவர் உருவில் இருக்கும் சிவனுக்கும் நக்கீர னுக்கும் கருத்து முரண்பாடு முற்றுகிறது. இறுதியில் தேவ மாதரின் கூந்தலுக்குக் கூடவா இயற்கை மணம் இருக்க முடியாது எனச் சிவன் சினங்கொண்டு வினவ உலகையெலாம் இரட்சிக்கின்ற சிவனின் மனைவி பார்வதி தேவியின் கூந்த லாயினும் சரி இயற்கை மணம் இருக்க முடியாது என்று திடமாக நக்கீரர் மறுத்துரைக்கின்றார். இதனால் சிவன் கடுங்கோபம் கொண்டு தன் நெற்றிக் கண்ணைத் திறந்து நக்கீரனைச் சுட்டெரிக்கின்றான் (திருவிளையாடற் புராணம்: கீரனைக் கரையேற்றிய படலம்).

மேலே குறிப்பிட்ட மூன்று கதைகளில் கந்தன் பிறப்புக் கதையில் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறப்பாக்கத்திற் குரிய காமாக்கினியும் காமன், நக்கீரன் ஆகியோர் கதைகளில் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து அழிப்பாக்கத்திற்குரிய கோபாக்கினியும் வெளிப்பட்டுள்ளன என்பது தெளிவா கின்றது. இந்தக் கோபாக்கினியும் காமத்தின் அடிப்படை யிலேயே தோன்றியுள்ளது என்பதைச் சற்று கூர்ந்து நோக்கும் போது புலப்படுகின்றது. கந்தன் பிறப்புக் கதை யில் நெற்றிக்கண் ஆண்குறிக் குறியீடு என்பதை நாம் முன்பே தெளிவுபடுத்தினோம். காமன் கதை, நக்கீரன் கதை ஆகியவற்றுள் வெளிப்பட்டுள்ள நெற்றிக்கண் படிமம் என்பதும் உளப்பகுப்பாய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது ஆண்குறிக் குறியீடு என்பது புலனாகும்.

கந்த புராணத்தில் சிவனின் தவத்தைக் கலைக்க பிரம்மா மன்மதனைத் தூண்டும் போது மன்மதன் அச்செயலைச் செய்ய மிகவும் அஞ்சுகின்றான். சிவனின் மோனத்தைக் கலைத்துக் காமத்தைத் தூண்டினால் சிவன் தன் நெற்றிக் கண்ணாலே சுட்டுச் சாம்பலாக்கி விடுவான் எனக் காமன் அஞ்சி நடுங்குகின்றான். பிரம்மாவின் தொடர்ந்த வற்புறுத் தலுக்குப் பின்பே அரை மனதோடு காமன் அச்செயலைச் செய்ய இணங்குகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காமதகனப் படலத்தில் காமனின் நடுக்கத்தைக் காணும் போது நெற்றிக் கண்ணாலே சிவன் தன்னைச் சாம்பலாக்கி விடுவான் எனும் பயம் காமனை ஆட்டிப் படைப்பது நன்கு தெரிகிறது. இறுதியில் காமன் பயந்தது போலவே ஆகிறது. காமனுக்கு நெற்றிக்கண் மீதுள்ள இதேபயம் நக்கீரருக்கும் இருந்துள்ளது என்பதை நக்கீரரின் வாக்கு வாதத்தின் வழி அறிய முடிகிறது. வாக்குவாதத்தில் தோல்வியுற்ற சிவன் தன் நெற்றிக் கண்ணைத் திறக்கும்போது ''நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே'' என நக்கீரர் மொழி கின்றார். நக்கீரரின் இந்தக் குரலிலிருந்து நெற்றிக்கண் என்பது ஊறுசெய்யக் கூடியது என்பது நக்கீரனின் வாய் மொழியிலிருந்தே விளங்குகின்றது. நக்கீரருக்கும் நெற்றிக் கண் பயம் உள்ளூர இருக்கின்றது என்பது தெளிவா கின்றது. அமுக்கப்பட்ட மனமே பயத்தை உற்பத்தி செய் கிறது என்கிறார் ஃபிராய்ட் (Frose: 63)

காமன், நக்கீரன் ஆகியோர் கதைகளில் படைப்பு மனதின் பய உணர்ச்சிதான் நெற்றிக்கண் புனைவாக வெளிப் பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. நெற்றிக்கண் பயத் திற்கும் மனித மனதின் அடிப்படை உணர்வான பாலுணர் விற்கும் தொடர்புள்ளது என்பதை ஃபிராய்டிய அடிப்படையில் இங்கு விளங்கிக் கொள்ள வேண்டுவது அவசியமாகின்றது. உறக்கத்தில் தோன்றும் பெரும்பாலான பயங்கரக் கனவு களுக்கு (Anxiety Dreams) அடிப்படை மனித நனவிலியில் உறைந்து கிடக்கும் பாலுணர்ச்சியே என்பது ஃபிராய்டியத் தில் ஒன்று. ஓநாய் துரத்துவது (மேலை நாடுகளில்) போன்றும், பாம்பு துரத்துவது (கீழை நாடுகளில்) போன்றும் காணும் கனவுகளுக்குக் காரணம் உறக்க நேரத்தில் நனவிலி மனதின் பால் உணர்வு (Pleasure feeling) பய உணர்வாக மாறி வெளிப்படுவதன் விளைவே யாகும். அவ்வகையில் விழிப்பு நேரக் கனவான (Day Dream) காமன், நக்கீரன் கதைகளில் வெளிப்பட்ட நெற்றிக்கண் பயமும் பாலுணர் வோடு தொடர்பு பட்டதே. இன்னும் இதைச் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் படைப்பாழ் மனதில் நனவிலி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வாகக் கிடக்கும் பாலுறுப்புப் பயமே நெற்றிக்கண் பயமாக மடைமாற்றமடைந்துள்ளது என எண்ண இடமிருக்கிறது. குழந்தைத் தனது பாலுறுப்பின் மீது கை வைத்து மகிழ்வது குழந்தையின் இயல்பான நடத்தைகளில் ஒன்று. குழந்தையின் அரும்பும் நிலையிலுள்ள குழந்தைக் காம(ம்) (Infantile sexuality) வெளிப்பாட்டை இவ்வகையில் அறிந்து கொள்ளலாம் (Freud 1986: 382). குறிப்பாக ஆண் குழந்தைத் தனது ஆண்குறியைத் தொட்டு இழுத்து மகிழ்வது நாம் யாவரும் காண்பதே. குழந்தையின் இச்செயல் பெற்றோரால் பெரிதும் கண்டிக்கப்படுகின்றது. குழந்தை அச்செயலைத் தொடர்ந்து செய்யும்போது அதன் ஆண்குறி வெட்டப்படும் அல்லது எலி, பூனை போன்றவை கடித்துச் சென்றுவிடும் என்று அச்சுறுத்தப்படுகின்றது. இவ்வச்சுறுத்தலையே ''காயடிப்பு மிரட்டல்'' (Threaten of castration) எனப் ஃபிராய்ட் கூறுகிறார் (1986: 396). மேலும் குழந்தை படுக்கையில் தொடர்ந்து சிறுநீர் கழிப்பதாலும் பெற்றோர்களாலோ, மற்றவர்களாலோ மேற்சொன்ன அச்சுறுத்தலுக்குள்ளாகிறது. தொடர்ந்த இவ்வச்சுறுத்தலால் குழந்தைத் தனது ஆண்குறி இழப்பு (Lose of phallus) பற்றிய பயத்திற்கு உள்ளாகிறது. ஆண் குழந்தை ஒரு கட்டத்தில் தனக்குள்ள ஆண்குறி பெண் குழந்தைக்கு[5] இல்லாமையைக் கண்டு அந்த உறுப்பு ஆக்கம் தனக்குள்ள கூடுதல் தகுதி என எண்ணிப் பெருமிதமும் கொள்கிறது. இந்நிலையில் அதைத்தான் இழக்கப் போகிறோம் எனும் உண்மையை (அச்சுறுத்தலை உண்மை என நம்புவதால்) நினைத்துப் பார்க்கும்போது பெருத்த பயத்திற்கு உள்ளாகிறது. மனிதன் இந்த மனோ நிலையிலேயே சிக்கிக்கொள்வதைத்தான் ஃபிராய்ட் ''காயடிப்புப் பயம்'' (Castration Complex) என விவரிக்கின்றார் (1986 : 376-400).

மன வளர்ச்சிப் படிநிலைகளில் எல்லா மனிதனும் இக்கட்டத்தைக் கடந்து வரவேண்டியுள்ளது. குழந்தைப் பருவத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் உண்டாகும் இந்த மனோபயம் எல்லா மனிதனுள்ளும் நனவுநிலை / நனவிலி நிலையில் கிடக்கின்றது. மனித மனதில் நனவிலியாகிப் போன உணர்வு கனவு / படைப்பாக்கத்தின் வழியாகக் குறியீட்டுத் தன்மையுடன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இயல்புடையது எனும் ஃபிராய்டிய அடிப்படையில் காமன், நக்கீரன் ஆகியோரின் கதைகளில் படைப்பு மனதில் நனவிலியாகிப் போன பாலுறுப்புப் பயம் நெற்றிக்கண் பயமாக மடைமாற்றப் பட்டுள்ளதை உணர முடிகின்றது. ஃபிராய்ட் பாலுறுப்புப் பயத்தின் மாற்று வெளிப்பாடு கண்பயம் (Apter: 34) என்கிறார்.

பண்பாட்டு அடிப்படையில் நோக்கும் போதும் ஊறு செய்யும் கண்ணுக்கும் (கண்ணூறு / கண் திஸ்டி) ஆண்குறிக்கும் சில நிலைகளில் உறவு உண்டு என்பதும்தெரிகிறது.

நமது நாட்டுப்புறப் பண்பாட்டில் ஊறுசெய்யும் கண்ணுக்கு எதிராகப் பின்வரும் மாற்று ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. விளைச்சல் பெருகியுள்ள நிலம் தோட்டம் போன்றவற்றில் கண்திஸ்டிக்குத் தீர்வாக வைக்கோலால் செய்யப் பட்ட ஆண்/பெண் பொம்மைகள் விளை நிலத்தின் மத்தியில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. நிறுத்தி வைக்கப்பட்ட பொம்மை ஆண் பொம்மையாயின் விரைத்து நீண்ட ஆண் குறியைக் (பெண் பொம்மையாயின் பருத்துப் புடைத்த மார் பகங்களையும்) கொண்டு விளங்குகின்றது - அதே போன்று புதிதாகக் கட்டப் பட்ட கட்டிடங்களில் கண்திஸ்டிக்குத் தீர்வாக உறுத்து விழித்த பெரிய கண்களும் நீண்டு தொங்கிய நாக்கும் கொண்ட முகம் பூசணிக் காயிலோ அல்லது பானையின் மீதோ வரையப்பட்டுக் கட்டிடத்தின் முகப்பில் வைக்கப் படுகின்றது. மேற்சொன்ன இரு செய்திகளிலிருந்து ஊறு செய்கின்ற கண்ணுக்குத் தீர்வு தீக்கண் அல்லது ஆண்குறி என்பது விளங்குகிறது[6]. இத்தகைய கண்ணோட்டத்தில் பார்க்கும் போதும் தீக்கண்ணான நெற்றிக்கண்ணும் ஆண் குறியின் பதிலியாகவே வெளிப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காமன், நக்கீரன் ஆகியோர் கொண்ட கண்பயம் பாலுறுப்புப் பயத்தின் குறியீட்டு வெளிப்பாடாயின் அதுஅவர்களின் உடலிலேயே தோன்றியிருக்க வேண்டும். மாறாக இன்னொருவனின் (சிவன்) உடலிலிருந்து வெளிப்படுகிறது. இது எவ்வாறு இயலும் எனும் ஐயம் இங்கு எழுவது இயல்பு. உள்ளுணர்வு வெளிப்படும்போது தன்மை (Subject) முன்னிலை (object)யாகவும், தன்வினை (Active) பிறவினையாகவும் (passive) மாறி வெளிப்படும் (Freud 1986: 211). அதாவது நான் உன்னை வெறுக்கிறேன் (I hat you) என்பது நீ என்னை வெறுக்கிறாய் (you hat me) என மாறி வெளிப்படும். அவ்வகையில் நக்கீரன், காமன் ஆகியோரிடத்தில் தோன்றவேண்டிய நெற்றிக்கண் சிவனிடத்தில் தோன்றுவதாகவும் அதே போல் காயடிப்புப் பயத்தால் தங்களைத் தாங்களே வறுத்திக் கொள்வதற்குப் பதிலாகச் சிவன் வறுத்துவதாகவும் காட்டப்படுகின்றது.

நெற்றிக்கண் பயம் காயடிப்புப் பயத்தின் குறியீட்டு வெளிப்பாடுதான் எனத்துணிவதற்குக் காமன், நக்கீரன் ஆகியோரின் கதை முடிவுகளும் நமக்கு உறுதுணையாகின்றன. காயடிப்புப் பய மனநிலை எதிர்ப்பால் காம (Hetro sex) நாட்டத்தை விரட்டிவிடும். இத்தகைய மன நிலையால் தான் இடிப்பஸ் மனநிலையிலிருந்து ஒரு கட்டத்தில் மனிதன் விடுபடவும் முடிகிறது (Freud 1986: 399). இம்மன நிலை மிகவும் தாழ்வு மனப்பான்மையோடு காம நாட்டத்திலிருந்து விலகி நிற்கும் போக்கையும் தரும். காமன் காமத்திற்குக் குறியீடாகப் படைக்கப் பெற்றுள்ளான் என்பது யாவரும் அறிந்ததே. காமன் கொண்ட பயம் இறுதியில் காமமே அற்றுப்போகும் வகையில் காம(ன்) தகனத்தில் சென்றுமுடிகிறது. இம்முடிவு காயடிப்புப் பயத்தினால் வெளிப் படுகின்ற காம விரக்தியோடு மிகவும் ஒத்துப் போகின்றது.

பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லைஎன்ற நக்கீரனின் வாதமும் காமத்தோடு தொடர்புடையது தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூந்தல் பற்றிய பிரச்சினையை நாம் காமம் பற்றிய பிரச்சினையாக இணைத்தெண்ணலாம். ஏனெனில் படைப்பாக்கத்தில் கூந்தல் என்பது பெரும்பாலும் காமத்தோடு தொடர்புபட்ட ஒரு விஷயமாகவே வெளிப்பட்டு வருகிறது. இதற்கு நல்ல சான்றாகச் சங்க இலக்கியத் தலைவி தம் தலைவர்க்குத் தன் கூந்தலை அணையாகத் தருவோம் எனக் கூறுவதைக் (முல்லைக் கலி : பா. 1) காட்டலாம். இதற்கு ஏட்டிலக்கியங்களும் சரி, நாட்டுப்புற இலக்கியங்களும் சரி ஏராளமான சான்றுகளை வழங்குகின்றன. பாரதப் பாஞ்சாலியின் கூந்தல் சபதம் கூட பெண்குறியின் குறியீட்டு வெளிப்பாடுதான். படைப்பாக்கத்தில் கூந்தல் வெளிப்பாடு பெரும்பாலும் பெண்குறியின் குறியீட்டு வெளிப்பாடு என்பது ஃபிராய்டியம். அவ்வகையில் நக்கீரனின் கூந்தல் பற்றிய எதிர் மறை வாதம் அவனது காம வெறுப்பின் குறியீட்டு வெளிப்பாடு எனலாம். நக்கீரனின் இத்த எதிர்மறைவாதம் பகுத்தறிவு மனதின் (conscious mind) வெளிப்பாடு என நனவுநிலை விளக்கமும் இச்சை மனதின் வெளிப்பாடு என நனவிலி நிலை விளக்கமும் தரலாம். இத்தகைய காம விடுபாட்டு மனநிலை காயடிப்புப் பயத்தின் அறிகுறியே. காயடிப்புப் பயம் என்பது ஆண்குறிப்பயமே. ஆண்குறிப் பயமே நெற்றிக்கண் பயமாகிறது. கந்தன் பிறப்பாக்கத்தில் நெற்றிக்கண் ஆண்குறிக்குறியீடு என்பது வெளிப்படையாகவே விளங்குகிறது. ஆனால் நக்கீரன், காமன் கதைகளில் நெற்றிக்கண் ஆண்குறிக் குறியீடு என்பதைக் காயடிப்புப் பயத்தின் அடிப்படையில்தான் விளங்கிக் கொள்ள முடிகிறது[8]. முன்னதைவிடப் பின்னதைச் சற்று ஆழமான நிலையில்தான் புரிந்து கொள்ள முடிகிறது.

மனச்சிக்கல்கள் படைப்பாக்கத்தில் வெளிப்படும்போது கடவுளின் ஊடுறுவல் (Involvement) இருந்தால் அது மீண்டும் சரி செய்வதாகக் காட்டப்பெறுகிறது. சிவனருளால் காமன் (ரதியின் கண்ணுக்கு பட்டும் தெரிகின்ற வகையில்) உயிர் பெறுவதும், நக்கீரன் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெப்பு நோயிலிருந்து மீளுவதும் கடவுளின் தலையீடு இருக்குமேயானால் மனச்சிக்கல்கள் சரிசெய்யப் பெறலாம் என்பதை மறைமுகமாக உணர்த்துவனவாயுள்ளன. இதற்கு இன்னுமொரு சான்றாகத் திருவிளையாடற் புராணத்தில் தாய்மோகியான அந்தணன் ஒருவன் இறையருளால் மனத் தெளிவு பெறுவதாகக் காட்டப்பட்டுள்ளதைக் கூறலாம் (திருவிளையாடற் புராணம் - மாபாதகம் தீர்த்த படலம்).

குறிப்புகள்

1. என் மேற்பார்வையில் T.K. ரவிச்சந்திரனால் புதுவைப் பல்கலைக் கழகத்திற்கு 1991இல் ஒப்படைக் கப்பட்ட ''ஃபிராய்டிய நோக்கில் சங்க அக இலக்கியப் பாடல்கள் - குறுந்தொகை மட்டும்'' எனும் ஆய்வேடு ஃபிராய்டிய குறியீட்டடிப்படையில் நிகழ்த்தப்பட்ட தாகும். இவ்வாய்வேட்டில் குறுந்தொகைப் பாடல்கள் வழி வெளிப்பட்ட ஆண்குறிக் குறியீடு, பெண்குறிக் குறியீடு, கலவிச் செயல் குறியீடு ஆகியவற்றைப் பிரித் தெடுத்துப் பாகுபடுத்தி விரிவாக ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

2. ஆ. தமிழில் கண் பெண்குறியின் குறியீடாகப் (Female genital symbol) பயன்படுத்தப்பட்டமைக்கு அகலிகைக் கதை தக்க சான்றாக விளங்குகிறது. இந்திரன் அகலிகையைத் திருட்டுத்தனமாகக் கூடிய தால் கௌதமர் இந்திரனுக்கு உடலெல்லாம் கண் ஆகச் சபித்தது நாமறிந்ததே. இவ்விடத்தில் கண் பெண்குறிக் குறியீடாக வெளிப்பட்டுள்ளமை வெளிப்படை.

ஆ. கேரளப் பகுதியில் நாட்டுப்புற விளையாட்டு களில் ''கண்ணு விளையாட்டு'' என்பது நாட்டுப்புற இளைஞர்களால் விளையாடப் பெறுகின்றது. இவ்விளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாட்டில் தரையில் கண் வரையப்படுகின்றது. அந்தக் கண்ணில் வைக்கப்பட்டுள்ள குண்டுகள் அனைத்தையும் எவர் அடித்து வெளிக் கிளப்புகிறாரோ அவரே அவ் விளையாட்டில் வென்றவராவார் (தகவல் : டேனியல் ஜெயராஜ்). இந்நாட்டுப்புற விளையாட்டை உளப் பகுப்பாய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது இவ் விளையாட்டு மனித நனவிலி வேட்கை/பாலியல் வேட் கையின் மறைமுக வெளிப்பாடு எனக் கருதலாம். இவ் விளையாட்டில் கண்ணு என்பது பெண்குறியின் குறி யீடாகவும், குண்டு என்பது ஆண்குறிக் குறியீடாகவும் ஒருவன் எல்லாக் குண்டுகளையும் விரட்டியடித்துக் கண்ணைக் கைப்பற்றுவது உடலுறவுக் குறியீடாகவும் கொள்ளலாம். இங்கு நாம் வற்புறுத்த விழைவது கண்ணு விளையாட்டில் வரையப்பட்ட கண் என்பது பெண் குறியைக் குறிக்கும் குறியீடு என்பதுதான்.

இ. எகிப்துத் தொன்மத்தில் "ஹோரஸ்" என் பவனும் "செட்" என்பவனும் போர் புரிகின்றனர். செட் என்பவன் ஹோரஸினுடைய கண்ணைப் பிடுங்கி எறிகின்றான். இதற்குப் பதிலுக்குப் பதிலாக ஹோரஸ் செட்டின் ஆண்குறியைப் பிடுங்கி எறிகின்றான் (Egyptian Mythology : 64). இந்தக் கதையிலிருந்து. நாம் புரிந்து கொள்வது கண்ணும் ஆண்குறியும் ஒன்றற்கொன்று பதிலியாகப் (Alternatives) படைப் பாக்கத்தில் வெளிப்படும் பான்மையன என்பதாம்.

ஈ. பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் கற்பு வாழ்வில் சங்கிலி நாச்சியாருக்குச் செய்த திருமணச் சத்தியத்தை மறந்து கைவிட்டுச் செல்லும் நிலையில் கண் குருடாக்கப்படுகிறது. இங்குக் கண்குருடாக்கப் படுவதென்பது பாலியல் குற்றத்திற்கு அடிப்படையாக உள்ள ஆண்குறியைத் தண்டித்தலையே குறித்து நிற்கிறது. படைப்பாக்கத்தின்போது இதை அப்படியே வெளிப்படுத்த நனவு மனம் இடங்கொடாதாகையால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண்குறிக்குப் பதிலாகக் கண் தண்டிக்கப்படுவதாக வெளிப்படுகின்றது.

௨. கர்ணன் பிறப்புக் கதையில் சூரியனின் ஒளிக் கிரணம்பட்டுக் குந்தி கருவுறுவதாகக் கூறப்படுகின்றது. உலகின் கண் சூரியன் என்பது ஒரு பழம் நம்பிக்கை. சூரியக் கண்ணே கர்ணன் பிறப்பிற்கு அடிப்படை என்பதிலிருந்தும் கண் ஆண்குறிச் சிந்தனையோடு தொடர்புடையது என்பது உறுதியாகின்றது (கர்ணன் கதையில் சதிரொளி படுதல் என்பது விந்து வெளிப்பாட்டின் குறியீடு என்றும் கொள்ளலாம்).

3. ''குலசேகராழ்வார் பாடல் — ஓர் உளவியல் விளக்கம்'', ''வி—நாயக மூலப் படிவம்'' எனும் எனது இரு கட்டுரைகளிலும் சுனை, குளம், ஆகியன பெண் குறிக் குறியீடுகளே என்பதை விளக்கியுள்ளேன் (புலமை, தொகு-16, ஜீன்-90, பகுதி-1; தொகு-16 ஜீன்-91, பகுதி-1).

4. தலையும், ஆண்குறியும் ஒன்றற்கொன்று பதிலிகளாகப் படைப்பாக்கத்தில் வெளிப்படும் இயல்பின என்பதற்கு நமக்கு அம்பிகாபதி கதையிலிருந்து பாரதிதாசனின் எதிர்பாராத முத்தம் வரை ஏராளமான சான்றுகள் உள்ளன. இத்தகைய கதைகளில் பாலியல் குற்றத்திற்காகத் தலை வெட்டப்படுகின்றது. தலை வெட்டுதல் என்பது ஆண்குறியை வெட்டுதல் என்பதன் மாற்றுக் குறியீடுதான். பாலியல் குற்றத்திற்கு ஆண்குறியை வெட்டியதற்கான நேரடிச் சான்று தமிழில் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஆர்னி தாம்ஸனின் Motif Indexஇல் குற்றத்திற்குத் தண்டனை ஆண்குறியை வெட்டுதல் என்பதற்கான சான்று இடம் பெற்றுள்ளது.

5. பெண்குழந்தைக்கும் ஆண்குறி ஏக்கம் (Female penis envy) உண்டு என ஃபிராய்ட் விவரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண்குழந்தைக்கு இருப்பதைப் போன்ற உறுப்பு (ஆண் குறி)தனக்கு இல்லாததை ஒரு பெரிய இழப்பாகப் பெண் குழந்தைஒரு கட்டத்தில் கருதுகின்றது. பின்னர் ஒரு கட்டத்தில் இம்மனப்போக்குப் பெண்குழந்தைக்கு மாறி விடுகின்றது. மாறாக அந்த ஏக்கத்திலேயே சிக்கிக் கொள்ளும் போது இது பெண்களிடம் காணப்படுகின்ற மனச் சிக்கலாக (Female castration complex) மாறி விடுகிறது.

6. ஆலன் டன்டிஸ் Wet and dry, the evil : An essay in indo european and semitic worldview எனும் கட்டுரையில் கண் பற்றிய பல நோக்கு ஆய்வை விரிவாக நிகழ்த்தியுள்ளார் (1990)).

7. திருநாகலிங்கம் தொகுத்துள்ள புதுவை நாட்டுப் புறக் கதைகள் (இன்னும் அச்சேறவில்லை) தொகுதியில் 20வது கதையில் துணி துவைக்கும் வண்ணான் துவைப் பதற்கு வரும் அரசிளங்குமரியின் ஆடையில் இருக்கும் அவளது கூந்தலைக்கண்டு அவளைப் பாராமலே காமுறு கின்றான். இங்குக் கூந்தல் என்பது பெண்குறியின் நனவிலிக் குறியீடாக வெளிப்பட்டுள்ளது எனக்கொள்ள லாம். இன்னும் நிறைய சான்றுகள் இதுபோல் உள்ளன. ஆகக் கூந்தலுக்கும் காமத்திற்கும் நம் பண் பாட்டில் உறவு உள்ளது என்பது வெளிப்படை.

8. நெற்றிக்கண் வெளிப்பாடு கிரேக்கத் தொன் மத்திலும் கிடைக்கின்றது. ஹோமரின் ஒடிசியில் சைக் ளோப்ஸ் எனும் பெயரில் நெற்றியில் ஒரு கண்ணை மட்டும் கொண்ட ஓர் ஒற்றைக்கண் அரக்கன் பேசப்படு கின்றான். கதையின் முடிவில் அந்த அரக்கனின் நெற்றிக்கண் ஒடிசியால் (நெருப்புக் கட்டையால்) குத்திக் குருடாக்கப்படுகின்றது. அரக்கனின் நெற்றிக்கண்ணை ஒடிசி குருடாக்குவதை (Son's castration) என்கிறார் டன்டிஸ் (1990 : 175). சிவனின் நெற்றிக் கண்ணுக் கும் சைக்ளோப்ஸின் நெற்றிக் கண்ணுக்கும் உள்ளவேறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடு, முன்னது நெற்றிக்கண் அதே வேளையில் மூன்றாவது கண்ணும் ஆகும். ஆனால் பின்னது நெற்றியில் இருக்கிற ஒற்றைக் கண் மட்டுமே ஆகும். இந்த நெற்றிக் கண் ஆண்குறிக் குறியீடுதான் என்பதற்குரிய கிரேக்கத் தொன்மச் சான்றாக இக்கதை விளங்குகிறது. நெற்றிக்கண் வெளிப்பாடு ஆண்குறிக் குறியீடாகவும், ஒருசில பண்பாட்டில் மலத்துவாரத்தின் (Anus) குறியீடாகவும் வெளிப்படலாம் என்று கருதப்படுகிறது (Dundes 1990: 159). தமிழக நாட்டுப்புறக் கதைகளில் காணப்படும் ஒற்றைக்கண் மந்திரவாதிக் கதைகளில் இடம் பெறும் ஒற்றைக் கண்ணும் ஆண்குறியோடு தொடர்புடையது என எண்ண இடமுள்ளது.

"Presented free of cost with compliments from the Central Institute of Indian Languages (Government of India) Mysore 570006."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறைக்கப்பட்ட இடிப்பஸ் அமைப்பு

(ஃபிராய்ட், நிட்டூரி கதை)

ஓர் உளப்பகுப்பாய்வாளன் தன் நோயாளியின் மனதை அறிய நாட்டுப்புறக் கதையின் ஆழ் பொருளை (Latent meanning) எடுத்துப் பயன் கொள்ளலாம். அல்லது மனநோயாளியின் நடத்தையை விவரிக்க நாட்டுப்புறவியல் தரவுகள் தாமே முன்வந்து பயன்படலாம். இத்தகு சூழலில் நாட்டுப்புறவியலுக்கும் உளப்பகுப்பாய்விற்கும் இடையே உள்ள உறவு அவை ஒன்றை ஒன்று விளங்கிக் கொள்ள உதவுவதாகவும், ஒன்றால் ஒன்று பயன் பெறுவதாகவும் இருக்கிறது என்கிறார் ஆலன் டன்டிஸ் (Peter J. clause, Franke J. Koram, : 18) இதிலிருந்து நாட்டுப்புறவியலும் உளப்பகுப்பாய்வும் ஒன்றுள் ஒன்றாய் உள்ளன என்பது தெளிவு.

பண்பாடு எனும் பெயரில் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் உருவாக்கிக் கொள்ளாத ஆதி மனிதன் பிறவியோடு வந்த இச்சை உணர்வோடு (id) மட்டுமே வாழ்ந்தான். இவன் எத்தகு பாலுறவு விலக்குகளையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இவன் தாய், தங்கை என்ற எந்த வேறுபாடுமின்றிப் புணர்ந்தான். இதன் விளைவு வாலிபப் பிள்ளைகள் தன் பாலுறவு ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள தந்தைமார்களைக் கொன்றனர். சூழலை வெற்றி கொள்ள செயற்கையான பாலியில் விலக்கு (Taboos) உருவாக்கப் பட்டது. இதனூடே இரட்டைப் பிறவிபோல் கூடா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒழுக்கமும் (Incest) பிறந்தது. பாலியல் விலக்கைத் தொடர்ந்து தந்தை என்ற பிரம்மாண்டமான தகுதியை மூத்தவன் கைக்கொண்டான். பண்பாடு உருவாக்கப்பட்டது. மனிதனின் இந்தத் தொடக்கமே அவனது சமூகச் சட்டங் களாகவும், சடங்குமுறைகளாகவும், பழந்தொன்மங்களா கவும், பழங்கதைகளாகவும் தோற்றம் கொண்டன. மனிதன் உருவாக்கிக் கொண்ட மேற்கூறிய பண்பாட்டு அமைப்புகளில் முறித்துப் போடப்பட்ட இச்சை உணர்வுகள் உருமாறி, நிறம் மாறி விழுந்தன. இவை கலை இலக்கியங்களாகப் பரிணாமம் பெற்றன. இச்சை உணர்ச்சிகள் முருகியல் உணர்ச்சிகளாக இடம்பெயர்ந்தன. மனிதனின் எல்லா அபிலாசைகளும் கலை இலக்கியத்துள் பதிவாயின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உளப்பகுப் பாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கிய தொடக்கக் கர்த்த வாகிய சிக்மண ஃபிராய்ட் நனவுமனம் (Conscious mind), நுறை நனவு மனம் (Subconscious mind), நனவிலிமனம் (Unconscious mind) எனும் அடிப்படையில் மனதின் மூன்று நிலைகளையும், இச்சை உணர்வு, தன்னுணர்வு (Ego), பண்பாட்டுணர்வு (Super Ego) எனும் அடிப்படையில் உணர்வுகளின் மூன்று நிலைகளையும் விளக்கினார். இவற்றுள் இச்சை உணர்வு குழந்தையைப் போன்றது. இச்சை உணர்வு தன் தேவையை நினைத்த மாத்திரத் திலேயே உடலின் உதவியோடு நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் இயல்பினது. பண்பாட்டை வார்த்தெடுத்த தந்தைத் தலைமைச் சமுதாயத்தில் தாயோடு குழந்தை கொள்ளும் முதல் காதல் (Pre oedipal) பண்பாட்டின் பெய ரால் முறிக்கப்படுகிறது. தாய் ஏக்கம் (Mother fixation) மனதில் ஆழமாக வடுக் கொள்கிறது. பண்பாடு உருவாக்கிய தாய் விலக்கை ஏற்றுக்கொள்ளாத மனம் தாய் நாட்டத்தை மனதிற்குள்ளே அமுக்குகிறது. அமுக்கப்பட்ட இவ்வுணர்வு மாறுவேடம் புனைந்து சமூக அங்கீகாரத்தோடு கலையாக வெளிப்படுகிறது. இந்த அழகான கலைகளை அமுக்கப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வுகளின் பிரதிகள் எனக் கண்டார் ஃபிராய்ட். மன நோயாளியிடம் அமுக்கப்பட்ட உணர்வுகள் சில அறிகுறிகளின் (Symptoms) வாயிலாக வெளிப்படுவதுபோல், கலை இலக்கியங்களில் குறியீடுகள் (Symbols) வாயிலாக அமுக்கப்பட்ட உணர்வுகள் வெளிப்படுகின்றன. அவ்வகையில் மனநோய் அறிகுறிகள் = கலை இலக்கிய குறியீடுகள் எனில் மிகையாகாது.

நனவிலி மன ஆசைகள் முற்றிலுமாக மூடி மறைக்கப்பட்டு அது வேறு ஒன்றாய் வெளிப்பட்டுக் காட்சி தரும்போது அங்கே ஃபிராய்ட் தோன்றுகிறார். இங்கேதான் உளப் பகுப்புத்திறனாய்வும் பிறக்கிறது. இந்த அடிப்படையில் தமிழக நாட்டுப்புறத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிட்டூரி கதையை இக்கட்டுரை ஆய்வு செய்ய முற்படுகிறது. நாட்டுப் புறத் தரவுகளின் வழிப்பெறுகின்ற எந்தச் செய்தியும் தனிப் பட்ட எந்த ஒரு நபரையும் சார்ந்ததல்ல. அத்தரவு சார்ந்த சமூகம் முழுவதற்கும் அக்கருத்து உரியது. அவ்வகையில் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்தக் கனவுகளில் ஒன்றான நிட்டூரி கதையில் கூடா ஒழுக்க வேட்கை முழுதுமாக மூடி மறைக்கப்பட்டுத் தூய்மையான ஒரு நாட்டுப்புறக் கதையாக வெளிப்பட்டுள்ளது.

இந்த நிட்டூரி கதை ஆறு இராமநாதன் என்பவரால் வரலாற்று நிலவியல் ஆய்வு முறையில் ஆய்விற்குட்படுத்தப் பட்டுள்ளது. இந்தக் கதைக்கு இருபதிற்கும் மேற்பட்ட திரிபு வடிவங்கள் தமிழகம் முழுவதும் கிடைக்கின்றன. நிட்டூரி கதையின் அனைத்து வடிவங்களையும் தொகுத்து இக்கதை யின் மூலவடிவம் இன்னதென்பதைத் தேடிச் செல்லும் ஆறு. இராமநாதன், இருபது திரிபு வடிவங்கட்கும் பின்வரும் நான்கு வடிவங்களே மூல வடிவங்களாதல் வேண்டும் என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வடிவம்—1

வயல் வேலைக்குச் செல்லும் அண்ணன்மார்களுக்கு (75%)* வழக்கம்போல் (55%) தங்கை உணவெடுத்துச் செல்கிறாள் (80%). வழியில் நீர் நிலையைக் கடக்க வேண்டும் (70%). வழியில் அவள் தவறு செய்கிறாள் (80%). வாளை மீனால் (50%) காயமுறும் (80%) அவள் சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய் கூற (80%) நச்சுணவு தந்து (65%) தாய் தன் சின்ன மகனைக் கொன்று புதைக்கிறாள் (85%) புதைத்த இடத்தில் பூந்தாவரம் முளைத்துப் பூக்கிறது (80%) பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமானபோது பூ கிடைக்க வில்லை (80%) சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதையறிந்து குடும்பத்தார் பறிக்கச் செல்லப் (85%) பூக்கள் மறைந்து வாடிவிடுகின்றன (50%). அவர்கள் பூ கேட்க, பூந்தாவரம் வாயிலாகச் சின்னவன் தன் கொலைக்குக் காரணமானவள் தங்கை என்ற உண்மையை அனைவரும் அறியும்படி வெளிப்படுத்திப் (80%) பூ தர மறுத்து விடுகின்றான் (60%) திருமணம் நடைபெறுகிறது (50%).

100829

வடிவம்—2

வயல் வேலைக்குச் செல்லும் அண்ணன் மாருக்குத் (பெரியம்மா மகன்கள்) (5%) தங்கை (சின்னம்மா மகள்) உணவு எடுத்துச் செல்கிறாள் (5%). வழியில் ஆற்றைக் கடக்க வேண்டும் (5%). ஆற்றில் வாளை யிடம் விளையாட (5%) வாளையால் காயமுறுகிறாள் (5%). சின்னண்ணன் அடித்ததாகத் தன் தாயிடம் பொய்கூறத் (5%), தாய் தன் முத்தாளின் சின்ன மகனைக் கொன்று புதைக்கிறாள் (5%). அந்த இடத்

* இந்த விழுக்காடுகள் பெரும்பான்மையான கதை களில் இடம் பெற்றன என்பதைக் குறிப்பிடுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் ஒரு பூமரம் முளைத்துப் பூக்கிறது. (5%). பெண்ணின் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்க வில்லை. (5%), முத்தாள் மகனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து மாற்றாந்தாய் பறிக்கச் செல் கிறாள் (5%). பூக்கள் மறைகின்றன (5%). பூ கேட்கப் பூந்தாவரம் வாயிலாகச் சின்னவன் தன் கொலைக்குக் காரணமானவள் தங்கை என்ற உண்மையை வெளிப் படுத்திப் (5%), பிறகு பூ தருகின்றான் (5%).

வடிவம்—3

வயல் வேலைக்குச் செல்லும் அண்ணன் மாருக்கும் தம்பிக்கும் (5%) உணவெடுத்துச் செல்லும் சகோதரி (5%) வழியிலுள்ள காட்டைக்கடந்து செல்கையில் (5%), தன் வெறுப்புக்குரிய, தம்பியின் உணவைக் காட்டிள்ள தன் அன்புக்குரிய மானுக்குத் தந்து தம்பியை ஏமாற்ற (5%), கோபமுற்ற தம்பி அந்த மானைக் கொன்று அதன் இறைச்சியை அவளிடம் ஆட்டிறைச்சி என்று தந்து அவள் மனதைத் துன்புறுத்துகிறான் (5%). அவள் அவனுக்கு நச்சுணவைத் (பாம்புக்கறி) தந்து கொல்கிறாள் (5%). அவனைப்புதைத்த இடத்தில் பூந்தாவரம் முளைத்துப்பூக்கிறது (5%). அவள் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்கவில்லை (5%). பூ இருக்குமிடமறிந்து சகோதரர்களும் மாமாவும் பறிக்கச் செல்ல (5%), பூந்தாவரம் வாயிலாகக்கொலையுண்ட வன் தன் கொலைக்குக் காரணமானவள் தன் அக்கா என்ற உண்மையை வெளிப்படுத்தி (5%), முதலில் பூதரமறுப்பவன், மாமா கேட்கும் போது பூ தருவதோடு (5%), அக்காவின் திருமணத்தில் தெய்வமாக நின்று வாழ்த்துகிறான்.

வடிவம்—4

காட்டு வேலைக்குச் செல்லும் வேலைக்காரன் சின்னானுக்குக் (5%), கஞ்சி எடுத்துச் செல்லும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எஜமானி (5%). தாழைவேர் தடுக்கிக் கீழே விழுந்து கஞ்சிக் கலயத்தை உடைக்கிறாள் (5%). அப்போது தாழை முள் குத்திக் காய முறுகிறாள் (5%). சின்னான் அடித்ததாக அண்ணன் மார்களிடம் கூற (5%) அவர்கள் சின்னானை அடித்துக் கொல்கின்றனர் (5%). அவனைப் புதைத்த இடத்தில் பூந்தாவரம் முளைத்துப் பூக்கிறது (5%). பெண்ணின் திருமணத்திற்கு எங்கும் பூ கிடைக்க வில்லை (5%). சின்னானைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து உறவினர்கள் பறிக்கச் சென்றனர் (5%). பூ கேட்கப் பூந்தாவரம் வாயிலாகச் சின்னான் தன் கொலைக்குக் காரணமானவள் எசமானி என்ற உண்மையை வெளிப்படுத்திப் (5%). பூ தர மறுத்து விடுகிறான்.

மேற்காட்டிய நான்கு வடிவங்களில் எது பழைய வடிவம் என்பதை இராமநாதனால் உறுதியாகத் துணிய முடியவில்லை (1988 : 43). எனவே இக்கட்டுரைக்கு இந்த நான்கு வடிவங்களையுமே அடிப்படையாகக் கொள்கிறோம்.

நிட்டூரி கதையின் மூலக்கதையைத் தேட முனையும் இராமநாதன் தம் ஆய்வில் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறார்.

''தங்கை ஏன் குறிப்பாகச் சின்னண்ணன் அடித்ததாகப் பழிகூறுகிறாள்? மகள் பேச்சைக் கேட்டு எந்தத் தாயாவது ஒருசிறிய குற்றத்திற்காகப் பெற்ற மகனைக் கொள்வாளா? பூ தர மறுத்த பிறகு திருமணம் நடைபெறுவது முரணாக உள்ளதே (1988, ப. 45).''

இராமநாதனுக்கு எழுந்த மேற்கண்ட இதே வினாக்கள் தான் நிட்டூரி கதையை உளவியலாய்வுக்கு உட்படுத்தும் நமக்கும் எழுகின்றன. பெண் தவறுதல், துன்புறுதல், பழிகூறல் என்பன மூலக்கதையின் பிரதான கூறுகளாகின்றன. இவற்றிற்கான உளவியல் விளக்கத்தை முதலில் தெளிவு படுத்திக் கொள்ளுதல் இங்கு அவசியமாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்தவறுதல் என்ற கூறில் உணவெடுத்துச் செல்லும் போது நீர் நிலையைக் கடக்க உதவியவாளை மீனை ஏமாற்றுதல் என்பதாகவும் துன்புறுதல் என்ற கூறில் வாளை மீனால் காயமுறுதல் என்பதாகவும் பழிகூறல் என்ற கூறில் சின்னண்ணன் அடித்ததாகத் தாயிடம் பொய்கூறல் என் பதாகவும் காட்டப் பெறுகின்றது. வாளையை ஏமாற்றுதல், வாளை மீன் கடித்தல், அண்ணன் அடித்ததாகச் சொல்லல் ஆகிய இம்மூன்று விஷயங்களையும் உளவியலடிப்படையில் நோக்கும்போது சில புதிய உண்மைகள் புலனாகின்றன. வாளையை ஏமாற்றுதல் என்பது உதவிசெய்த ஆடவனை ஏமாற்றுதல் என ஃபிராய்டிய நோக்கில் கருதலாம். ஏனெனில் மீன் படிமம் கனவு / படைப்பாக்கத்தில் வெளிப்படுமிடங்களில் அது பெரும்பாலும் ஆணைச் சுட்டும் குறியீடாம் (David-Stafford: 70). இக்கதையில் வெளிப்பட்ட வாளை ஆண் படிமம் எனும் நம்கருத்தை உறுதி செய்வதுபோல் வாளைக் குப்பதிலாக ஆடவனை ஏமாற்றியதாகவும் இருகதை வடிவங் கள் கிடைத்துள்ளன (1988 : 37). மேலும் இருகதை வடிவங்களில் வாளைக்குப் பதிலாக முதலையை ஏமாற்றிய தாகவும் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன (1988: 37). ஆக வாளை, முதலை ஆகிய படிமங்கள் ஆண்குறியீடுகளே என்பது தெளிவாகின்றது. இன்னும் இதை உறுதி செய்வது போல் பெண் தவறுதல் என்ற கூறில் அறியாமல் செய்த தவறாக வேர்தடுக்கி விழக்கத்தாழை முள் பாவாடையைக் கிழித்துக் காயப்படுத்தல் என்ற கதை நிகழ்ச்சி இடம்பெறுகின்றது. இங்குக் கத்தாழை முள்ளை ஃபிராய்டிய நோக்கில் ஆண்குறிக்குறியீடு, என ஏற்க எந்தத் தடையும் இல்லை. ஆக வாளை, முதலை, கத்தாழை முள் ஆகியன ஆண்குறீக்குற்யீடுகளே என்பது தெளிவாகின்றது. பெண் காயமுறுதல் / பாவாடை கிழிதல் எனும் கதை நிகழ்ச்சி கள் பெண் கன்னித் தன்மை இழந்தமையைச் சுட்டும் குறியீடு களாக இருக்குமோ எனும் ஐயத்தைக் கிளப்பும் இராமநாதன் (1988 : 57) அதை உறுதி செய்ய இயலாமல் விலகி விடுகிறார். பாவடை கிழிதல் / காயமுறல் எனும் கதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழ்ச்சிகள் பெண் கன்னித் தன்மையை இழந்தமையைத் தான் சுட்டுகின்றன. துணி (Cloth) என்பது பெரும்பாலும் பெண் குறியைச் சுட்டும் குறியீடு என்கிறார் ஃபிராய்ட். துணி பெண் குறியைக் குறிக்கும் குறியீடு என்பதை உறுதி செய்ய நிறைய சான்றுகளுள்ளன. ஆக பெண் விரும்பியோ விரும்பாமலோ ஆடவனோடு கொண்ட உடலுறவுச் செயலே பாவாடை கிழிந்ததாகவும் / காயமேற்பட்டதாகவும் இக்கதையில் வெளிப்பட்டுள்ளது எனத் துணியலாம். பாவாடை கிழிந்தமை / காயம் பெற்றமைக்குக் காரணம் அண்ணன் அடித்தது எனக்கதையில் பேசப்படுகின்றது. பாவாடை கிழிந்தமை / காயம்பட்டமை என்பது கன்னித்தன்மை இழந்தமையின் குறியீட்டு வெளிப்பாடு என முடிவாகும் போது அண்ணன் அடித்தான் என்பது அண்ணன் தன்னை உடலுறவு கொண்டான் என்பதன் குறியீட்டு மொழி எனத் துணியலாம். இங்கு வினைப் படிமமான அடித்தல் என்பது உடலுறவு நிகழ்ச்சியைக் குறிப்பாகச் சுட்டுகின்றது. வினைப்படிமங்கள் உடலுறவைக் குறிக்கும் என்பது ஃபிராய்டியம் (David stafford : 72). அண்ணன் அடித்தான் என்பதற்கு ஃபிராய்டிய நோக்கில் பொருள் கொள்ளும்போது அண்ணன்தான் தங்கையின் கன்னித் தன்மையை அழித்தவன் என்றாகிறது. இப்பின்னணியில் பார்க்கும்போது இக்கதையில் பெற்ற தாய் மகனைக் கொன்றமைக்கான சரியான காரணம் கிடைக்கிறது. தன் அன்ணன்தான் தனது கன்னித் தன்மையை அழித்தவன் என்பதை மகளின் வாயிலாகவே அறிந்த தாய் அதை உண்மை என நம்பிய நிலையில் பெற்ற மகன் என்றும் பாராது நஞ்சூட்டிக் கொலை செய்கின்றாள். கிராமப்புற பெண்கள் செய்யும் கொலைகளுக்கான முக்கிய காரணங்களுள் ஒன்று பாலுறவுப் பூசல் என அண்மைக்கால ஆய்வு முடிவுகள் கூறுவதும் (1988: 52) இங்கு எண்ணத்தக்கது.

நிட்டூரி கதையில் வெளிப்பட்ட உருப்படிமங்களான வாளை முதலாய படிமங்களை ஆண்குறிக் குறியீடுகளென்றும் பாவாடையைப் பெண்குறிக் குறியீடென்றும் பாவாடை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிழிதல்/ அடித்தல் / காயமுறுதல் என்ற வினைப் படிமங்களை உடலுறவுக்கு குறியீடென்றும் கொண்டு பார்க்கும் போது அங்குப் பாலியல் குற்றம் நிகழ்ந்தமை தெற்றென விளங்கு கிறது. அண்ணன் இந்தப் பாலியல் குற்றத்தைச் செய்தான் என்பதை அடித்தான் எனும் குறியீட்டு மொழியால் கதையில் வெளிப்படுத்தப்படுகிறது. மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து மகள் பேச்சைக் கேட்டு எந்தத் தாயாவது ஒரு சிறிய குற்றத் திற்காகப் பெற்ற மகனைக் கொல்வாளா? எனும் இராமநாத னின் வினாவிற்கு ஏற்ற விடைகிடைக்கிறது. அடுத்து இக் கட்டுரை பிரதானமாக மையமிட விரும்புவது இராமநாத னின் முதல் வினாவான ''தங்கை ஏன் குறிப்பாகச் சின்னண் ணன் அடித்ததாகப் பொய் கூறுகிறாள்?'' என்பதில்தான். கதை நிகழ்ச்சியின் அடிப்படையில் நோக்கும் போது பெண் வேறொரு ஆடவனால் கன்னித் தன்மையை இழந்து நிற்க இப்பாலியில் குற்றத்திற்குக் காரணம் அண்ணன் என அண்ணன் மீது ஏன் பழியைச் சுமத்த வேண்டும்.

தங்கை கன்னித் தன்மை இழந்தமைக்கு அண்ணன் காரணன் இல்லாதபோது எந்தத்தங்கையாவது அண்ணனைக் காரணமாக்குவாளா? இந்தக் கதையில் அண்ணன் அடித்தான் என அண்ணன் மீது தங்கை பழியைப் போடுவதற்கு இராமநாதன் தரும் யூகமாவது;

''ஒரு குடும்பத்தில் பல குழந்தைகள் இருந்தால் அக் குழந்தைகளுள் ஒரு குழந்தைக்கும் அதற்கு அடுத்துள்ள குழந்தைக்கும் (Immediate relation) இடையேயுள்ள உறவு கள் பெரும்பாலும் போட்டி, பொறாமை காரணமாகச் சர்ச்சைக்குரிய உறவாகவே அமைவதைக் காணலாம். இக் கதையில் தங்கை தன் அண்ணன் மீது பழிகூற இது போன்றதொரு உறவு அவர்களிடையே நிலவியது காரணமா கலாம் என்று ஊகிக்கலாம்'' என்று கூறுகிறார்.

இராமநாதனின் மேற்கண்ட யூகத்தை நனவுநிலை விளக்கமாக (Conscious interpretation) வேண்டுமானால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்ளலாம். ஆனால் ஆழ்நிலை விளக்கமாகக் (Unconscious interpretation) கொள்ள முடியாது. இந்தக் கதையில் தங்கைக்கு அண்ணன் மீதுள்ள இடிப்பஸ் காமமே தனக்கு நிகழ்ந்த பாலியல் குற்றத்திற்கு அண்ணனைக் காரணமாக்கு கிறது. அண்ணன் மீது அந்நிகழ்ச்சியை ஏற்றி நிறைவு கொள்ளச் செய்கிறது. தங்கை அண்ணன் மீது காமம் கொண் டிருந்தவள் என்பதை இக்கதையில் கிடைக்கும் அகச்சான்று களை வைத்தே உறுதிசெய்யலாம். இறந்த அண்ணன் திருமணத்திற்குப் பூ தர மறுப்பதற்குப் பின் வரும் காரணங் களைப் பாடல் வழிக் கூறுகிறான்.

வாளை கிழிச்சிருக்க
வடபுறமா சாய்ந்திருக்க
சின்னண்ணன் அடிச்சான்னு
சொன்னாளே நெட்டுருவி
நெட்டுருவி கொண்டைக்கு
நிரக்காது என்பூவு

மாரின் மேல் வைத்து
மசக்கிடுவாள் என் பூவை
தோளின்மேல் வைத்துத்
துவட்டிடுவாள் என்பூவை
கையின் மேல் வைத்துக்
கசக்கிடுவாள் என்பூவை (1988: 118)

தங்கைக்குப் பூ தர மறுக்கும் இடங்களிளெல்லாம் அண்ணன் இப்போக்கிலேயே பல பாடல்களைப் பாடு கின்றான் (பக். 92-122). மாரின்மேல் வைத்து மசக்கிடுவாள் என்றும், தோளின்மேல் வைத்துத் துவட்டிடுவாள் என்றும், கையின்மேல் வைத்துக் கசக்கிடுவாள் என்றும் கொண்டை யில் வைத்துக் குலுக்கிடுவாள் என்றும், கூந்தலில் வைத்துக் குலுக்கிடுவாள் என்றும் கூறுவதிலிருந்து தங்கைக்கு அண்ணன் மீதிருந்த காம நாட்டம் குறிப்பாக வெளிப்படுத்தப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகின்றது. இருபது கதைகளையும் ஒப்பிட்டு நோக்கும் போது அண்ணன் பூ தர மறுக்கும் இடங்களிலெல்லாம் அண்ணன் தங்கையைப் பின்வரும் சொற்களால் திட்டித் தீர்க்கின்றான்.

> "பாவி—நிலி (க. எ. 3,4, 10); பாதகத்தி (2); நெட்டூரி (1, 9); நெட்டருவி (11, 12); நெட்டுருவி (16); நிட்டுருவி (17); நெத்திலி (14); பொன்னுருவி (20); கொடிசூலி (5); தொத்தல், ரெட்டிச்சி (13); பத்தினி—அவுசேரி—காந்தேரி (13-14); புண்ணுவதி—பொண்விதி—புண்ணியவதி (15-19)" (1988 : 29).

மேற்கூறியவற்றுள் புண்ணியவதி, பத்தினி, ரெட்டிச்சி என்பன வஞ்சப் புகழ்ச்சிச் சொற்கள் என்பார் இராமநாதன் (ப. 29). தங்கை அண்ணன்மீது கொண்டிருந்த காம நாட்டமே தன் கன்னித்தன்மை இழப்பிற்கு அண்ணனைக் காரணமாக்குகிறது. செயல் வடிவில் நிறைவேற்றிக்கொள்ள இயலா இடிப்பஸ் காமம் சொல் வடிவில் வெளிப்பட்டு நிறைவு பெறுகிறது. கனவு, கவிதை ஆகியவற்றைப் போலப் பேச்சும் ஒருவகை நிறைவேறா வேட்கையின் தீர்வே. நிட்டூரி தன் அண்ணன் மீது கொண்ட இடிப்பஸ் காமம் இக்கதையில் முற்றிலுமாக மூடி மறைக்கப்பட்டு அனைத்தும் குறியீடுகளின் வழியே புலப்படுத்தப்படுகின்றன. கொண்டையில் வைத்துக் குலுக்கிடுவாள் என்றும், கூந்தலில் வைத்துக் குலுக்கிடுவாள் என்றும் கூறப்படுமிடங்களிளெல்லாம் கொண்டை, கூந்தல் என்பன பெண்குறியைக் குறிக்கும் படிமங்கள் என்பதில் தடையேதுமில்லை. இங்குப் பூ என்பது சின்னண்ணனைக் குறிக்கும் குறியீடாகும். இவையெல்லாம் நிட்டூரி தன் அண்ணன் மீது கொண்ட இடிப்பஸ் காம நாட்டத்தைச் சுட்டுவனவாகவே கருத முடிகிறது.

சொந்த தந்தை / சகோதரன்மீது மகள் / சகோதரி கொள்ளும் காம நாட்டத்தை எலக்ட்ரா காம்ப்ளெக்ஸ் (Electra Complex) எனப் ஃபிராய்ட் விளக்கினார். பின்னர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணுக்கு எழும் இச்சிக்கலும் இடிப்பஸ் காம்ப்ளெக்ஸ் எனும் பெயரிலேயே விளக்கப்பட்டது. பெண் தன் தந்தைமீது கொண்ட முறையற்ற காமத்திற்கு முன்னுதாரணமாக எலக்ட்ரா தொன்மத்தை ஃபிராய்ட் சுட்டிக் காட்டினார். இத் தொன்மத்தில் மகள் தந்தைமீது காமம் கொண்டு தாயை வெறுப்பதாகக் காட்டப்படுகிறது. நிட்டூரி கதையில் சகோதரி சகோதரன்மீது காமம் கொண்டமை காட்டப்படுகின்றது. சகோதரி சகோதரன்மீது கொள்ளும் காமம், மகள் தந்தைமீது கொள்ளும் காமம் ஆகிய இரண்டும் ஒரே அமைப்பில் அடங்கு வனவே. உலகப் பண்பாட்டில் சகோதரன் என்பவன் தந்தைக்கு இணையான உறவோடும், சகோதரி என்பவள் மகளுக்கிணையான உறவோடும் இருப்பது யாவரும் அறிந்ததே.

இந்த நிட்டூரி கதை காட்டும் இடிப்பஸ் காமத்தோடு பெரிதும் ஒப்புமை (Thematic Parallel) கொண்ட வேறுசில நாட்டுப்புற இடிப்பஸ் கதைகளும் தமிழகத்தில் கிடைக் கின்றன. சான்றுக்குப் பின்வரும் கதைகளைக் குறிப் பிடலாம் (கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு கதைகளும் இராமநாதனின் தமிழ் நாட்டுப்புற இலக்கியங்களில் முறை யற்ற பாலுறவுச் செய்திகள்-ஓர் ஆய்வு எனும் கட்டுரையி லிருந்து பெற்றவை).

1. சிற்றன்னை, மூத்தாள் மகனுடன் பாலுறவு கொள்ள முயற்சிக்கிறாள். மகன் என்று கூறி அவன் மறுக்க, 'நான் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டி வளர்த்த தாயில்லை' என்று கூறி அவள் தன் முயற்சியைத் தொடர்கிறாள். 'சிற்றன்னை என்றாலும்' தாய்தான்; எனவே நான் இந்த அற்ப மான காரியத்தில் ஈடுபடமாட்டேன்'! என்று கூறி மறுப்பதோடு அவன் தன் தந்தையிடம் கூறி விடுவதாகக் கூறுகின்றான். ஆனால் சிற்றன்னை முந்திக்கொண்டு அவன் தன்னிடம் தவறாக நடந்துகொண்டான் என்றும்

இ—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனைக் கொல்லாவிட்டால் தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் கணவனிடம் கூறுகின்றாள். அதனை நம்பி அவன் மனைவியின் துணையுடன் மகனைக் கொன்று தோட்டத்தில் புதைக்கிறான். மணமாகி வெளியூரில் இருந்த அவன் மகள் தன் அண்ணன் கொலையுண்டதாகக் கனவு கண்டு ஓடி வருகிறாள். அதனை உறுதிப்படுத்திக்கொண்ட அவள் தன் தந்தையையும், சிற்றன்னையையும் வெட்டிக் கொன்று பழிவாங்குகின்றாள்.

2. அண்ணனுக்குத் திருமணமான பின் அவனும் அவன் தம்பியும் ஆறு ஆறு மாதங்கள் காடு சென்று மாடு மேய்ப்பது என்று ஏற்பாடு. அண்ணன் காட்டிற்கு மாடு மேய்க்கச் சென்ற காலத்தில் தம்பி வீட்டிலிருந்தான். அண்ணி அவனைப் பாலுறவுக்கு அழைக்க அவன் மறுக்கிறான். அவன் தன்னுடைய அண்ணனிடம் உண்மையைக் கூறினால் தன் உயிருக்கே ஆபத்து என நினைத்த அவள் அவனைக் கொன்று புதைத்து விடுகிறாள். அவனுடைய நாய் அண்ணனுக்கு உண்மையை விளங்க வைக்கிறது. அண்ணன் தன் மனைவியைக் கொல்கிறான்.

மேற்குறிப்பிட்ட கதைகளை இடிப்பஸ் கதைகள் எனக் கொள்வதில் யாருக்கும் தடையிருக்காது. நீட்டூரி கதையில் சகோதரி சகோதரன் மீது கொள்ளும் காமம் காட்டப் படுகிறது. மேற்குறிப்பிட்ட கதைகளில் சிற்றன்னை மகன் மீது கொள்ளும் காமம், அண்ணி கொழுந்தன்மீது கொள்ளும் காமம் ஆகியன காட்டப்படுகின்றன. சிற்றன்னை மகனை விரும்புவதும் அண்ணி கொழுந்தனை விரும்புவதும் உண்மை இடிப்பஸ் வடிவின் மாற்று வடிவங்களே என்பதில் ஐயமில்லை. நிட்டூரி கதையில் உடன்பிறந்த தங்கை அண்ணன் எனக் காட்டப் பெற்றபோதும் (மூல வடிவம்-1) தங்கை கொண்ட காமம் வெளிப்படையாகக் காட்டப் பெறாமல் படிமங்களினூடே மூடி மறைக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிற்றன்னை மகன்மீது காமம் கொள்வதாகவும் அண்ணி கொழுந்தன் மீது காமம் கொள்வதாகவும் காட்டப்படும் கதைகளில் காமம் கொண்டமை வெளிப்படையாகக் காட்டப் பெறுகின்றது. அதே வேளையில் உண்மைத் தாய் உண்மை மகன் என்ற இடிப்பஸ் அமைப்பு மறைக்கப்படுகிறது. ஆக நிட்டூரி கதையாயினும் சரி ஏனைய கதைகளாயினும் சரி உண்மை இடிப்பஸ் அமைப்பு மறைக்கப்படுகிறது என்பது தெளிவாகின்றது. நிட்டூரி கதையின் (மூல வடிவம் 1-ல்) உடன் பிறந்த அண்ணன் தங்கை என்ற உறவுமுறை காட்டப் படுகிறது. ஏனைய வடிவங்களில் ஒன்றுவிட்ட அண்ணன் தங்கை உறவாகவும் (மூல வடிவம்-2), வேலைக்காரன் சின்னான், எஜமானி ஆகியோரின் உறவாகவும் (மூல வடிவம்-4) மாற்ற முறுகிறது. (மூல வடிவம் 4-ல்) காட்டப் படும் சின்னான், எஜமானி உறவு முறை சின்னண்ணன் தங்கை உறவு முறையின் மாற்றமே. சின்னண்ணன் 'சின்னான் என்ற வேலைக்காரனாக மாற்றம் பெறுகிறான். எனும் இராமநாதனின் யூகமும் (1988 : 54) மேற்கூறிய கருத்திற்கு வலிவு சேர்க்கிறது. இந்தப் பிந்தைய மாற்றம் பண்பாட்டையொட்டி விளைந்தது. இதை ஃபிராய்டிய அடிப் படையில் சொல்லவேண்டுமானால் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஒன்றைப் பண்பாட்டிற்கு ஒத்துவருவதுபோல் மாற்றி உயர்வழிப்படுத்துவது (Sublimation) எனக் கூறலாம். இதை நனவு மனதின் 'தற்காப்பு நடவடிக்கை' (Defence Mechanism) என்பார் ஃபிராய்ட். பெற்ற தாய்க்கும் மகனுக்கும் உடலுறவு என்பதோ உடன்பிறந்த தங்கைக்கும் அண்ணனுக்கும் உடலுறவு என்பதோ பண்பாட்டிற்குப் புறம்பானது. இந்தப் பண்பாட்டு வரையறையை மீற இயலாத நனவு மனம்/படைப்பிலக்கியம் உண்மைத் தாய்க்குப் பதிலாக சிற்றன்னை என்றும் உண்மை மகனுக்குப் பதிலாக மூத்தாள் மகன் என்றும் சகோதரி சகோதரன் மீது கொண்ட காமக் கதையை (Oedipal Story) கொலைக் கதை (Crime Story) என்றும் காட்டி உண்மையின் மீது பண்பாட்டுச் சாயத்தைப் பூசிவிடுகிறது. உண்மை பண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டுத் திரையினால் மறைக்கப்படுகிறது. இந்தப் பண்பாட்டுத் திரையை விலக்கிவிட்டுப் பார்ப்பேமாயின் உண்மையான இடிப்பஸ் தெற்றெனு விளங்கும். நிட்டூரி கதையில் நிட்டூரி கொண்ட இடிப்பஸ் காமம் படிமங்களினுள்ளே மறைக்கப்பட்டுள்ளதையும் சமுதாயத்திற்கு ஒத்துவருவது போல் காட்டப்பட்டுள்ள முயற்சியே.

சகோதரி சகோதரன் மீது கொள்ளும் காமம், தாய் மகன் மீது கொள்ளும் காமம், அண்ணி கொழுந்தன்மீது கொள்ளும் காமம் ஆகியன நிறைவேறாதபோது சம்பந்தப்பட்ட ஆண்கள் வஞ்சகமாகக் கொலை செய்யப்படுகிறார்கள் என்பதை மேற்காட்டப்பட்ட கதைகளிலிருந்து அறியமுடிகிறது. இக்கதைகள் பெண்கள் கொண்ட இடிப்பஸ் காமத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் ஆண்கள் இடிப்பஸ்ஸில் சிக்கிக்கொள்ளும் வேளையில் அவ்வாண்கள் தங்களைத் தாங்களே வதைத்துக் கொள்வதாகவே முடிகின்றது. இதற்கு இடிப்பஸ் மன்னன் இறுதியில் தன் கண்களைத் தானே குருடாக்கிக் கொள்வதும் நம் பண்பாட்டில் இடிப்பஸ்ஸில் சிக்கிய விநாயகனும், ஜெயகாந்தனின் ரிஷிமூலம் நாவலில் வரும் ராஜாராமனும் வாழ்வை வெறுத்துச் சந்நியாசியாகிப் போவதும் நல்ல சான்றுகளாகும். பெண்ணின் இடிப்பஸ் காம நாட்ட வெளிப்பாடுகளில் தவற்றிற்குச் சம்பந்தப்படாத ஆண் தண்டனை அடைவதையும், ஆணின் இடிப்பஸ் காம நாட்ட வெளிப்பாடுகளில் சம்பந்தப்பட்ட ஆண் தன்னைத்தானே தண்டித்துக் கொள்வதும் ஆகிய முடிவுகளைப் பெண்ணிய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஆணாதிக்க அமைப்பே இத்தகைய முடிவுகளுக்குக் காரணம் என்பது புரிகிறது. ஆணே அனைத்தையும் முடிவு செய்பவன் என்பதும் பெண்ணின் இடிப்பஸ் காமம் நிறைவேறாதபோது அவள் தன்னிச்சையாக எந்த முடிவையும் (வாழ்க்கையை வெறுத்து விலகுவது) எடுக்க இயலாது என்பதையும் இந்த ஆணமைப்புக் கதைகள் புலப்படுத்துகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிட்டூரி கதையில் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமான போது எங்கும் பூ கிடைக்கவில்லை. சின்னவனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து குடும்பத்தார் பறிக்கச் செல்ல பூக்கள் மறைந்து வாடிவிடுகின்றன. அவர்கள் பூ கேட்க பூந்தாவரம் வாயிலாகச் சின்னவன் தன் கொலைக்குக் காரணமானவள் தங்கை என்ற உண்மையை அனைவரும் அறியும்படி வெளிப்படுத்திப் பூ தர மறுத்து விடுகிறான். இக்கதையில் திருமணத்திற்குப் பூ தர மறுப்பது, பறிக்கச் செல்கையில் பூ வாடிப்போதல் என்பன முறையற்ற காம நாட்டம் கொண்டோருக்குச் சமூகத்தில் அங்கீகாரம் இல்லை என்பதன் குறியீட்டு வெளிப்பாடு எனலாம். அதே வேளையில் முதலில் பூ தர மறுப்பவன் மாமன் சென்று பூ கேட்கும்போது பூ தருவதோடு சகோதரியின் திருமணத்தில் தெய்வமாக நின்று வாழ்த்துகின்றான் (மூல வடிவம்-3). இதிலிருந்து முறையான காமத்திற்குச் சமூகத்தின் அங்கீகாரம் உண்டு என்பதையும் குறியீட்டுப் போக்கில் உணர்த்துவதாகத் தெரிகிறது. இங்கு மாமன் என்பவனை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாலுறவின் (Super ego) குறியீடாகக் கொள்ளலாம். இந்த விளக்கமே இராமநாதனின் இறுதிக் கேள்வியான பூ தர மறுத்த பிறகு திருமணம் நடைபெறுவது முரணாக உள்ளது என்பதற்கு விடையாகக் கிடைக்கிறது. முறை மாமன் வந்து பூ கேட்க பூ கிடைக்கின்றது. திருமணம் நடைபெறுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHY

Anthony Storr (1989) — FREUD
Oxford, New York.

Apter, T.E. (1982) — FANTASY LITERATURE
Macmillan Press Ltd.
London

Bloom. Clive (1988) — READING POE READING FREUD—The Romantic Imagination in Crisis,
Macmillan Press, London

Bloom, Herold (1973) — THE ANXIETY OF INFLUENCE
A THEORY OF POETRY
Oxford University Press
London

Bowie, Malcolm (1987) — FREUD, PROUST AND LACAN : THEORY AS FICTION
Cambridge University Press,
New York.

Bruno, Frank, J. (1986) — DICTIONARY OF KEY WORDS IN PSYCHOLOGY

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Routledge & Kegan Paul
New York

David Stafford—Clark (1983) — WHAT FREUD REALLY SAID
Penguin, New York

Davis, Robert Con (ed) (1986) — CONTEMPORARY LITERARY CRITICISM : MODERNISM THROUGH POST STRUCTURALISM
New York and London
Longman

Dundes Alan (1984) — "The Symbolic Equivalence of Allo Motifs : Towards a method of Analysing Folk Tales"

FOLK TALES WHY AND HOW
D.V. Intrenational (Ed),
De Le Recherche Scientific,
Paris

Dundes Alan (1990) — "Wet and Dry : The Evil Eye Complex"
ESSAYS IN FOLKLORE THEORY AND METHOD,
Crc-A, Madras

Dundes Alan (1979) — "From Etic to Emic units in the Structural Study of Folk tales",

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	ANALYTIC ESSAYS IN FOLK LORE. Mouton New York
Elizabeth Wright (1984)	PSYCHO ANALYTIC CRITICISM—THEORY IN PRACTICE Methuen, London
(1982)	EGYPTIAN MYTHOLOGY The Standard Literature Co. (P) Ltd., India
Freud, Sigmund (1983)	INTRODUCTORY LECTURES ON PSYCHO ANALYSIS Oxford University
Freud, Sigmund (1986)	THE ESSENTIALS OF PSYCHO-ANALYSIS The Hogarth Press and the Institute of Psycho-Analysis, London
Frosh Stephen (1987)	THE POLITICS OF PSYCHO ANALYSIS — AN INTRODUCTION TO FREUDIAN AND POST-FREUDIAN THEORY, Macmillan Education London
Gunn, Daniel (1988)	PSYCHO ANALYSIS AND FICTION Cambridge University Press New York

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Horden, Peregreime (Ed) (1985)	FREUD & THE HUMANITIES Duck Worth, London
Huges Richard, E (1975)	THE LIVELY IMAGES — 4 MYTHS IN LITERATURE Winthrop Publishers Cambridge
Jones, Ernest (1984)	THE LIFE AND WORK OF SIGMUND FREUD, Penguin Books, Reprinted England
Macay, David (1988)	LACAN IN CONTEXTS Verso, London
Neil, Timothy, R.O.	INDIVIDUATED HABBIT Tames and Hudson Ltd. London
Petrovsky and Yaroshevsky, M.G. (Ed) (1987)	A CONCISE PSYCHOLOGICAL DICTIONARY Progress Publishers Moscow
Reber, Arthur, S. (1985)	DICTIONARY OF PSYCHOLOGY Penguin Books. England
Rimmon-Kenan, Shlomith (Ed) (1987)	DISCOURSE IN PSYCHO ANALYSI3 & LITERATURE Methuen, London

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Rogers, Dorothy (1977) — CHILD PSYCHOLOGY (2nd Edition) Brookskole Publishers Co., Kalifornia

Seturaman, V.S., (Ed) (1989) — CONTEMPORARY CRITICISM AN ANTHOLOGY Macmillan, Madras

Shepard, D.L. (1977) — PSYCHOLOGY, THE SCIENCE OF HUMAN BEHAVIOR S.R.A, Chicago

Smith Joseph. H. (1981) — INTERPRETING LACAN The Forum on Psychiatry and the Humanities of the Washington School of Psychiatry, New York

Wellek, Rene (1970) — DISCRIMINATIONS — FURTHER CONCEPTS OF CRITICISM Vikas Publications New Delhi

Wellek, Rene and Austin Warren (1986) — THEORY OF LITERATURE Penguin Books. England Reprinted

Yung, C.G. (1953) — "The Archetypes and the collective unconscious", COLLECTED WORKS OF C.G. YUNG

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Routledge & Kegan Paul, London, USA

Yung, C.G. (1980) "The concept of the collective unconscious" Joseph Cambell (Ed), THE PORTABLE YUNG, Penguin, Reprinted, New York

Yung, C.G. (1972) "Psychology and Literature", David Lodge (Ed), 20th CENTURY LITERARY CRITICISM Longman, London

ARTICLE
Ponnuswamy (1991) "Literature and Psychology" (Unpublished),

தமிழ் நூல்கள்

இந்து பப்ளிகேஷன்ஸ் (1985) : விநாயகர் புராணம். சென்னை.

இராசகோபால். கோவி (1985) ; காமன் கதைப் பாடல்... ஓர் ஆய்வு மாருதி பதிப்பகம், சென்னை.

இராமநாதன், ஆறு (1988) : வரலாற்று நிலவியல் ஆய்வு முறை அறிமுகமும் ஆய்வுகளும் தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கச்சியப்ப முனிவர் (1985) : கந்த புராணம் மணிமேகலைப் பிரசுரம் சென்னை.

சச்சிதானந்தன். வை. (1985) : ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம் மேக்மில்லன், சென்னை.

சண்முகம் பிள்ளை மு. (பர்). (1985) : குறுந்தொகை மூலமும் உரையும் தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்.

சேக்கிழார் (1987) : பெரிய புராண விளக்கம் அல்லயன்ஸ், சென்னை.

தமிழண்ணல் (1985) : ஒப்பிலக்கிய அறிமுகம் மீனாட்சி புத்தக நிலையம் மதுரை.

தி லிட்டில் பிளவர் கம்பெனி (1986) : நாலாயிரத் திவ்விய பிரபந்தம் சென்னை.

தொல்காப்பியர் (1969) : தொல்காப்பியம் (பொருளதிகாரம்) கழகம், சென்னை.

பரஞ்சோதி முனிவர் (1969) : திருவிளையாடற்புராணம் கழகம், சென்னை.

மகாதேவன் கதிர் (1989) : தொன்மம்-இந்தியப் புராண வகைகள் ஒப்பாய்வு (2-ஆம் பதி) இலட்சுமி வெளியீடு, மதுரை.

ராமநாதன். அரு. (பர்) (1986) : சிந்தனையாளர் பிராய்ட் (2-ஆம் பதி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரேமா பிரசுரம்
சென்னை.

ஜெயகாந்தன் (1985) : சிலநேரங்களில் சில மனிதர்கள்
மீனாட்சி புத்தக நிலையம்
சென்னை.

ஜெயகாந்தன் (1978) : ரிஷிமூலம் (5-ஆம் பதி)
மீனாட்சி புத்தக நிலையம்
சென்னை.

ஜெயகாந்தன் (1934) : ஜெயகாந்தனின் முன்னுரைகள் (2-ஆம் பதி)
மீனாட்சி புத்தக நிலையம்
சென்னை.

(1985) ஸ்ரீசிவ மகாபுராணம்
(முதற்பாகம்)
(4-ஆம் பதி),
பிரேமா பிரசுரம், சென்னை.

ஆய்வேடு

இரவிச்சந்திரன், தி. கு. (1991) : ஃபிராய்டிய நோக்கில் சங்க அக இலக்கியப் பாடல்கள்
(குறுந்தொகை மட்டும்)
புதுவைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பெற்ற
ஆய்வேடு, புதுச்சேரி.

கட்டுரை

இராமநாதன், ஆறு : தமிழ்நாட்டுப்புற இலக்கியங்களில்
முறையற்ற பாலுறவுச் செய்திகள் —ஓர் ஆய்வு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருஞ் சொற்பொருள் விளக்கம்

(GLOSSARY)

இச்சை உணர்ச்சி (id) : ஃபிராய்டிய கோட்பாட்டடிப் படையில் இச்சை உணர்ச்சி என்பது மனிதனின் தொடக்க (Primitive) உணர்வாகவும் மூல உணர்வாகவும் (Basic Part) இருப்பது. இவ்வுணர்வு மனிதனுக்கு மட்டுமல்லாது எல்லா உயிர்க்கும் பிறவியிலேயே வருவது.

இடப்பெயர்வு (Displacement) : ஒருணர்ச்சி பிறிதோர் உணர்ச்சியாக மாறுவதையே இடப்பெயர்வு எனச் சொல்லப் படுகிறது. பெரும்பாலான பயங்கரக் கனவுகளுக்குக் காரணம் இச்சை உணர்ச்சியே. இச்சை உணர்ச்சியே பய உணர்ச்சியாக இடம் பெயர்கிறது. பாம்பு துரத்துவது, ஓநாய் துரத்துவது போன்ற கனவுகளுக்குக் காரணம் இச்சை உணர்ச்சியின் இடப் பெயர்வே.

உயர்வழிப்பாடு (Sublimation) : உயர்வழிப்பாடு என்பது விரும்பத் தகாத ஓர் ஆசையை வேறு விதத்தில் வழி மாற்றி விட்டு உயர்வுபடுத்துதல். உதாரணமாக மோக இச்சைக்காகத் துடிக்கும் சக்தியைக் கலை அல்லது பக்தியில் ஈடுபடுத்தி உயர்வழிப் படுத்துவதாகும். இச்சை உணர்ச்சியின் ஆவேசம் இவ்வாறு உயர்வழிப் படுத்தப்படுவதால்தான் கலையும் விஞ்ஞான வளர்ச்சியும் உண்டாகின்றன. எடுத்துக் காட்டுக்கு அப்பர் பாடிய 'மாசில்வீணையும் மாலை மதியமும்' என்ற பாடலில் மாசில் வீணை, மாலை மதியம், வீசு தென்றல், வீங்கிளவேனில், மூசு வண்டறை, பொய்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் இன்பம்போன்றதே ஈசனின் இணையடி நிழல் என்று தனது பக்தி உணர்ச்சியை வெளிப் படுத்துகிறார் அப்பர். இப்பாடலில் வெளிப்பட்டுள்ள படிமங் களான வீணை, மதியம், இளவேனில், பொய்கை போன்றன பெண் படிமங்களாகும். வீசு தென்றல், மூசு வண்டு ஆகியன ஆண் படிமங்களாகும். தென்றல் வீசுதல், வண்டு முரலுதல் ஆகியன கலவிப் படிமங்களாகும். இவ்வடிப்படையில் இப் பாடலை நோக்கும்போது இப்பாடலினுள்ளே இச்சை உணர்ச் சியின் விழைவு மறைந்திருப்பது தெரிகிறது. இந்த இச்சை உணர்ச்சி நனவிலி நிலையில் ஈசனின் இணையடி நிழலாக உயர்வழிப் படுத்தப்படுகிறது. பிரம்மச்சாரியான அப்பரின் இயல்பான இச்சையுணர்ச்சி பக்தி உணர்ச்சியாக இப்பாடலில் வெளிப்பட்டுள்ளது. உயர்வழிப் படுத்தல் பற்றிய விவரமான விளக்கத்திற்கு இந்நூலில் இடம் பெற்றுள்ள இச்சைஉணர்ச்சி யின் உயர்வழிப்பாடு எனும் கட்டுரையைக் காண்க.

உளப்பகுப்பாய்வு (Psycho analysis) : உளப் பகுப்பாய் வின் தந்தை சிக்மண்ட் ஃபிராய்ட் என்பது கருத்துவேறுபாடுக்கு அப்பாற்பட்டது. இவரே முதல் மன நோய் மருத்துவர் என் பதும் அறியத்தக்கது. அதே வேளையில் உளப்பகுப்பாய்வும் உள மருத்துவமும் ஒன்றல்ல. உள நோய் மருத்துவ முறை களில் ஒன்று உளப்பகுப்பாய்வு. இம்முறையே எல்லோராலும் பெரிதும் அறியப்பட்ட முறையாகும். அதே நேரத்தில் ஏராள மான சர்ச்சைக்கும் இம் மருத்துவ முறை உள்ளானது. உளப் பகுப்பாய்வு முறை ஒரு பயன் தரும் முறையா? எனும் வினா விற்கு அவ்வளவு எளிதாக உண்டு இல்லை எனும் பதிலைத் தந்துவிட இயலாது. பெரும்பாலான மன நோய்கள் இந்த மருத்துவ முறையால் குணம் பெற்றுள்ளன என்பது மறுக்க இயலா உண்மை. மன அமுக்கம் மிகுதியாகும் போது மனித னிடம் மனநோய் அறிகுறிகள் (Symptoms) தென்படும் என் றார் ஃபிராய்டு. இந்நோயை உளப் பகுப்பாய்வு முறையின் மூலம் குணப்படுத்தலாம் என்பது அன்னாரின் துணிபு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உளவியற் பள்ளிகள் (Schools of Psychology) : உளவியல் பள்ளி எனும் சொல் இரு வகைப் பொருள்களைக் கொண்டது. இவ்விருவகைப் பொருள்களும் ஒன்றோடொன்று உறவுடையன. முதலாவது பொருளில் உளவியல் பள்ளி என்பது ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரையும் அவர்களது உளவியல் ஆய்வுப் போக்கையும் சுட்டுகிறது. இரண்டாவது பொருளில் உளவியல் பள்ளி என்பது குறிப்பிட்ட உளவியல் ஆய்வுக்கோட்பாடுகளையும் சிந்தனையையும், தொடர்புடைய அறிஞர்களையும் சுட்டுகிறது.

உளப்பகுப்பாய்வு என்பது உளவியல் பள்ளிகளுள் பிரதானமானது. இதன் தந்தை சிக்மண்ட் ஃபிராய்ட். ஃபிராய்டிற்கடுத்து இப் பள்ளியைச் சேர்ந்த முதன்மையான அறிஞர்கள் ஆல்ஃபிரட் அட்லர் (Alfred Adlur), சி.ஜி. யூங் (Carl Gustav Yung), ஆட்டோ ரேங்க் (Auto Rank), ஏர்னஸ்ட் ஜோன்ஸ் (Ernest Jones) ஆகியோராவர். நனவிலி மன உலகம் பற்றிய கருத்தாக்கமே உளப்பகுப்பாவின் மிகப்பிரதான கோட்பாடாக விளங்குகிறது. உளப்பகுப்பாய்வு கைக்கொண்ட ஏனைய கோட்பாடுகளாவன; சாவு விழைவு உணர்ச்சி, இச்சை உணர்ச்சி, மறை பொருள் (Latent Content), இடிப்பஸ் சிக்கல், பண்பாட்டுணர்ச்சி இன்ன பிற. தொடக்கக் கால ஐந்து உளவியல் பள்ளிகளாவன; உளப்பகுப்பாய்வு, அமைப்பு உளவியல் (Structuralism), செயற்பாட்டு உளவியல் (Functionlism), நடத்தை உளவியல் (Behaviourism), முழு அமைப்பு உளவியல் (Gestalt Psychology). அண்மைக் காலத்தில் மாந்த உளவியல் (Humanistic Psychology) என்ற ஆறாவது பிரிவும் உருவாகியுள்ளது.

உறைவு (Condensation) : உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு அடிப்படையில் சொல்ல வேண்டுமென்றால் நனவிலி உணர்வுகளின் இழைவையே உறைவு என்று சொல்லலாம். இந்த இழைவைப்படிமங்களின் இழைவின் மூலம் உணரலாம். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட படிமங்கள் அல்லது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுகள் பின்னிப் பிணைந்து உருப்பெற்று ஒரே படிமமாக வெளிப்படுவதை உறைவு எனலாம். உறைவுப் பண்பு மிகும் போது படிமம் குறியீடாகிறது. உறைவுப் படிமங்கள் (Condensed Images) உள்ளுறைப் பொருளைக் (Symbolic meaning) கொண்டிருக்கும். இந்த உறைவுப் படிமங்கள் கனவு அல்லது படைப்பாக்கங்களில் மிகுதியும் வெளிப்படும். உறைவுப் படிமத்திற்குத் தமிழில் சிறந்த காட்டாக காமதேனு படிமத்தைச் சுட்டலாம். இது பறவை, மனிதன், விலங்கு போன்ற பல வடிவங்களும் இணைந்த ஒரு கூட்டுப் படிமம். இதற்கு ஒரு குறியீட்டுப் பொருள் உண்டு.

கனவு (Dream) : உறக்க வேளையில் மனிதனிடத்தில் எழும் எண்ணக் கோவைகளே கனவு எனப்படுகிறது. கனவு என்றால் இன்னது என விளக்க ஏராளமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் ஃபிராய்டின் கனவுக் கோட்பாட்டு விளக்கம் சிறப்பு வாய்ந்தது, பலராலும் அறியப் பட்டது. ஃபிராய்டு கனவு என்பது மனதின் ரகசிய வேட்கை யின் வெளிப்பாடு என்றார். கனவு இருவகைப்படும். அவை 1. வெளிப்படைக் கனவு. 2. குறியீட்டுக் கனவு. இந்தக் குறியீட்டுக்கனவு இருவகைப் பொருள்தளங்களை உடையது. அவை 1. வெளிப்படைப் பொருள் (Manifest content) 2. உட்பொருள் (Latent content). இதில் வெளிப்பொருள் என்பது கனவில் வெளிப்பட்ட படிமங்களை, நிகழ்ச்சிகளை சாதாரண கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளுதல். உட் பொருள் என்பது மறைக்கப்பட்ட வேட்கையாகும். வெளிப் பொருள் என்பது மறைக்கப்பட்ட உட்பொருளின் மாற்று வடிவமாகும். இதை நனவு மனதால் தணிக்கை செய்யப்பட்ட நனவிலி மனதின் இச்சை உணர்வுகள் எனலாம். யூங் ஃபிராய் டிலிருந்து சற்று வேறுபட்டுக் கனவு என்பது மறைக்கப்பட்ட வேட்கையின் வெளிப்பாடு மட்டுமின்றி நனவு மனமறிந்த நம்பிக்கை, நடுக்கம் இன்ன பிறவற்றின் உருமாறிய வடிவம் என்றும் கொள்ளலாம் என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறியீட்டாக்கம் (Symlolic process / sympolization) : அமுக்கப்பட்ட வேட்கைகளைப் படிமங்களின் உள் புதைக்கும் மனதின் நனவு நிலை / நனவிலி நிலைச் செயற்பாட்டையே குறியீட்டாக்கம் என உளப்பகுப் பாய்வு அடிப்படையில் சொல்லலாம். இந்தக் குறியீட்டாக்கச்செயற்பாடு என்பது மனதின் தற்காப்பு நடவடிக்கைகளில் ஒன்று என்பார் ஃபிராய்ட் (காண்க: தற்காப்பு நடவடிக்கை). நனவிலி மனதின் தேவைகள் முழுதுமாக உருமாறி (Diguise) தீர்வுபெறுவதை குறியீட்டாக்கம் என விளங்கிக் கொள்ளலாம்.

குறியீடு (Symbol) : குறியீடு என்பது பலதுறைகளிலும் பல பொருளில் கையாளப்படுகிறது. உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டடிப்படையில் நோக்கும் போது குறியீடு என்பது நனவிலியின் பிரதி நிதியாக / உண்மையின் பொய் வடிவமாக வெளிப்படுகிறது. வெளிப்பட்ட நனவு மனப்படிமங்களினுள்ளே நனவிலி மன ஆசைகள் மறைந்திருக்கும். இவ்வாறு நனவிலி மன ஆசைகளை உள் வைத்திருக்கும் நனவு மனப் படிமங்களையே குறியீடுகள் எனலாம். அடுத்து குறிப்பிட்டதொரு செயல் அல்லது குறிப்பிட்டதொரு பழக்கம் கூட குறியீடாகலாம். எந்த ஒரு புறஉலகப் பொருளும் நனவிலி மன வேட்கையின் குறியீடாகலாம். அதே நேரத்தில் புற உலகப் பொருளின் பண்புகள் நனவிலி மன வேட்கையின் பண்புகளோடு ஒத்திருக்கும் போது மட்டுமே படிமம் குறியீடாக முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கோபுரம் (Tower) என்பது ஆண்குறிக் குறியீடாகலாம் (நீண்டு உயர்ந்த பண்பில்). அடுத்து உணர்ச்சி வசப்படுதல், நடுக்கம் போன்ற நடத்தைகளும் மன உணர்வின் குறியீடாகலாம்

குறைநனவு மனம் (Subconscious mind): மனம் மூன்று கோணங்களில் பகுக்கப்பட்டது. அவை : 1. நனவு மனம். 2. குறை நனவு மனம் 3. நனவிலி மனம். இவற்றுள் குறை நனவு மனம் என்பது நனவு மனத்திற்கும் அடுத்த நிலையில் இருப்பது. அரைகுறையாக மறந்த எண்ண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வோட்டங்கள் உறையும் மனப்பகுதி குறை நனவு மனமாகும். குறை நனவு மன எண்ணங்கள் முழுதுமாக நனவு நிலையிலும் இல்லாமல் முழுதுமாக நனவிலி நிலையிலும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் இருப்பது. மறந்துபோன சில எண்ணங்கள் திடீரென நனவு மனதின் வழியே வெளிப்படும். எடுத்துக் காட்டிற்குச் சொல்ல வேண்டுமானல் நெருங்கிப் பழகிய ஒருவரைப் பல்லாண்டு இடைவெளிக்குப் பின் பார்க்கும்போது மறந்துபோன நிலையில் எங்கோ பார்த்த ஞாபகம் தோன்றும். ஆனால் நினைவிற்கு எட்டாது. பிறகு வேறெங்கேனும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென்று அவர் இன்னாரென நினைவுக்கு வரும். இத்தகைய பண்புடைய எண்ணங்கள்தான் குறை நனவு மனதில் கிடக்கின்றன. தமிழ்ப் படைப்பாக்க உலகில் இதற்கொரு நல்ல எடுத்துக் காட்டுச் சொல்ல வேண்டுமென்றால் பாரதிதாசனின் 'குறிஞ்சித் திட்டுப்' படைப்பாக்க முயற்சியைச் சொல்லலாம். பாரதிதாசன் குறிஞ்சித் திட்டை எழுதத் தொடங்கி அரைகுறையாக நிறுத்தி விட்டுப் பத்தாண்டுகள் கழித்து (இடைப்பட்ட காலத்தில் பல படைப்புகளை எழுதியுள்ளார்) முன்னர் அரைகுறையாக நின்றுபோன குறிஞ்சித் திட்டை முழுமையாக்குகிறார். குறை நனவு மனதில் உறைந்திருந்த குறிஞ்சித் திட்டின் கதை, பாத்திர வார்ப்புப் போன்றவை பத்தாண்டுகள் கழித்து நனவு மனதின் வழியே வெளியேறி குறிஞ்சித் திட்டாகிறது. சப்கான்ஷியஸ் என்ற சொல் முதன் முதலில் ஃபியரி ஜெனட் (Pierre Janet - 1859-1942) என்பவரால் கையாளப்பட்டது. இவர் ஹிப்னாசிஸ் முறை மூலம் நனவு நிலைக்கும் கீழே அரைகுறையாக மறைந்து வாழும் எண்ணங்களைக் கண்டறிந்தார். ஃபிராய்டும் இந்தக் குறை நனவு மனக் கோட்பாட்டை உடன்பட்டவர்தான். ஆனால் இதற்கு ஃபிராய்ட் கையாண்ட சொல் பிரி கான்ஷியஸ் (Preconscious) இது ஃபியரிஜெனட் கூறிய குறை நனவு மனதிற்கும் அடுத்த நிலையில் உள்ளது! என ஃபிராய்ட் கருதினார். இதாகடுத்த நிலையில் இருப்பதுதான் (3வது நிலை) நனவலி மனம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இம்மனம் அமுக்கப்பட்ட உணர்வுகளால் உருவாக்கம் பெறுகிறது (காண்க : மன அமுக்கம்). இந்தக் குறை நனவு மனம் நனவிலி மனதிலிருந்து வேறுபட்டது. இம்மனதிலும் நனவு மனதிற்கு இசைவான உணர்வுகள்தான் வாழ்கின்றன.

கூட்டு நனவலி மனம் (Collective Unconscious): நனவிலி மனம் பற்றிய உண்மையை ஃபிராய்ட் உலகிற்கு உணர்த்திய பின்னர் நனவிலிக்கு அப்பால் கூட்டு நனவிலி மனம் என்பதும் உள்ளது என்பதை யூங் உலகிற்கு உணர்த்தினார். இந்தக் கூட்டு நனவிலி மனதின் வழியேதான் மூலப் படிவங்கள் வெளிப்படுகின்றன. எனவே மூலப் படிவங்களின் கொள்கலம் கூட்டு நனவிலி மனம் எனலாம் (விவரத்திற்கு இந்நூலில் இடம் பெற்றுள்ள "தமிழ் இலக்கியத்தில் மூலப் படிவ மாதிரிகள்" எனும் கட்டுரையையும், வி-நாயக மூலப்படிவம் எனும் கட்டுரையையும் காண்க).

சாவு விழைவு உணச்சி (death Instinct) : மனிதனின் பிறவியோடு வருகின்ற உணர்வுகளில் ஒன்று இந்தச் சாவு விழைவு உணர்ச்சி. இதுவும் முதன்முதலாக ஃபிராய்டால்தான் உணர்த்தப்பட்டது. இந்தச் சாவு விழைவு உணர்ச்சி அழிவாக்கப் பண்டையது. இது சார்ந்தவரையோ / பிறரையோ அழிக்கும் முனைப்புடையது. அவல முடிவு கொண்டு வெளிப்பட்டுள்ள படைப்பாக்கங்களெல்லாம் இந்தச் சாவு விழைவு உணர்ச்சியின் வெளிப்பாடே. கோவலன், சச்சந்தன் போன்ற அவல வீரர்களும் பாவேந்தரின் இருண்ட வீடும் இன்ன பிற துன்பியல் படைப்புகளும் சாவு விழைவு உணர்ச்சியின் வெளிப்பாடே.

ஃபிராய்ட் தொடக்கத்தில் மனிதனின் அடிப்படை உணர்வுகள் இச்சைத் தன்மை கொண்டவையே என்றார். ஆனால் அவரது பிற்கால கண்டுபிடிப்புகளாக வாழ்வுவிழைவு உணர்ச்சியும் (Life Instinct) சாவு விழைவு உணர்ச்சியும் வெளிப்பட்டன. மனித வரலாற்றில் குருதிக் கரையை உண்டாக்கிய இரண்டாம் உலகப் போரை மனித வர்க்கத்தின் சாவு விழைவு உணர்ச்சியின் வெளிப்பாடு எனக் கண்டறிந்தார் ஃபிராய்ட்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம் பண்பாட்டில் சாவு விழைவு உணர்ச்சியின் குறியீடாக 'எமன்' என்ற கடவுளாக்கம் உள்ளது. உலகம் முழுவதும் உள்ள இறப்புக் கடவுள் கருத்தாக்கம் மனித வர்க்கத்தின் சாவு விழைவு உணர்ச்சியின் புலப்பாடே.

தடைஇல் இயைபு முறை (Free association) : தடையில் இயைபு முறை என்பது மனநோயாளியின் நனவிலி மனதிலுள்ள ரகசியத்தை அறிய உளப்பகுப்பாய்வில் பயன் படுத்தப் பட்ட ஒரு உத்தி முறையாகும். இந்த உத்தி முறை யில் நாகரீகம், பண்பாடு எனும் இவற்றிற்காக மறைக்காமல் நோயாளியின் மனதிலுள்ள ரகசியத்தைச் சொல்ல வேண்டு தல். தடை இல் இயைபு முறையில் நோயாளியின் நனவிலி மனதில் புதைந்து கிடந்த ரகசிய வேட்கைகள் வெளிவந்தன. இந்தத் தடைஇல் இயைபு முறை நனவிலி மனக்கதவைத் திறந்து விடும் திறவு கோலாக இருப்பதால் அமுக்கப்பட்ட எண்ணங்களெல்லாம் நனவு மனதின் வழியே வெளிப்படு கின்றன. ஃபிராய்டால் அறிமுகப்படுத்தப் பட்ட இந்தத் தடைஇல் இயைபு முறைக்கு முன் ஹிப்னாஸிஸ் முறையை ஃபிராய்ட் பயன்படுத்தி வந்தார். ஆனால் ஹிப்னாஸிஸ் முறையில் மனத்திலுள்ள ரகசியத்தை நோயாளி முழுமையாக வெளிப்படுத்தாமல் மறைத்ததால் இம் முறையை ஃபிராய்ட் கை விட்டுத் தடைஇல் இயைபு முறையைத் தொடங்கினார்.

தற்காப்பு நடவடிக்கை (Defence Mechanism) : தன் னுணர்ச்சி இச்சை உணர்ச்சியின் உண்மை இயல்புக்கு எதிராகச் செயல்பட்டு உண்மை இயல்பின் பச்சைத் தன்மையைச் சமூகத்திற்கு இசைவான வகையில் மாற்றுதலே மனத்தின் தற்காப்பு நடவடிக்கை எனப்படுகிறது. இந்தத் தற்காப்பு நடவடிக்கை பலவகைப்படும். அவை: கலை யாக்கம் (Fantasy), அறிவாக்கம் (Rationalization), அமுக்கம் (Repression) இன்ன பிற. இலக்கியப் படைப்பாக்கம் என்பது மனதின் தற்காப்பு நடவடிக்கையே என்பதை இந் நூலில் இடம் பெற்ற கட்டுரைகள் விளக்குகின்றன. இந் நூலில் "இச்சை உணர்ச்சியின் உயர்வழிப்பாடு" எனும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரையில் காட்டப்பட்ட குலசேகராழ்வாரின் மீன் பிறவி வேட்டல் என்பது இச்சை உணர்வுக்கு எதிராக நனவு மனம் எடுத்த தற்காப்பு நடவடிக்கையெனில் மிகையாகாது.

முதன் முதலாக நனவு மனதின் தற்காப்பு நடவடிக்கை பற்றி ஃபிராய்ட் விளக்கினார். அதைத் தொடர்ந்து ஃபிராய்டின் மகள் அன்னா ஃபிராய்டு இக்கோட்பாட்டை ஆழப்படுத்தியும் விரிவுபடுத்தியும் விளக்கியுள்ளார். தற்காப்பு நடவடிக்கை நனவு நிலையில் நடக்கும்போது நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் நனவிலி நிலையில் நிகழும்போது அதைப் புரிந்துகொள்ள ஃபிராய்ட் தேவைப் படுகிறார்.

தன்மோகம் (Narcissism): ஃபிராய்டிய அடிப்படையில் நார்சிஸம் என்பது நனவு மனதின் தற்காப்பு நடவடிக்கையில் ஒருவகையாகும். தன் காதல் (Self love) தற்பெருமை (Self admiration), சுயரசனை (Self absorption) ஆகிய பண்புகளைக் கொண்டது தன் மோகம். நார்சிஸம் எனும் சொல் கிரேக்கத் தொன்மத்திலிருந்து எடுக்கப்பட்ட சொல். நார்சிஸ் எனும் இளைஞன் தன்னுருவை முதல் முதலாகத் தண்ணீருள் பார்த்து அவ்வுருவிலேயே மயங்கிக் காதல் கொள்கிறான். தண்ணீரில் தெரியும் தன் பிம்பத்தையே அடையத் துடித்துத் தண்ணீரில் தாவி விழுந்து இறந்து விடுகிறான். இந்தக் கதையின் முடிவு தன்மோகம் இறுதியில் தன் அழிவுக்கே கொண்டு செல்லும் அபாயம் உடையது என்பதை உணர்த்துவதாகத் தெரிகிறது. இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு ஜெயகாந்தனின் ஒரு நடிகை நாடகம் பார்க் கிறாள் எனும் நாவலாகும். கல்யாணி எனும் நடிகை தன் மீது கொண்ட அளவற்ற காதலால் அவளது குடும்ப வாழ்வு சிதைகிறது. கல்யாணியின் தன்மோக நாட்டம் அவளின் ரோஜாமலர் நாட்டமாக (மிக நுட்பமாக) மாற்றிக் காட்டப் பட்டுள்ளது. இங்கு ரோஜாமலர் என்பது கல்யாணியின் பாலுறுப்புக் குறியீடே என்பது உணரத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பண்பாட்டுணர்ச்சி (Super ego) : பண்பாட்டு எண்ணமே பண்பாட்டுணர்ச்சி என உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு நோக்கில் கூறலாம். இது ஒருவனுடைய தர்மம், அதர்மம் பற்றிய சுய அறிவாகும். இச்சை உணர்விற்கு நேர் எதிரானது இந்தப் பண்பாட்டுணர்ச்சி.

பண்பாட்டுணர்ச்சிக் கோட்பாடு ஃபிராய்டால் உருவாக்கப்பட்டது. மனித சமுதாயம் உருவாக்கிக்கொண்ட கூடுதலான பண்பாட்டுச் சட்டதிட்டங்களே மனநோய்க்கு இட்டுச் சொல்கின்றன என்கிறார் ஃபிராய்ட். இச்சை உணர்விற்கும் இப்பண்பாட்டுணர்விற்கும் நடைபெறுகின்ற இடைவிடாத போராட்டமே மனவிறைப்புக்கும் (Tensions) மனோபயத்திற்கும் அடிப்படைக் காரணங்களாகின்றன. இச்சை உணர்விற்கும் பண்பாட்டுணர்விற்கும் நடக்கும் போர் ஜெயகாந்தனின் ரிஷிமூலம் நாவலில் நன்கு வெளிப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. தாயை விரும்பும் தனது இச்சை மனதிற்கும் தடையாய் இருக்கும் சமூக தர்மத்திற்கும் இடையே ராஜாராமன் போராடுவதை ரிஷிமூலம் நாவல் விவரிக்கிறது (இந்நூலில் இடம் பெற்றுள்ள வி-நாயக மூலப்படிவம் எனும் கட்டுரையைக் காண்க).

பால்உள வளர்ச்சிப்படி நிலைகள் (Psycho Sexual Development) :பிராய்டின் பால்உள வளர்ச்சிப் படிநிலைக் கோட்பாடு பரவலாக யாவராலும் அறியப்பட்டது. குழந்தமையிலிருந்து வாலிபப் பருவம்வரை ஆண், பெண் ஆகியோரின் பால்உள வளர்ச்சிப் படிநிலைகள் ஐந்து கட்டங்களைக் கொண்டன. அவை : 1. வாய் நிலை (Oral Stage) (பிறந்ததிலிருந்து 18 மாதம் வரை), 2. ஆசனவாய் நிலை (Anal Stage) (18 மாதங்களிலிருந்து 3 வயது வரை), 3 பாலுணர்வு நிலை (Phallic Stage): 3 வயதிலிருந்து 6 வயது வரை), 4. உணர்வு உறைவு நிலை (Latency Stage) : 6 வயதிலிருந்து 12 வயது வரை), 5. பாலுறுப்பு நிலை (Genital Stage) 12 வயதிலிருந்து முதுமை வரை.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்நிலையில் மனிதனுள் உறையும் பாலூக்கச் சக்தி உடலின் வாய்ப்பகுதியில் மையமிடுகிறது. இப்பருவத்தில் குழந்தைத் தனது கை/கால் விரலையோ (அ) வேறொரு பொருளையோ தன் வாயில் வைத்துச் சுவைத்து மகிழும். கடித்தல், சப்புதல், நக்குதல், துப்புதல் போன்ற குழந்தையின் செயல்கள் வாய்நிலையின் பாலுணர்ச்சி வெளிப்பாடுகளே. ஆசனவாய் நிலையில் மேற்சொன்ன வெளிப்பாடு மாற்ற முறுகிறது. இக்கட்டத்தில் ஆசனவாயில் விரலை/வேறு ஒரு பொருளை நுழைத்து மகிழ்ச்சிகொள்ள முனைகிறது குழந்தை. அடுத்துப் பாலுணர்வு நிலையில் ஆண் குழந்தை ஆண் குறியின் மீதும் பெண் குழந்தை பெண் குறியில் இருக்கும் கிளிட்டோரிஸ் (Clitoris) மீதும் கைவைத்து மகிழும். மேலும் இந்தப் பருவத்தில் ஆண் குழந்தைக்குத் தந்தையின் மீது வெறுப்பும், தாயின்மீது விழைவும், பெண் குழந்தைக்குத் தந்தையின்மீது நாட்டமும் தாயின்மீது வெறுப்பும் உருவாகின்றன. இவற்றைத்தான் ஃபிராய்ட் முறையே இடிப்பஸ் நிலை, (Oedipal Stage), எலக்ட்ரா நிலை (Electra Stage) என்றும் விவரித்தார். முந்தைய நிலைகளில் வெளிப்படுத்தப்பட்ட இச்சை உணர்ச்சி, உணர்வுஉறை நிலையில் மனதிற்குள்ளே உறைகிறது. காரணம் பண்பாட்டுணர்ச்சியின் ஆதிக்கமே. பண்பாட்டுணர்ச்சியின் பெயரால் ஆண்/பெண் விலக்கு தீவிரப்படுத்தப்படுவதால் எதிர்ப்பால் காம நாட்டம் (Hetro Sexual attraction) அமுக்கப்பட்டுத் தன்பால் காமநாட்டத்திற்குக் (Homo Sexual Stage) சிறுவனின் மனம் திரும்புகிறது. அடுத்துப் பாலுறுப்பு நிலையில் பாலியல் படிநிலை வளர்ச்சி முழுமை பெறுகிறது. இந்நிலையில் சுரப்பிகளின் தூண்டலால் உடல்/மன நிலைகளில் ஏற்படும் மாற்றம் எதிர்ப்பால் காம நாட்டத்தை மிகுதிப்படுத்துகிறது.

ஃபிராய்டின் பால் உளவளர்ச்சிப் படிநிலைக் கோட்பாடு பெரிதும் விமர்சனத்திற்குள்ளாகியது. எல்லாக் குழந்தைகளும் மேற்சொன்ன எல்லாப் படிநிலைகளையும் வெளிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்தித்தான் வளரும் என்பது கட்டாயமில்லை என வாதிட்டனர். மேலும் குழந்தைப் பருவத்தில் இடிப்பஸ் சிக்கல் என்பது பற்றியும் கேள்விகள் எழுந்தன. எனினும் மனிதனுள் பாலுணர்ச்சி என்பது திடீரெனப் பதினாறு வயதில் புற உலகிலிருந்து வந்து புகுந்து கொள்வதல்ல. அது பிறவியோடு வந்து பருவத்தில் மலர்கிறது என்ற ஃபிராய்டின் உண்மையை மறுக்க இயலவில்லை.

பாலூக்கச் சக்தி (Libido) : ஃபிராய்டிய அடிப்படையில் லிபிடோ என்பதைப் பாலூக்கச் சக்தி (Psycho Sexual Energy) எனலாம். தொடக்ககால உளப் பகுப்பாய்வுக் கோட்பாடு இந்தப் பாலுக்கச் சக்தியைப் பிரதானப்படுத்தியது. பின்னர் யூங் போன்றவர்களால் பாலூக்கச் சக்தி என்பது உளவியல் உண்மைகளுள் ஒன்று என்ற அளவில் மட்டுமே அதற்கு இடம் கொடுக்கப்பட்டது. இந்தப் பாலூக்கச் சக்தி வயோதிகப் பருவத்தில் மிகவும் குறை நிலையில் இருக்கும். தொடர்ந்த மன அழுக்கத்தின் விளைவாலும் இந்தப் பாலூக்கச் சக்தி பலம் குன்றி இருக்கும். இந்தப் பாலூக்கச் சக்தி பற்றிய கோட்பாடு இன்னும் துல்லியமாக உருவாக்கப்படவில்லை என்பது அறியத்தக்கது.

ஃபிராய்ட், சிக்மண்ட் (Freud, Sigmund 1856 - 1939) : உளவியல் துறையின் தந்தை சிக்மண்ட் ஃபிராய்ட் என்பது உலகறிந்த செய்தி. நரம்பியல் துறையில் மருத்துவராகத் தமது வாழ்வைத் தொடங்கிய சிக்மண்ட் ஃபிராய்ட் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவர். ஹிஸ்டீரியா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை இவர் தம் மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தினார். மனதிற்குள் நடக்கும் உணர்வுப் போராட்டங்களே நரம்பு நோய், கை கால் துவண்டுபோதல் போன்ற அறிகுறிகளின் வாயிலாக வெளிப்படுகின்றன என உணர்ந்தார் ஃபிராய்ட். மனநோய் மருத்துவர் என்ற அடிப்படையில் உளவியல் துறையின் நனவிலி மனப் பிரிவிற்குப் ஃபிராய்ட் வழங்கிய கொடை ஏராளம். மேலும் பால் உளவளர்ச்சிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படிநிலைகள், பிறழ் நடத்தைகள், கனவு, பயம், ஆளுமை போன்ற ஃபிராய்டின் கோட்பாடுகளும் உளவியல் துறைக்குக் கிடைத்த பெருங் கொடைகளாகும்.

ஃபிராய்ட் விவரித்த நனவிலி மனக் குறிக்கோள்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் போன்றன மனிதனின் அன்றாட வாழ்க்கையின் இன்றியமையா கூறுகள் என்பதில் ஐயமேது மில்லை. புலனுக்குப் புரிந்த நடத்தைக்கும் புலனுக்குப் புரியாத நனவிலிக்கும் பாலமானார் ஃபிராய்ட். ஃபிராய்டி சத்தின் இன்றியமையா இரு அடிப்படைகள் காதலும் போரும் (Sex and Aggression). இவற்றுள் பாலுணர்வு என்பது வாழ்வில் பிரதானமானது என்பது ஃபிராய்டின் நம்பிக்கை. மேற்சொன்ன இரு உணர்வுகளும் வாழ்க்கைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பதாகப் ஃபிராய்ட் உணர்ந்தார். கிரேக்கத் தொன்ம உலகம் காட்டும் ''ஈராஸ்'' (Eros) என்னும் காதற் கடவுள் கருத்தாக்கமும் இறப்புக் கடவுள் ''தானோட்டஸ்'' (Thanotos) கருத்தாக்கமும் காதல், போர் ஆகிய உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன எனப் ஃபிராய்ட் கருதினார். ஈராஸ், தானோட்டஸ் கருத்தாக்கத்திற்கு இணையான கருத்தைத் தமிழ்த் தொன்ம உலகிலும் காணமுடிகிறது. காமன் (Sex), சிவன் (Aggression) ஆகியோரும் ஃபிராய்ட் சொன்ன இச்சை உணர்ச்சி, போர் உணர்ச்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளாகவே வெளிப் பட்டுள்ளனர் எனலாம். இவ்விரு உணர்ச்சிகளும்/ஆற்றல் களும் சதா ஒன்றை ஒன்று மோதிக் கொள்வதே வாழ்க்கை யாகிறது. தொடக்கத்தில் ஈராஸ்/காமன் வல்லமையுடைய ஆற்றலாகத் தோன்றினாலும் இறுதியில் தானோட்டஸ்/ சிவன் ஆற்றலே வெற்றி பெறுகிறது.

ஈராஸ்/காமன், தானோட்டஸ்/சிவன் ஆகிய இக் கருத் தாக்கங்கள் புனைவுகளாகத் தோன்றினாலும் இக் கருத தாக்கத்தினுள்ளே மனிதனின் அடிப்படை உணர்வுகளான பாலியல், போரியல் பண்புகளும் அவற்றின் போராட்டமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்பட்டிருப்பதை மறுக்க முடியாது. சிவனின் காம தகனத்தை நினைவுகொள்ளும்போது மேற்சொன்ன கருத்தில் உள்ள உண்மை விளங்கும்.

ஃப்ராய்டின் சிந்தனைகள் முழுதுமாகத் தொகுக்கப் பட்டு இருபது தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவற்றுள் கனவு விளக்கம் (The Interpretation of Dreams—1900) அன்றாட வாழ்க்கையில் மனநோய் ஆராய்ச்சி (The Psycho-pathology of everyday life — 1901), தன்னுணர்ச்சியும் இச்சை உணர்ச்சியும் (The ego and the id—1923) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தகுந்தனவாகும்.

மன அமுக்கம் (Repression) : மன அமுக்கம் என்பது நனவு மனதின் தற்காப்பு நடவடிக்கைகளில் ஒன்று. பண் பாட்டு மனதிற்கு இசைவற்ற சிந்தனைகள், எண்ணங்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நனவு மனம் நனவிலி மன திற்குள் அமுக்கும். உளப் பகுப்பாய்விற்கு மறைக்கப்பட்ட ஆசைகள் முக்கிய ஆய்வுப் பொருளாகின்றன. உதாரணத் திற்குச் சொல்லவேண்டுமென்றால் குடும்பத்தினுள்ளோர்மீது கொள்ளும் பாலியல் ஆசை என்பது கூடா ஒழுக்கமாகும்போது இவ்வாசை மனதிற்குள்ளே மறைக்கப்படுகிறது. இவ்வாசை நிறைவேற்றத்திற்குப் பண்பாட்டுணர்ச்சி முற்றிலுமாக எதிர்க்கிறது. வேட்கை மனதிற்குள்ளே அமுக்கப்படுகிறது. இந்நிலையில் தன்னுணர்ச்சி முன்வந்து பண்பாட்டுணர்ச்சிக்கு உதவும். நனவு மனம் பண்பாட்டுக்கு ஒவ்வாத வேட்கையை நனவிலி மனதிற்குள் துரத்துகிறது. நனவிலி மனதிற்குள் துரத்தப்பட்ட ஆசை வெளியேற வழியின்றி நனவிலிக்குள் ளேயே அமுக்கப்படுகின்றது. அமுக்கப்பட்ட இவ்வாசை (நனவு மனம் ஓய்ந்து போகின்ற) உறக்க வேளைகளில் வெளிப்படும் கனவுகள், மற்றும் வாய்தவறி வெளிப்பட்டு விடுகின்ற சொற்கள், இயல்புக்கு ஒவ்வாத நடத்தைகள் போன்றவற்றின் வழி வெளிப்படும். நனவு மனதின் தற்காப்பு நடவடிக்கைகளில் தலைமையானது இந்த மன அமுக்கம் என

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஃபிராய்டிய அடிப்படையில் சொல்லலாம். மன அமுக்கமே நனவிலி மன உலகை உருவாக்குகிறது. நனவிலி மனம் என்பது நீருக்குள் இருக்கும் பனிமலையைப் போன்றது என்பது ஃபிராய்டின் கூற்று. கண்ணுக்குத் தெரியும் நீர்ப் பரப்பு நனவு மனம் என்றும் நீர்ப்பரப்பிற்குக் கீழே இருக்கும் பனிப்பாறை நனவிலி மனம் என்றும் கூறி நனவிலி மனதை நீருக்குள் இருக்கும் பனிமலையொடு ஒப்புமைப்படுத்தும் ஃபிராய்டின் கூற்று மன அமுக்கத்தைப்பற்றி விரிவாக விளங்கிக் கொள்வதற்கு உதவுகிறது.

மனம் (Mind) : மனம் என்பது பல்பெருளில் கையாளப் படுகின்ற துல்லியமாக வரையறை பெறாத ஒரு பொதுச் சொல். இது மூன்று பிரதான நிலைகளில் பார்க்கப் பெறு கிறது. 1. தத்துவவாத அடிப்படை, 2. எண்ண அடிப்படை, 3. மூளை, நரம்பு மண்டல அடிப்படை. இந்த மூன்று நிலை களிலும் மனம் என்பது பெரிதும்சர்ச்சைக்குரிய வெவ்வேறான பொருளில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நடத்தையை அறிவதில் மனம் தெரிகிறது என்பது உளப்பகுப்பாய்வு வாதம். ஒருவனுடைய நடத்தையை உற்றுநோக்கும் போது மனதைக் கண்டறியலாம் என்பதும், நடத்தையை விவரிப்பதின் மூலம் மனதின் இயல்புகளை விளங்கிக் கொள்ள லாம் என்பதும் ஃபிராய்டியம்.

மனச்சிக்கல் (Complex): உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு மனச்சிக்கல்களின் வகைகளாக இடிப்பஸ் சிக்கல், எலக்ரா சிக்கல், காயடிப்பு பயம் போன்றவற்றை விளக்குகின்றது.

இடிப்பஸ் சிக்கல் (Oedipus Complex) உளப்பகுப் பாய்வுக் கோட்பாடுகளில் ஒன்று இடிப்பஸ் சிக்கல் என்பது. இது பெற்றோர்மீது பிள்ளை கொள்ளும் காமத்தைக் குறிக்கும். தகப்பன்மீது மகளோ தாய்மீது மகனோ கொள்ளும் காமமே இடிப்பஸ் காமம் எனப்படுகிறது. இத் தகைய மனச் சிக்கல்கள் ஆசாரம் மிகுந்த குடும்பங்களில் உள்ள பிள்ளைகளிடையே பெரிதும் தோன்றுகிறது என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார் ஃபிராய்ட். தாய்மீது மகன் கொள்ளும் காமம் வெளிப்பட இயலா பண்பாட்டுச் சூழலில் மனதிற்குள்ளே அமுக்கப்படுவதால் குற்ற உணர்வும் (Guilt), அச்ச உணர்வும் மனதை அலைக்கழிக்கிறது. அமுக்கப்பட்ட இடிப்பஸ் காமம் மாறுவேடம் புனைந்து நனவு மனதின் வழியே வெளிப்படும்.

ஃ பிராய்ட் இடிப்பஸ் காம்ப்ளெக்ஸ் எனும் சொல்லைக் கிரேக்கத் துன்பியலான இடிப்பஸ் ரெக்ஸ் (இடிப்பஸ் மன்னன்) என்பதிலிருந்து முதன் முதலாக எடுத்தாண்டார். இக்கதையில் இடிப்பஸ் என்பவன் தன் தந்தையைக் கொன்று தாயை மணக்கிறான். மேலைச் சமூகப் பண்பாட்டில் இம் மனச்சிக்கல் மிகுதி என ஃபிராய்ட் கூறுகிறார். ஃபிராய்டின் இடிப்பஸ் சிக்கல் கோட்பாடு பிற்கால உளவியலாளர்களால் பெரிதும் கண்டனத்திற்குள்ளானது. பின் நாட்களில் ஷேக்ஸ்பியரின் ஹேம்லெட் (Hamlet) நாடகம் ஃபிராய்ட், ஜோன்ஸ் ஆகியோரால் இடிப்பஸ் ஆய்விற்கு உட்படுத்தப் பட்டது

எலக்ட்ரா சிக்கல் (Electra Complex) : இது தந்தைமீது மகள் கொள்ளும் காம நாட்டத்தைக் குறிக்கிறது. இச் சிக்கலை விளக்குவதற்கு எலக்ட்ரா தொன்மத்தை ஃபிராய்ட் எடுத்தாள்கிறார். பெண் தந்தைமீது கொள்ளும் இக்காமமும் இடிப்பஸ்காம அடிப்படையையே கொண்டது என்பதால் பின் நாட்களில் இச்சிக்கலும் இடிப்பஸ் சிக்கல் என்றே கருதப்பட்டது.

காயடிப்புப்பயம் (Castration Complex) : பாலுறுப்பு இழப்புபற்றிய பயமே காயடிப்புப் பயமாகும் எனத் தொடக்க கால உளவியல் கோட்பாட்டடிப்படையில் சொல்லலாம். ஆணைப் பொருத்தவரையில் இப் பயம் தனது பாலுறுப்பு எந்தக் கட்டத்திலும் அழிக்கப்படலாம் எனும் பயமாகவும் பெண்ணைப் பொருத்த வரையில் தன் பாலுறுப்பைத்தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னமே இழந்து விட்டோம் எனும் ஏக்கமாகவும் வெளிப்படுகிறது. காயடிப்புபயம் என்பது பெரிதும் ஆணைச் சார்த்தியே பேசப்பட்டது. இப்பயம் சார்ந்தவனது ஆண்மையின் மீது அல்லது அவனது பாலியல் திறன்மீது தீராத அவநம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. (மேலும் விவரங்கட்கு இந்நூலில் இடம் பெற்றுள்ள 'நெற்றிக்கண் படிமம்' எனும் கட்டுரையைக் காண்க).

மனோபயம் (Anxiety) : உணர்வுகள் பெரிதும் தாக்கப்பட்ட நிலையில் உருவாவது மனோபயம். இந்நிலையில் பயத்திற்குள்ளான மனிதன் உணர்வுகளால் எப்போதும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறான். இந்தப் பயத்திற்கான மூலகாரணம் பெரும்பாலும் அற்பமானதாகவோ அறிவுக்குப் பொருந்தாததாகவோதான் இருக்கும். இத்தகைய மனோபயம் ஒருவகை மனநோய் அறிகுறி.

கந்த புராணத்தில் காமன் சிவனின் நெற்றிக் கண் மீது கொண்ட பயம் மனோ பயத்திற்கு நல்லதொரு சான்று. இதோபோல ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலில் வரும் கங்கா இந்தப்புற உலகை வெறுத்து நான்கு சுவர்களுக்குள் தன்னை மறைத்துக் கொண்டு வாழ்வதும் மனோபயத்தின் வெளிப்பாடே. மனோபயங்கள் அமுக்கப்பட்ட பாலுணர்வினை அடிப்படையாகக் கொண்டவைதான் என்பது ஃபிராய்டியம். ஃபிராய்டின் புகழ்பெற்ற மனநோயாளி 'சிறுவன் ஹென்ஸ்' (Litlte Hens) கொண்ட 'குதிரை பயம்' அமுக்கப்பட்ட பாலுணர்வே, என்பதை ஃபிராய்ட் நிறுவுகிறார். மேற்கூறப்பட்ட காமன் கங்கா, லிட்டில் ஹென்ஸ் ஆகியோரின் கதைகளைப் படிக்கும் போது இவர்கள் கொண்ட பயம் அமுக்கப்பட்ட பாலுணர்வின் வெளிப்பாடாகவே தெரிகிறது. மனோபயம் அதைச் சார்ந்தவர்களின் மனப் போரிலிருந்து விளைகிறது. மனோபயத்திற்குக் காரணம் பிறரல்ல, தானேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூலப்படிவங்கள் (Archetyes) ; மூலப்படிவம் எனும் சொல்லாக்கமும், கருத்தாக்கமும் யூங்கால் உருவாக்கப் பட்டது. மூலப்படிவம் என்பது ஒவ்வொரு மனிதனோடும் பிறவியோடு வருகின்ற பிறவி எண்ணம் (Primordial Image). இந்த மூலப்படிவத்தைக் கூட்டு நனவிலி மன உணர்வுகள் எனலாம். இது அடிப்படையிலேயே தனி மனித நனவிலி மனதிலிருந்து வேறுபட்டது.

யூங் கூட்டு நனவிலி மனம் ஏராளமான மூலப் படிவங் களின் கொள்கலம் என்கிறார். தலைவன் (Hero), உலக மாதா (The great Earth Mother), வி-நாயகன் (Wise old Man), கயமை (The Evil one), மனப்பெண் (The anima-the female personality), மன ஆண் (The animus–The male Personality), போன்றவை மூலப்படிவங்கள் எனச் சொல்லப் படுகின்றன. இந்த மூலப்படிவங்கள் தொன்மம், பழங் கதைகள், சமயம், கனவு, தேவதைக் கதைகள் இன்ன பிற மனிதனின் கதையாக்கங்கள் போன்றவற்றில் வெளிப்படும். இந்த மூலப்படிவங்கள் காலந்தோறும் வெவ்வேறு பெயரில் வெவ்வேறு ஆக்கங்களில் வெளிவந்து கொண்டே இருக்கும். உலகளாவிய மனிதவர்க்கத்தை இணைத்துப் புரிந்துகொள்ள இந்த மூலப்படிவ வெளிப்பாடுகள் உதவுகின்றன. விளக்கத் திற்குச் சொல்லவேண்டுமென்றால் வி-நாயக மூலப் படிவம் கிரேக்கத் தொன்மத்தில் இடிப்பஸ் கதையாகவும், தமிழ்த் தொன்மத்தில் வி நாயகன் கதையாகவும் வெளிப் பட்டுள்ளமையைச் சுட்டலாம் (இந்நூலில் இடம் பெற்றுள்ள 'வி-நாயக மூலப்படிவம்' எனும் கட்டுரையைக் காண்க).

யூங். சி. ஜி. (C. G. yung) : ஃபிராய்டின் மாணவர் களுள் முதலாமவர் யூங். இவர் தொடக்கத்தில் ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வு முறையால் பெரிதும் கவரப்பட்டு அம்முறை யிலேயே தம் ஆய்வைத் தொடங்கினார். பின் நாட்களில், இவர் ஃபிராய்டியக் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டு பகுப்பு உளவியல் (Analytical Psychology) என்ற அடிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படையில் உளவியல் கோட்பாடுகளை வழங்கினார். குழந்தைப் பருவ பாலியல் படிநிலை வளர்ச்சிக்கும், வாலிபப் பருவ வெளிப்பாட்டுக்கும் இடையே உறவு உண்டு எனும் ஃபிராய்டின் கோட்பாட்டை யூங் மறுத்தார். மேலும் மனிதனின் பாலியல், போரியல் அடிப்படைகள் மீதான ஃபிராய்டின் கருத்திலிருந்தும் யூங் வேறுபட்டார். இவ்விரு சிந்தனையாளர்களும் நனவிலியைப் பற்றிய இருவேறுபட்ட (நனவிலி, கூட்டு நனவிலி) கோட்பாடுகளை வழங்கி யுள்ளனர்.

யூங்கும் குழந்தையின் கனவுப் பருவத்திலிருந்தே தனது ஆய்வைத் தொடங்குகிறார். கனவுகளும் சமய உலகப் படிமங்கள்/குறியீடுகளும் உறவுடையன என்றறிந்தார் யூங். யூங் தனது கூட்டு நனவிலி கண்டுபிடிப்போடு சமய உலகைப் பெரிதும் தொடர்பு படுத்தினார். □

"Presented free of cost with compliments from the Central Institute of Indian Languages (Government of India) Mysore 570006."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயரடைவு

அட்லா ஆல்பிரட் 104
அப்பர் 102
அன்னா ஃபிராய்ட்110
ஆப்டர் டி.இ. 70
ஆலன்போ எட்கர் 22
இந்திரா பார்த்தசாரதி 14
இராமநாதன். ஆறு 80, 83, 86, 88, 89, 91
கம்பர் 31, 34
கிரிஸ் ஏர்னெஸ்ட் 47
கிளாஸ் ஜே. பீட்டர் 61, 78
குலசேகராழ்வார் 13,19,35, 39, 41-46, 110
கோரம் ஜே பிரேங்க் 61, 78
சகூர், பெர்டிண்ட் 20, 21
டன்டீஸ் ஆலன் 64, 66, 76, 77, 78
டிரில்லிங் லைனல் 12
டேவிஸ் இராபர்ட்கான் 22
தமிழவன் 47
தாம்ஸன் ஆர்னி 75
திருநாகலிங்கம் 76
தொல்காப்பியர் 15, 20, 21
நெயில் 49
பாரதி 14, 48
பாரதிதாசன் 107, 108
பிளேட்டோ 25
பிராய்ட் 9-12, 24, 35-38, 43, 44, 47-50,52, 54, 63, 65, 68, 73, 75, 78-80, 84, 85, 88, 91, 102-120
புரோஸ் ஸ்டீபன் 68
மு.வ. 14
யூங் சி. ஜி 15, 16, 24-27, 30, 34, 48-50, 58, 59-62, 104, 105, 108, 119, 120
ரவிச்சந்திரன் 20
ரெயிட்லர் 66
ரேங்க் ஆட்டோ 104
லக்கான் ஜேக்கயூஸ் 16-18 20, 21
லயர்னோடா டாவின்ஸி 27
லெஸ்ஸர், ஓ சைமன் 47
ஜானகிராமன், தி 14
ஜெயகாந்தன் 14, 30, 34, 48, 49, 110, 111, 118
ஜெயராஜ்டேனியல் 74
ஜெனட் ஃபியாரி 107
ஜோன்ஸ் ஏர்னெஸ்ட் 104, 117
ஸ்டா ஃபோர்டு டேவிட் 12, 84, 85
ஸ்டீவன்ஸ் 27
ஷேக்ஸ்பியர் 31, 117
ஹாலெண்டன் நார்மன் 47
ஹோமர் 76

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடைவு

அமுக்கப்பட்ட உணர்வு 38, 41, 47, 118
அமுக்கம் 37, 109
அமைப்பு உளவியல் 104
அருள்தாய் மூலப்படிவம் 27
அனிமா 27
அனிமஸ் 27
ஆசனவாய் நிலை 111,112
ஆண்குறி ஏக்கம் 75
ஆண்குறிக் குறியீடு 63. 65, 67, 73, 77, 84, 85
ஆண்குறியீடு 13, 19, 44, 84
ஆண்மூலப் படிவம் 27, 28
இச்சை உணர்ச்சி 14, 16, 35-37. 55-57 63, 79, 102, 104, 109-112, 114
இட்உளவியல் திறனாய்வு 36, 39
இடப்பெயர்வு 10, 102
இடிப்பஸ் காமம் 116, 117
இடிப்பஸ் சிக்கல் 89, 104. 113, 116, 117
இடிப்பஸ் நிலை 112
இரண்டாம் வகைச் செயற்பாடு 39
இரட்டைத்தாய் மூலப்படிவம் 27
உடலுறவுக் குறியீடு 13, 44, 86
உடலுறவு விலக்கு 37, 56, 79
உணர்வு உறை நிலை 111; 112
உயர்வழிப்பாடு 35, 47, 55, 102
உயர்வழிப்படுத்தல் 14, 31, 39, 103
உலக மூலப்படிவம் 49
உளப்பகுப்புத் திறனாய்வு 12, 13, 16, 18, 38, 39, 80
உளப்பகுப்பாய்வு 9-11, 18, 22, 36, 46. 67, 103. 104, 109. 115, 116, 119
உளவியற்பள்ளி 104
உறைவு 10, 104, 105
உறைவுப் படிமங்கள் 105
எலக்ட்ரா சிக்கல் 88, 116, 117
எலக்ட்ரா நிலை 112
கடவுள் மூலப்படிவம் 26
கண்பயம் 70, 71
கலவிப் படிமம் 44, 103
கற்பரசி மூலப்படிவம் 30, 31-34

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கனவு 22, 38, 43, 44, 63, 102, 105, 114, 115, 119, 120
கனவுத் தொழில் 43
கனவுப்பகுப்பாய்வுமுறை 11
கனவுப் படிமங்கள் 44
கனவு விளக்கம் 9, 10, 115
காயடிப்புப் பயம் 69, 71, 72, 116-118
காயடிப்பு மிரட்டல் 69
குழந்தைக் காமம் 69
குறியீட்டாக்கம் 10, 106
குறியீட்டுக் கனவு 105
குறியீடு 10, 54, 58, 63, 80, 84, 85, 105, 106, 120
குறை நனவு மனம் 79, 106 108
கூட்டு நனவிலி மனம் 15, 23, 24—26, 30, 61, 108. 119
கூடா ஒழுக்கம் 79, 115
சமநிலையாக்கம் 39
சாவு விழைவு உணர்ச்சி 4, 16, 104, 108, 109
தடை இயைபு முறை 9, 10
தடைஇல் இயைபு முறை 9, 10, 109
தற்காப்பு நடவடிக்கை 91, 106, 109, 110, 115
தன்மோகம் 110, 112
தன்னுணர்ச்சி 37, 60, 79, 109, 115
தனிமனித நனவிலி மனம் 48, 61, 119
தாய் மூலப் படிவம் 27
தாய்மோகம் 51-53, 56
தொடக்கச் செயற்பாடு 38
நடத்தை உளவியல் 104
நனவிலி 16, 17, 68, 114, 120
நனவிலி நிலை 38, 42, 45, 48, 49, 52, 54, 70, 72
நனவிலி மனம் 10-12, 14, 23, 24-26, 30, 35-38, 56, 58, 61, 63, 79, 80, 106-109, 115, 116
நனவிலி மொழி 17
நனவு நிலை 38, 43, 48, 70, 72, 86
நனவு மனம் 10-12, 14,24, 25, 35, 37, 44, 56,58,74, 79, 106, 110, 115, 116
நெற்றிக்கண் 64, 65, 66-70, 76
நெற்றிக்கண் படிமம் 63,64, 67, 118
நெற்றிக்கண் பயம் 69, 71, 72
பகற்கனவு 11
பகுப்பு உளவியல் 119
படிமம் 11, 19, 20, 37, 38, 41-46, 103, 105, 120
படைப்பாக்க உளவியல் 11
படைப்புப் படிமங்கள் 44
படைப்புத் தொழில் 44

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பண்பாட்டுணர்ச்சி 37, 56, 57, 79, 104, 111, 112, 115
பண்பாட்டு நனவிலி 54
பால்உள வளர்ச்சிப்படிநிலை 111, 112, 120
பாலுணர்ச்சி 24, 35, 39, 42, 45, 46, 54, 68, 112-114
பாலுணர்வு நிலை 111, 112
பாலுறுப்பு நிலை 111, 112
பாலுறுப்புப் பயம் 69, 70
பாலூறுக்கச் சக்தி 36, 39, 40, 54, 112, 113
பிராய்டியக் குறியீடு 13, 19, 20
பிறழ் நடத்தை 114
பெண்குறிக் குறியீடு 63, 65 73, 76, 85
பெண் குறியீடு 13, 19, 44
பொது மனித நனவிலி மனம் 16, 49
போர் உணர்ச்சி 112
மடைமாற்றம் 38, 39, 41, 46, 47, 55, 69, 70
மறைபொருள் 104
மனஅழுக்கம் 17, 103, 108 113, 115-116
மனவிறைப்பு 111
மனோபயம் 70, 111, 118
மாந்த உளவியல் 104
மாற்றீட்டுக் கோட்பாடு 17
மாற்றீட்டு விளக்க முறை 9, 10
மிகைத்தன்னுணர்ச்சி 37
மீன் படிமம் 12, 13, 19, 84
முழு அமைப்பு உளவியல் 104
மூலப்படிவங்கள் 25-27, 30. 33, 49, 61, 108, 119
வாய்நிலை 111, 112
வாழ்வு விழைவு உணர்ச்சி 16, 108
வி-நாயக மூலப்படிவம் 30, 48, 50, 58-62, 108, 111, 119
விலங்குப்படிமம் 85
வீரத்தாய் மூலப்படிவம் 27
வெளிப்படைக் கனவு 105
ஹிஸ்டீரியா 113
ஹிப்னாஸிஸ் 107, 109

पुस्तकालय … गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
100829

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

	Signature	Date
Access on		17.7.73
Class on		
Cat on		
Tag etc.		
Filing		
E.A.R.		
Any other		
Checked		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்

அரங்க. நலங்கிள்ளி

உளப்பகுப்பாய்வு இலக்கியம், சமூகவியல், மானுடவியல், மொழியியல் போன்ற துறைகளோடு நெருங்கிய உறவு கொண்டது என்பது தொடர்ந்து நிறுவப்பட்டு வருகின்றது. இத்தகு சூழலில் தமிழில் உளப் பகுப்பாய்வை இலக்கியத்தோடு உறவுபடுத்திக் காட்ட இந்நூல் முனைந்துள்ளது. தமிழில் இத் துறையில் வரும் முதல் நூல் இதுவே. இந்நூல் படைப்பாக்கத்தினுள் மறைந்திருக்கும் உண்மையை! உணர்வுகளைத் தேட முயன்றுள்ளது.

சமயம், கலாச்சாரம், கலை இலக்கியம், பாலியல் இவற்றின் மீதான விருப்பு வெறுப்புகளை நீக்கிவிட்டு இந்நூலைப் படிக்கும்போதுதான் படைப்பாக்கத்தின் உளவியல் பரிமாணத்தைப் புரிந்துகொள்ள முடியும். இலக்கியம் பல பரிமாணங்களைக் கொண்டது என்பதைத்தான் காலந்தோறும் எழுகின்ற விமர்சனங்கள் உணர்த்துகின்றன. அவ்வகையில் இந் நூலும் இலக்கியத்திற்கு உளவியல்சார் விமர்சனத்தை வழங்குகிறது.

அரங்க. நலங்கிள்ளி புதுவைப் பல்கலைக் கழக தமிழ்த் துறையின் விரிவுரையாளர். இவரது விருப்பப் பாடங்கள் உளவியல், பெண்ணியல், ஒப்பிலக்கியம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar